# பெற்றோரியலில் சிற்றலைகள்



வேதா இலங்காதிலகம்

# பெற்றோரியலில் சிற்றலைகள்

வேதா இலங்காதிலகம்

செல்லமுத்து வெளியீட்டகம்
வள்ளுவர்புரம்

# நூல் விபரம்


நூலின் பெயர் : பெற்றோரியலில் சிற்றலைகள்

நூலின் வகை : வாழ்வியல் தொகுப்பு

நூலாசிரியர் : வேதா இலங்காதிலகம்

வெளியீடு : செல்லமுத்து வெளியீட்டகம்
077 5892351
sellamuththupublication@gmail.com

பக்கங்கள் : 180

பிரதிகள் : 400



பதிப்புரிமை : ஆசிரியருக்கே



அட்டைப்படம்,
பக்க வடிவமைப்பு: எஸ்.விஜய்

முதற்பதிப்பு : செப்டெம்பர், 2018



தொடர்புகளுக்கு : தொலைபேசி: 0045 86106198
முகநூல் : Vetha Langathilakam
ஈ-மெயில் : kovaikkavi@gmail.com
இணையம் : வேதாவின் வலை
வேதாவின் வலை.2



அச்சகம் : விஜய் அச்சுப் பதிப்பகம்,
172, மில் வீதி, வவுனியா.
024 2225799 / 077 9009491

: 978-955-4096-20-2

விலை : ரூ.250/-

# அணிந்துரை



தமிழ் இலக்கிய பரப்பு என்பது கவிதை என்னும் நதியினூடாகவே தனது வரலாற்றுப்பாதையை வளம்படுத்தி வந்துள்ளது. உலகில் சுமார் ஏழாயிரத்து இருநூறு மொழிகள் உள்ளன. அவற்றுள் எட்டு மொழிகள் செம்மொழி என்ற கிரீடத்தை சூடிக் கொண்டு கௌரவம் பெற்றுள்ளன. அவற்றில் தமிழ் மொழியும் ஒன்று என்பது எமக்குப் பெருமை.

ஒரு மொழி செம்மொழியாவதற்கு பதினொரு தகுதிகள் கொண்டிருக்க வேண்டும். அவற்றுள் இலக்கிய ஆவணங்களும் ஒன்றாக கருதப்படுகின்றது. தொல்காப்பியம் முதல் தமிழ்மொழியின் இலக்கியங்கள் ஆவணப்படுத்தப்பட்டிருப்பதே பதினொரு தகுதிகளுள் மிகச் சிறப்பானதாகும்.

இலங்கைத் தமிழர் மத்தியில் ஆவணப்படுத்தல் என்பது மிகப்பெரிய குறைபாடாகவே காணப்படுகின்றது. தமிழர்களின் இலக்கிய ஆற்றல்கள் மட்டுமின்றி வரலாறுகூட சரியாகப் பதிவு செய்யப்படாத காரணத்தினால்தான் கோழி முதல் வந்ததா முட்டை முதல் வந்ததா என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.

ஆனால் இன்று புலம்பெயர் தேசத்தில் அதற்கான பணிகள் தாராளமாக முன்னெடுக்கப்படுகின்றன என்பது மிகவும் ஆரோக்கியமான, மகிழ்ச்சிக்குரிய விடையமாகும்.

இலங்கையில் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் நூல்கள் அச்சேற்றுதல் என்பது தொடங்கப்பட்டு வீச்சாக ஆவணப்படுத்தல் இடம்பெற்றது. அதில் ஆறுமுகநாவலருக்கு பெரும்பங்கு உண்டு.

வானசாஸ்த்திரம், சித்தவைத்தியம் போன்ற துறைகளும், தமிழ், இலக்கியம், இலக்கணம் சார்ந்த துறைகளும் தொல்காப்பியம் தொடங்கி கவிதைகளாகவே நமக்கு முன்னோடிகளால் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரான அச்சுப்பதிப்பின் பரிணாமம் தமிழில் சிறுகதை,

நாவல் மட்டுமல்லாது கட்டுரை வடிவங்களையும், பத்தி எழுத்துக்களையும் கூட வளர்ச்சிபெற வைத்தது. கட்டுரை வடிவங்களில் பலபகுதிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் சுயஅனுபவங்களை நூலுருவாக்கி ஆவணப்படுத்தல் என்பதும் ஒரு சிறப்புப் பகுதியாக கணிக்கப்படுகின்றது.

கோப்பாய் நகரை பிறப்பிடமாகக் கொண்டு டென்மார்க் ஒகுஸ் நகரத்தில் வாழ்ந்துவரும் வேதா இலங்காதிலகம் "பெற்றோரிய லில் சிற்றலைகள்" என்ற தலைப்பில் தனது பாலர் முன்பாடசாலை அனுபவங்களையும், தனது சிந்தனைகளையும் தொகுத்து நூல் வடிவில் எழுத்து அழகியலுடன் கொண்டு வந்துள்ளார்.

நான் ஜேர்மனியில் வசித்த காலத்தில் ஆசிரியரை அறிவேனா யினும் இலங்கையில் வவுனியாவில் அவரின் நூலுக்கு அணிந்துரை எழுதுவேன் என்று நினைத்துக்கூடப் பார்க்க வில்லை.

நாம் கல்வி கற்கின்ற காலங்களில் மனிதனுக்கு ஆறு அறிவு என்று பாடமாக்கி ஒப்புவித்துள்ளோம். ஆனால் இன்று மனித னுக்கு பத்து அறிவு என்று அறிவியல் உலகம் வியந்து கூறுகின்றது.

ஆறாம் அறிவு பகுத்தறிவாக ஏழாம் அறிவு கல்வி அறிவாகிறது. எட்டாம் அறிவு கேள்வியறிவாக ஒன்பதாம் அறிவு அனுபவ அறிவு என்றும் பத்தாம் அறிவு இவற்றின் வழி கிடைக்கின்ற ஞானம் என்றும் அறிவியல் கூறுகின்றது.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கும் மனிதன் அறுபது வயதின்பின்னர் தனது அனுபவங்களை சமூகத்துடன் பகிர்ந்து கொள்கிறான். அந்தவகையில் வேதா இலங்காதிலகம் தனது அனுபவங்களை சமூகத்தோடு பகிர்ந்து கொண்டு தனது வரலாற்றுக் கடமையை திருப்தியுடன் பதிவு செய்துள்ளார்.

ஈழத்து இலக்கியப்பரப்பில் மிகவும் பேசப்பட்ட எழுத்தாளர்களுள் எஸ்.பொ. என்றழைக்கப்படுகின்ற எஸ்.பொன்னுத்துரை அவர்களும் ஒருவர். ஒருதடவை தமிழ்நாட்டில் இலக்கிய ஆளுமைகள் நடாத்திய கருத்தரங்கு ஒன்றில் எஸ்.பொ. அவர்கள் பேசும்போது

"நீங்கள் எவ்வளவுதான் தமிழ்நாட்டு இலக்கியங்களை போற்றிப் புகழ்ந்தாலும் புலம்பெயர் தமிழர்கள் பதிவுசெய்யும் இலக்கியங்கள் தடம்பதிக்கும் அதற்காகக் காத்திருங்கள்" என்று மிகத்துணிச்சலுடன் கூறினார்.

அவர் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இன்று புலம்பெயர் தேசத்து இலக்கியங்கள் பேசப்படுகின்றன. அந்தவகையில் வேதா இலங்காதிலகத்தின் இந்நூலும் பேசப்படும்.

தெளிந்த நீரோடை போன்ற இவரின் எழுத்துநடை நிச்சயம் வாசகர்களைக் கவரும். தான் நினைத்ததை அதுவும் ஐதார்த்த உண்மைகளை பயமின்றி கூறியிருப்பது அவருக்கு கிடைத்துள்ள வெற்றியாகப் பார்க்க முடிகின்றது. அவரது அனுபவப் பகிர்வுகள் இன்றைய சந்ததிக்கு சிறந்த பொக்கிசமாகும்.

கவிதைகளும், ஒரு பக்கக் கட்டுரைகளுமாக நூல் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மணல் விளையாட்டு என்ற கவிதையில் தொடங்கி வித்தியாச விசித்திர அழைப்பிதழ் என்ற இரசனைக்குரிய அனுபவப் பகிர்வுடன் நூலை முடித்திருக்கிறார். வேதாவின் ஆத்திசூடி என்ற பகுதியை பின் இணைப்பாக சேர்த்திருப்பது நூலுக்கு வலுச்சேர்த்திருக்கிறது.

ஔவையாரின் ஆத்திசூடிக்குப் பின்னர் மகாகவி பாரதியின் புதிய ஆத்திசூடி எமக்கு கிடைத்தது. இப்போது வேதாவின் ஆத்திசூடி புதியவரவாகக் கிடைத்திருப்பது தமிழ் கற்கும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது பெரியவர்களும் இரசித்துப்படிக்கவும் அதன்வழி ஒழுகவும் வகைசெய்திருப்பது சிறப்பு.

"சமுதாய முக்கிய தூண்களாக வரும் நாளைய தலைமுறையை நன்கு கட்டி அமைத்தலாலேயே நந்தவன உலகைக் காணலாம்." என்று தனது "என்னுரை" யில் குறிப்பிட்டதிலிருந்தே ஆசிரியர் தன்னை இனம்காட்டிக் கொள்கிறார்.

"மணலில் உருண்டு புரளல்
மழலைக்கு மலைப்பின்றி மகத்தான
தோலில் நோயெதிர்ப்புச் சக்திக்கு
தோழனாகித் தோள் கொடுக்கும்"

என்று ஒரு பேருண்மையை நூலின் ஆரம்பத்திலுள்ள "மணல் விளையாட்டு" என்ற கவிதையில் அள்ளித் தெளித்திருப்பது சிறப்பு.

ஆணும் பெண்ணும் சேர்வதே கூடாது என்று கூறி சேரும் ஆவலைப் பெற்றோர் மறைமுகமாகத் தூண்டுகின்றனரோ என்று தோன்றுகின்றது" என "பிள்ளைகள் காயப்படுகிறார்கள்" என்ற எண்ணப்பதிவில் தனது கருத்தை ஆழமாகப் பதிவு செய்திருக்கிறார்.

"உம் என்றிராது நன்றாகச் சிரியுங்கள். பெற்றோரை மாதிரியாக வைத்தே பிள்ளைகள் வளருகிறார்கள். ஆகவே உங்கள் சிரிப்பு வீணாகாது" என்று "உங்கள் சிரிப்பு முக்கியமானது" என்ற தலைப்பிலான எண்ணப்பதிவில் சிரிப்பின் முக்கியத்துவம் பற்றி அழகாக எடுத்துரைத்திருக்கிறார்.

கைத்தொலைபேசியைப் பூட்டுங்கள், பாலுக்குப் பதிலாக கோலா, இரட்டைக் கட்டிலில், ராகுல் நின்றுகொண்டு சிறுநீர் கழிப்ப தில்லை, தமிழ் செழிக்க வேண்டும் என்று பல தலைப்புக்கள் சிறப்பாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. கையிலெடுத்தால் கீழே வைக்க விடாது வாசிக்கத் தூண்டுவது நூலாசிரியரின் எழுத் தாற்றலாகும்.

"பிள்ளைகள் மொத்த விளையாட்டுப் பொருட்களையும் வாயால் சுவைப்பார்கள். அன்புடன் முத்தமிடுவார்கள். சொத்தான அவர்களின் ஆசைப் பொருட்களை அடிக்கடி சுத்தம் செய்யும் பழக்கம் உங்களுக்கு இருக்கிறதா?" என்ற கேள்வியை "சுத்தமாக மொத்தமும் புதிதாகலாம்" என்ற தனது சிந்தனையில் கேள்வியாக எழுப்பியிருக்கிறார். இதுவரை நம்மவர் யாரும் சிந்தித்துப் பார்க்காத புதியபார்வையை தனது அனுபவத் தினூடாக பதிவு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

நாங்கள் புத்தகங்கள் செய்தால் வாங்கிப் பார்த்துவிட்டுத் திருப்பித் தரும் எம்மவர்களும் உள்ளனர்." என தனது 3 புத்தகங்கள் செய்து பெற்ற அனுபவங்கள் என்று "இப்படித்தான் வாசிப்பு தொடங்கப்படுகின்றது" என்ற தலைப்பிலான அனுபவக்குறிப்பில் நெற்றிப் பொட்டில் ஆணி அறைந்திருக்கிறார். நிச்சயமாக

நொந்துபட்ட எழுத்தாளர்கள் இதனை இரசிப்பார்கள்.

"அரை நேர வேலை அம்மா! என் அம்மா!" என்ற கவிதையில்

**"தொலைக்காட்சி கணனி தோழியாக**

**கலைக்கிறேனே ஓய்வுப் பொழுதை**

**நானும் பேசி மனம் கலக்க**

**நல்ல தோழியாய் ஏன் நீயில்லை?"**

என்ற ஜதார்த்த வரிகள் நெஞ்சை வருடிச் செல்கின்றன. வாழ்த்துகள்.

இலண்டனிலிருக்கும் கவிஞர்.அனாதியனின் இரண்டு கவிதை நூல்கள் அண்மையில் மல்லாவியில் வெளியீட்டு விழா நடைபெற்றது. அவ்விழாவில் சிறப்புரையாற்றிய பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் அவர்கள் "புலம்பெயர் தேசத்திலிருந்து ஈழத்தைப் பற்றி எழுதாதீர்கள். உங்கள் நாட்டு அனுபவங்களை எழுதுங்கள் அவைதான் எம்மை இரசிக்கத் தூண்டும்" என்றார்.

அது வேதா இலங்கா திலகத்தின் இந்நூலினூடாக அழகாக சிறப்பாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. இந்நூலின் ஒவ்வொரு பக்கமும் இரசனைக்கும் சிந்தனைக்கும் உரியவை. மேலும் பல அனுபவப் பகிர்வுகளை இலக்கியப் பரப்பில் ஆசிரியர் ஆவணப்படுத்த வேண்டும் என்ற ஆவலுடன் வாழ்த்துகள் கூறி விடைபெறுகிறேன்.

**தமிழ்மணி.மேழிக்குமரன்**
சின்னப்புதுக்குளம்,
வவுனியா.

## நுழைந்ததும் நுகர்ந்ததும் விதந்துரைத்ததும்



வேதாவின் வலை பற்றி எழுத நான் ஒன்றும் மேதாவி அல்ல. ஆயினும் வேதாவைப் புகழ்ந்துரைக்க நான் ஒன்றும் மேதாவியாய் இருக்கத் தேவையில்லை. இவருடைய தளத்தை வாசித்தால், இவரை அறியமுடியும் என்பது உண்மையே. வலை முழுவதும் சுவை கொட்டிக்கிடக்கிறது. அதில் அகப்பட்டார் முழுவதும் அருந்தாமல் மீண்டுவர முடியாது. முழுவதுமாகச் சுவைத்தேன். முழுவதுமாகத் தெளிவுற்றேன். அதில் ஒரு சிறுபகுதி பிள்ளை பெற்றோரியல் என்னும் பெயருடன் என்னால் உள்வாங் கப்பட்டது. அவை இந்நூலில் அகப்பட்டுள்ளது. ஒரு தாயாய், ஒரு பாட்டியாய் அறிவுரை கூறும் தகுதி வேதா அவர்கள் பெற்றிருந்தாலும், அதற்கு மேல் பாலர் பாடசாலையில் பணிபுரிந்த அனுபவப் புதையல் இக்கட்டுரைகளில் வெளி வந்துள்ளது. இந்நூல் இவருடைய 4 ஆவது நூலாகப் பவனிவர இருக்கிறது. இந்நூலை வாசிக்கும் போது இவரை அம்மையார் என்று அழைக்கவே மனம் விரும்பும் என்பது உண்மையே. 12 வருட காலம் இவரை இலண்டன் தமிழ் வானொலி மூலாக அளந்திருக்கின்றேன். புரிந்திருக்கின்றேன். இவர் பேசினால், 20 வயதுக் குமரியின் பிம்பம் எம்முன்னே தெரியும். ஆர்வம், முயற்சி, வேகம், நேர்மை, பிறரின் முயற்சியில் தட்டிக்கொடுப்பு, பிழைகளை சுட்டிக்காட்டல், அன்பு இப்படி நற்குணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். அவற்றை உட்கொண்ட இவருடைய எழுத்தை உயிராக நேசிக்கும் பண்பு. இவருடைய படைப்புக்கள் மூலம் சமுதாயத்தை நிலைநிறுத்தும் என்பது உண்மையே.

கட்டுரைகள் தாங்கிவந்திருக்கும் தலைப்புக்கள் கட்டுரைகளை உள்வாங்கும் உத்தியாகக் கையாளப்பட்டிருப்பது இந்நூலுக்கு ஒரு அணி சேர்க்கிறது. உள்நுழையும் ஆவலைத் தூண்டுகிறது. வளரட்டும் சுயபலம், பாலுக்குப் பதிலாகக் கோலா, இரட்டைக்

கட்டில், நீங்கள் ஒழுக்கமானவரா? இவை போன்ற தலைப்புக்களுடன் வெளிவந்திருக்கின்ற கட்டுரைகள், பெற்றோர் பிள்ளை வளர்ப்பில் தவறுகின்ற விடயங்களும், பிள்ளைகளின் நடவடிக்கைகளும் உன்னிப்பாகக் கவனித்து தமிழ்ச்சமுதாய விழிப்புணர்வுக்காக ஊட்டப்பட்டவையாகும். குழந்தை வளர்ப்பு என்பது ஒரு கலை. பெற்றோர் சரியான முறையில் வளர்க்கின்ற குழந்தைகள் நாளைய சமுதாயத்தை சிறப்பான வழிமுறையில் கொண்டு செல்லக்கூடிய பிரஜைகள். எனவே குழந்தை வளர்ப்பு தடுமாறினால், நாளைய உலகம் சீர்குலையும் என்பது சத்தியம். அதனால், தனது தரமான எழுதுகோலைத் திறமான செய்கைக்காய் பயன்படுத்தியுள்ள வேதா அவர்கள், கவிதாயினி என்னும் ஒரு பக்கத்திலிருந்து வேறு ஒரு பரிமாணமாக இக்கட்டுரைகள் மூலம் இனம் காட்டப்படுவார்.

ஒரு படைப்பாளி வெறுமனே படைக்கின்றான் என்பதை விட ஒரு திருந்திய சமூகத்தைப் படைக்கின்றான், என்பதே காலம் கடந்தும் அவனை வாழவைக்கும். அந்த வகையில் வேதா இலங்காதிலகம் அவர்களுடைய இந்நூல் அவர் எழுத்துப் பயணத்தில் ஒரு முத்திரை பதிக்கும் என்பது உறுதி.

**காலவேக கடுகளவு வாழ்க்கையது ஞாலமீதில்**
**சாலச்சிறந்த படைப்பாளி வேகங்குறையா விருந்தாம்**
எழுத்துப் படையல்கள் விண் ணெட்டும் கொடையாளி வேட்டையாடி விருந்திட்ட
விளக்கங்கள் வினைகெடா பகிர்ந்தளிக்கும் செலவாளி பார்எட்டும் சிறப்பாளே
சீர்எட்டும் சிந்தனையால் ஓங்கட்டும்
செந்தமிழொளி வேதாபுகழ் ஓங்கட்டும் இந்நூல் வழி!
மேலோங்கட்டும் உலகின் ஒளி!

**திருமதி. சந்திரகௌரி சிவபாலன் (கௌசி)**
B.A,Dip-in-Edu(Srilanka)
**ஜெர்மனி**

# வாழ்த்துரை



பொதிகைத் தென்றல் தவழ்ந்து புதுமணமாய் இங்கே கமழ்கின்றது
பொத்திவைத்துக் கொள்ளும் ஒரு பொக்கிஷமாய் இது மிளிர்கிறது
புதிய தலைமுறைக்குப் புகலும் புத்திமதி வரிகளாகவும் விரிகிறது
புலம்பெயர்தேசத்துக்கும் இது பொருத்தப்பாட்டை எடுத்துகாட்டுகிறது

விதியெனவே மனித வாழ்வியலுக்கு வெளிச்சத்தினைக் காட்டுகிறது
விழிப்படைந்திடவே இளையோருக்கும் புது விருந்தென ஊட்டுகிறது
புதிய ஆத்திசூடியாய் தமிழில் பூப்பூத்துக் கொத்தாய் குலுங்குகிறது
புவிவாழ்வினை நெறிப்படுத்திடஎண்ணும் புதுமுயற்சியாய் புலர்கின்றது

நீதியும் நேர்மையும் மனிதநேயமும் நிலையிழந்து எங்குமே தவிக்கிறது
நிழலாகத்தொடருகின்ற ஏக்கத்தினாலதை நிறுத்துதல் பொறுப்பாகின்றது
முதியவரையும் உறவுகளையும் முறையாய்ப் பணிதலையிது பேசுகிறது
முதற்படிகளாய் இவ்வடிகள் முளைவிட்டதனால் முனைப்புத் தெரிகிறது

அதிவேக வாழ்க்கைச்சூழலில் அடிபட்டுப்போகும் இளையோரின் மனதில்
அருகிடும் பண்பாட்டுவிழுமியங்களை அமரச்செய்யும் பெருமுயற்சியிது
நதியாக நடந்துசெல்லும் நல்ல தமிழின் நற்சொற் தொடர்வரி வடிவிது
நம்கோவைக் கவியின் கவியநயத்தினை உயர்வாய் உணர்த்துகின்றது

வதியவந்த தேசங்களில் வயதுக்குவந்த நம் இளையதலைமுறையால்
வற்றிப்போகும் நம்தமிழ்காலச்சார வாழ்தலில் மனதில் சூழும் இருளை
மதியாகவெளிச்சம் காட்டிநின்று மற்றவர்க்கும் உணர்வை ஊட்டுகிறது
மாற்றங்கள் உளத்திலெழும் மகிழ்வுகொண்டே மலர்த்திக் காட்டுகிறது

குதியாட்டம் குத்தாட்டம்கூடி குடிப்பழக்கத்தில் தொடரும் கொண்டாட்டம்
குதூகலத்தில் தொடங்குகின்ற போதை குழப்பத்தினை இது நிறுத்தும்
நிதியும் வசதிகளும் நிரம்பியயிம் மேற்குலகின் கட்டுப்பாடு அறுகின்ற
நிகழ்வுகளில் ஒழுங்கும் பணிவும் நிர்மூலமாகும் நிலையை இதுதடுக்கும்

கதிகாலாய் ஊன்றிவைத்து நாமாய்க் கற்றுக்கொண்ட பண்பாடெல்லாமே
கரைந்துபோன சூழ்நிலையினைக் கவசமிட்டு கண்டிப்பாயிது மாற்றிடுமே
முதிசமாக காத்திடும் மொழியினை முறைப்படி ஊட்டுவது நம்கடனாமே
முயற்சிகளெல்லாம் வெற்றியளிக்கும் முத்தழிழ்ப்பணியினை ஏற்றுவோமே

அதியமானின் நட்பினால் ஔவை அருளி எமக்கெனத்தந்த வெகுமதி
ஆத்திசூடியாய் தமிழ்கூறும் அகிலத்தனை ஆற்றுப்படுத்தும் அருள்நிதி
பதிவான இந்தப் படையலோ புதியபரிணாமத்தின் பண்பாடுப் பெருநிதி
பழமையைப் புதுப்பித்திட்ட வேதா பருகிடத்தந்திருக்கும் தமிழமுதநதி

சுதிவிலகிடா வள்ளுவப் பெருமானின் சுழலும் இப்புவிச் சுருக்கமே ஈரடி
சூட்சுமம் அறிந்திட்ட உலகே குறளின் சுவையுறு முப்பாலை தேடிப்படி
மதியும் சார்ந்து மாலையாய் சாய்ந்து மயக்கும் ஔவையின் ஆத்திசூடி
மாற்றம் நிழ்த்தும் வாழ்வில் மகிழ்வும் பெருகும் அமைதியின் ஆரம்சூடி
அதிரும் வரியில் ஆழம்பதித்து அன்னைத் தமிழில் ஆக்கமோ அத்துப்படி
அழகாய் அமைந்த ஆற்றலில் வேதா அமைத்திட்ட புதிய இந்தஆத்திசூடி..
உதிரும் மலர்கள் சொரியும் நறுந்தேனின் உவப்பும் குழைத்து மகிழ்ந்தாடி
ஊறிய பாசத்தில் எந்தன்பணியாய் உமக்காய் வரைந்தேன் அணியாய்சூடி..!

**கவிச்சுடர் அம்பலவன் புவனேந்திரன்**
பொருளாளர்
தமிழ் எழுத்தாளர் சங்கம்
யேர்மனி.



# வாழ்த்துரை

சைவமும் தமிழும் வளர்ந்த பெருமை பெற்ற ஊர் கோப்பாய் நல்லை நாவலர் பெருமான் விரும்பி வந்து சைவப்பாடசாலை தாபித்த புனிதபதி அறிவாலயங்களும் அருள் ஆலயங்களும் நழறைந்து சான்றோர் தமிழும் சைவமும் வளர்த்து புராதன புண்ணியபூமி ஆகும்.

இங்கு உயர் சைவவேளான் குலதிலகராய் நாவலர் பெருமானது நெறியில் வாழ்ந்த முருகேசர் சுவாமிநாதன் மகனாய் சமூகத் தொண்டனாம் நகுலேஸ்வரர் சிவக்கொழுந்து தம்பதியரது மூத்தவர் பேபி எனச் செல்லமாக அழைக்கப்படுவதே வேதநாயகம் பாளாவர் இவரே வேதாவர் துணைவராய் இலங்காதிலகமுடன் சேர்ந்து "டென்மார்க்" நகரில் தமிழ் ஆசான் இவரைப் பிறப்பிலிருந்து நன்கறிவேன். நாவலர் சைவ வித்தியாசாலையில் கல்வியோடு ஒழுக்க நெறிக்களைக் கற்றவர். மாசுமறுவற்ற அறவாழ்வு வாழ்பவர். புலம் பெயர்ந்து வாழ்வது அறிந்து உவகையுற்றேன். இவர் தயாரித்த சிறுவருக்கான நூல்கள் கிடைத்து வாசித்து மகிழ்ந்தேன். சிறுவரோடு புலம் பெயர்பதியில் வேதாவின் தமிழ்தொண்டு வளர வாழ்த்துவதோடு வெள்ளெருவை விநாயகன் அருளவும் வேண்டுகிறேன்

ஓய்வுநிலை அதிபர்.
**அ.சுப்பிரமணியம்**
கோவை (யாழ். கோப்பாய்)
நாவலர் பாடசாலை

## தமிழுக்குத் திலகமிடும் "வேதா இலங்காதிலகம்"



ஈழத்தின் யாழ்ப்பாணம் கோப்பாய் தந்த தமிழ்ப் பானம் வேதா இலங்காதிலகம் அவர்கள் டென் மார்க்கில் வசிக்கும் பெண் படைப்பாளி ஆவார்.

1976ஆம் ஆண்டில் இலங்கை வானொலியின் "பூவும் பொட்டும்" மங்கையர் மஞ்சரிக்கு கவிதை எழுதியதன் மூலம் எழுத்து நிலத்தில் கால் வைத்தவர். இன்றுவரை அதில் நடையிடுகின்றார்.

தந்தை நகுலேஸ்வரர் அவர்கள். தாயார் சிவக்கொழுந்து அவர்கள். கணவர் கனகரட்னம் இலங்காதிலகம் அவர்களின் ஊக்குவிப்பு இவரின் எழுத்துப் பயணத்தில் பெரும் காப்பு.

செந்தமிழில் தேர்ச்சிகொண்ட வேதா இலங்காதிலகம் அவர்கள், டென்மார்க் தேசத்திலே "டெனிஷ்" மொழி கற்றும் தேறினார். "பெட்டகோ" எனும் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார். "ரி.ரி.ஆர் தமிழ் அலை" ஊடகத்தில் செய்தி வாசிப்பாளராகவும் செயற்பட்டவர். டென்மார்க் தேசத்தில் தமிழ்ப் பாடசாலையிலே பிரதி அதிபராகவும் தன்பணி புரிந்தவர்.

2002ஆம் ஆண்டு "வேதாவின் கவிதைகள்" கவிநூல், 2004ஆம் ஆண்டில் "குழந்தைகள் இளையோர் சிறக்க" அறிவூட்டல் நூல், 2007ஆம் ஆண்டில் "உணர்வுப் பூக்கள்" கவிநூல் (கணவருடன் இணைந்து வெளியீடு) ஆகிய நூல்களை தமிழுக்களித்தவர்.

இசை, நடனம், ஓவியம் என்பவற்றிலும் காதல்கொண்ட வேதா இலங்காதிலகம் அவர்கள் முகநூல் யுகத்திலும் தன் முத்திரையைப் பதித்தவர்.

2018ஆம் ஆண்டிலே இவரால் எழுதப்பட்ட "குறள் தாழிசை", "பெற்றோரியலில் சிற்றலைகள்" ஆகிய இரண்டு நூல்களையும் வள்ளுவர்புரம் "செல்லமுத்து வெளியீட்டகம்" ஊடாக தமிழுக்கு அளிப்பதில் நிறைவு கொள்கின்றோம்.

வாழ்த்துடனும், அன்புடனும்
**யோ.புரட்சி,**
செயலியக்குநர்,
"1000 கவிஞர்கள் கவிதைகள்"
செல்லமுத்து வெளியீட்டகம்.

# அறிமுகத்தோரணம்



அனைவருக்கும் அன்பு வணக்கம்.

யாழ் கோவைப்பதியில் (கோப்பாய்) பரராச சிங்கன் வழிவந்த முருகேசு சுவாமிநாதர் (கோவை நாவலர் பாடசாலை முன்னாள் முகாமையாளர்) மகன் நகுலேஸ்வரர் என் தந்தையார். புத்தூர் மாளிகைப் பொன்னம்பலம் மகள் சிவக்கொழுந்து என் அம்மா.

கோவைப் பதி (யாழ் - கோப்பாய்) நாவலர் பாடசாலை ஆரம்பக் கல்வி. ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசு ஸ்கொலசிப்பில் ஸ்ரான்லி மத்திய மகா வித்தியாலயம். பின்னர் கோவை கிறீஸ்தவ கல்லூரி. பன்னிரண்டாம் வகுப்புடன் நர்சரி ஆசிரியை 2 வருடங்கள்.

பின்னர் காதல், கடிமணம். கழுத்துறை மாவட்ட ஹொரண எஸ்டேட் வாழ்வு

1989ல் ஒரு மகன் ஒரு மகளுடன் இலங்கைக் கலவரநிலையால் டென்மார்க்கிற்குப் புலம் பெயர்ந்தோம்.

1976ல் இலங்கை வானொலி - பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரிக்குக் கவிதை எழுதியதிலிருந்து என் எழுத்துப் பயணம் ஆரம்பமானது.

கோவைக்கவி, பா வானதி, கோவைக்கோதை புனை பெயர்களைப் பாவிக்கின்றேன். இன்று இணையத்தளங்கள், முகநூலில், எனது வலைகளில், விழாக்களில் உரை கவிதைகள் என்று எனது பயணம் தொடருகிறது. என்னைப் பற்றிய விபரங்கள் வேதாவின் வலையில் விரிவாகக் காணலாம்.

எனது வாழ்விடமான டென்மார்க் ஒகுஸ் நகரத்தில் எனக்கான பாராட்டு விழாவில் ஆறுமுகநாவலர் விருதும், பல கவிதைப் போட்டிகளில் வெள்ளி, தங்க, வைர சான்றிதழ்களும், கண்ணதாசன், பாரதிதாசன், கம்பதாசன் சான்றிதழ்களும்

பெற்றுள்ளேன். இவைகள் தவிர  தடாகம் கலை இலக்கிய வட்டத்தால் கவியூற்று, கவினெழி, கவியருவி பட்டங்களும், பல முகநூல் குழுமங்களால் கவிமலை, கிராமியக் கவிஞர், கவிசாகரம், கவி வித்தகர், கவிச்சிகரம், கனல்கவி, முழுமதி, சாரல்குயில், ஆறுமுகநாவலர் விருது, நிலாக்கவிஞர், கவிவேந்தர், சிந்தனைச் சிற்பி, கவித்தாமரை, பைந்தமிழ் பாவலர், கவித்திலகம்  என்றும்  பட்டங்கள் பெற்றுள்ளேன். தமிழுக்கும் ஆண்டவனிற்கும் நன்றிகள்.

இது எனது நான்காவது நூல்.  டென்மார்க்கில் பாலர் முன் பாடசாலை ஆசிரியராக டெனிஸ்  மொழியில் 3 வருடங்கள் பயிற்றப்பட்டு  பெட்டகோ எனும் பட்டம் 1993ல் பெற்று  3 - 11வயதுப் பிள்ளைகளுடன் தொழில் புரிந்தேன். அந்த அனுபவங்களிலிருந்து எழுதியவை.

பிள்ளை வளர்ப்பு பராமரிப்புப் பற்றிய தொகுப்பு இது. நிச்சயம் அனைவருக்கும் பயன் படும்.

பிள்ளை வளர்ப்பு என்பது மயன் கலை போன்றது தான். பாசம் நிறைந்த ஆனந்தக் கலையெனலாம்.  உணர்வுபூர்வமாக அணுகிச் செல்ல  வேண்டிய கலை. சுயநலம் விட்டு குழந்தை நலனுக்கு  முன்னுரிமை கொடுத்தலாகும்.

சமுதாய  முக்கிய தூண்களாக வரும்  நாளைய தலைமுறையை நன்கு  கட்டி அமைத்தலாலேயே நந்தவன உலகைக் காணலாம். ஆரோக்கியமாதும் கூட.

இதில் மிக முக்கியமானது பெற்றோர் நல்ல முன்மாதிரியாக இருத்தலே. இது சரிவர அமைந்தால் பாதி விடயம் தானியங் கியாக நிறைவுறும். பார்த்துக் கற்றுக் கொள்ளுதல் இங்கு பலிதமாகிறது.  பழைய முன்னோர் அறிவுரைகளைப் படித்துப் பாடமாக்கியே கண்ணியமான மனிதமாக நான் வளர்ந்தேன். உங்கள் பிள்ளைகளையும் அப்படியே ஆக்குங்கள். கற்றதை மற்றவருக்குக் கொடுத்தல் தெய்வீகம்.

இந்த நூலில் பின் இணைப்பில் வேதாவின் ஆத்திசூடி எழுதி இணைக்கப்பட்டுள்ளது. ஔவையாரின் ஆத்திசூடியால் ஈர்க்கப்பட்டு எழுதினேன். 12ம் நூற்றாண்டு ஔவையாரின் நீதிநூல் ஆத்திசூடி.

நல்லொழுக்கம் என்றால் என்ன என்ற கேள்வியெழும் காலமிது. வீட்டு வேலைக்காரர்களைக் கூட நீங்கள் என்று கூறியழைத்து, பிறரைத் தொட்டுப் பேசாது பழகி, பொய் கூறாமல் வாழப் பழக்கினர் எம்மை எமது பெற்றோர். இன்று காலம் எவ்வளவோ மாறிவிட்டது.

இவ்வுலகை ஒழுங்கமைக்க நீதிநெறிகள் இன்று மிக மிக அவசியம். ஔவையின் மொழிகளும் எங்களை ஆளாக்கியது என்பது மாபெரும் உண்மை. மறுக்க முடியாதது. எனது நூல்களாக முதலாவதாக வேதாவின் கவிதைகள்

இரண்டாவதாக - குழந்தைகள் இளையோர் சிறக்க

மூன்றாவதாக உணர்வுப் பூக்கள்.

இந்த நூலிற்கு அணிந்துரை வழங்கிய தமிழ்மணி மேழிக்குமரன் அவர்களுக்கும், கோப்பாய் நாவலர் பாடசாலை ஓய்வு நிலை அதிபர் அ.சுப்பிரமணியம் என்று எங்கள் ஊர் மணியண்ணைக்கும் என் தோழி எழுத்தாளர் கௌரி சிவபாலனுக்கும், சகோதரர் அம்பலவன் புவனேந்திரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைக் கூறுகிறேன். எனக்கு அனைத்துமாகக் கைகொடுக்கும் என்னுயிர்க் கணவருக்கும், நூலாக்கம், வெளியீட்டில் உதவிய அன்புச் சகோதரர் யோ.புரட்சிக்கும் அவர் நண்பர் குழாமிற்கும், நூலை அழகாக உருவாக்கிய விஜய் அச்சகத்திற்கும் மனமார்ந்த நன்றிகள்.

இனி நூல்களை வாசித்துப் பயன் பெறுங்கள் என்று கூறி என்னுரையை முடிக்கிறேன்.

# மணல் விளையாட்டு.

தணலென மன மகிழ்வு
மணல் விளையாட்டில் விரிவு.
மணல் அள்ளித் தூவல்
மணலில் பாதம் பதித்தல்
மணலில் கால் புதைத்தல்
மணலில் அளைதல், குழைத்தலாம்
மானாவாரி அனுபவம் மழலைக்கும்
மனிதருக்கும் மகோன்னத நன்மையாம்.


மணலில் குழியாக்கல், வரைதல்
மணலில் பொருள் ஒழித்தல்
மணலில் கிளிஞ்சல் தேடல்
மணலில் அச்சு பதித்தல்
மணலில் உருண்டு, புரளல்
மழலைக்கு மலைப்பின்றி மகத்தான
தோலில் நோயெதிர்ப்புச் சக்திக்கு
தோழனாகித் தோள் கொடுக்கும்.



## வளரட்டும் சுயபலம்

வாராண்டி வாராண்டி
வாசுதேவன் வாராண்டி.
வாரப்பாடு காட்டியே
வாருகிறார் பேத்தியை.
வாரணையாய் வளர்ச்சிக்கு
வாசல் நந்தியாகிறார். (வாராண்டி)

உணவைப் பிள்ளைக்கு
உருகியுருகி ஊட்டுகிறார்.
உடையை அணிந்திட
உதவியே தொலைக்கிறார்.
உருப்படியாய் பேத்தி வளர
உதவி தர மறுக்கிறார். (வாராண்டி)



எப்போதும் உதவினால்
எதிர்பார்ப்பு உருவாகும்.
எழுச்சி உணர்வும்
எழாமலே அமுங்கிடும்.
எண்ணமும் முயற்சியும்
எதிர்மொழி பேசாது. (வாரப்பாடு)

தானே முயற்சித்து
தாண்டவிடு படிகளை!
தாறுமாறு ஆனாலும்
தாராள அனுபவம்
தானமாக்கும் தகுதியை.
தாட்டிகமாயெழும் சுயபலம். (வாரப்பாடு)

# பிள்ளைகள் காயப்படுகிறார்கள்

எப்படி வெளியே பிள்ளைகள் காயப்படுகிறார்கள்!

பாலர் பாடசாலையில் வெளியே உலா செல்லும் நாட்களில் தெருக்களைக் கடக்கும் போது, சன நெரிசலிற் புகும் போது, குழுநிலையில் சிறுவர்கள் ஒருவருடன் ஒருவர் கைகளைக் கோர்த்து, சோடி சோடியாக இடையில் பெரியவர்களுடனும் நடக்க வேண்டும்.



எல்லோரும் சோடி சோடியாகக் கை பிடித்து நிற்க இறுதி யாக 3 வயதுடைய ஒரு ஆசியப் பெண் குழந்தையும், ஒரு டெனிஸ் ஆண் குழந்தையும் எஞ்சி நின்றனர்.

"கையைக் கோர்த்திடு" என்றேன் பெண் குழந்தையிடம். மாட்டேன் என்று மறுத்தாள்.

"இப்படி உலாப் போகும் போது சிறு பிள்ளைகள் கை பிடிக்க வேணும் என்ற வழக்கத்தை மறந்து விட்டாயா?.." என்றேன். "நான் ஆண் பிள்ளைகள் கையைப் பிடிக்க மாட்டேன்!" என்று அடம் பிடித்தாள்.

" ஏன்" என்ற போதும் (இக் கேள்வியை மிக மன நோவுடனேயே நான் கேட்டேன்)

"மாட்டேன் மாட்டேன்" என்றாள்.

பின்பு நானும் சேர்ந்து அவளோடு கை பிடித்து நடந்தோம். எமது வற்புறுத்தலால் அவளது கண்கள் கலங்கி விட்டன. அழுதாள். அவளது நிலைமை எனக்கு விளங்கியது.

பின்னொரு தடவை வேறொரு நாள் சைக்கிளோடி விளையாடிய போது, ஒரு ஆபிரிக்க ஆண்பிள்ளை 4 வயதுடையவன் எனக்கு பெண் பிள்ளையோடு சைக்கிளில் இரட்டையாக, சமமாக உட்கார முடியாது என்றான். "ஏன்" என்றேன்.

"ஆண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளோடு தான் விளையாட வேண்டும்., பெண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளோடு தான் விளையாட வேண்டும்." என்று அடித்துக் கூறினான்.

"..யார் கூறியது?" என்றேன்.

"அம்மா..கூறினார் " என்றான். (நானும் ஒரு ஆசியப் பெண் ஆனாலும், ஐரோப்பியக் கலாச்சாரப் பாலர் பாடசாலை ஆசிரியையாகப் பயிற்றப் பட்டு ஐரோப்பியரோடு வேலை செய்தவள். புலம் பெயர்ந்த பிள்ளைகள் நிலை இது.)

இது தான் கலாச்சார இடிபாடு.

வீட்டில் கூறும் பிற நாட்டுக் கலாச்சாரப் புத்திமதிகள் பிள்ளைகளிடம் வேலை செய்கிறது. ஆனால் அது இங்கு (ஐரோப்பியக் கலாச்சாரத்தில்) வெளியில் எடுபடாது.

ஆணும் பெண்ணும் கலந்து பழகி விளையாட வேண்டும். அவர்கள் கலந்து பழகி விளையாட நாமோ தடை செய்வதில்லை, ஊக்குவிக்கிறோம். இது எமது தொழில்.

புலம் பெயர்ந்த பிள்ளைகளிற்கு கூறும் புத்திமதியின் விதம் பிழையானது என்பது எனது கருத்து ஆணும் பெண்ணும் சேர்வதே கூடாது என்று கூறி சேரும் ஆவலைப் பெற்றோர் மறைமுகமாகத் தூண்டுகின்றனரோ என்று தோன்றுகிறது. நன்கு விளக்கமாக இது கூறப் படல் வேண்டும்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் பிள்ளைகளிற்கு உங்கள் முழு அன்பை, ஆதரவைக் கொடுப்பதே.

எப்படி வெளியே அடிபடுகிறார்கள் பார்த்தீர்களா?

கிளப், பாடசாலை, ஓய்வு நேரப் பாடசாலைகளில் இதை விட

நிலைமைகள் வேறு. டிஸ்கோ, சேர்ந்து பயணங்கள் போய் இரவு தங்குதல் என்று பல. இதில் பயணத்திற்குக் கொண்டு போகும் பொருட்களின் நினைவுப் பட்டியலில் கருத்தடை உறையும் ஒரு பொருளாகப் பாடசாலையால் எழுதப் பட்டிருக்கும்!

இவைகளைப் புரிந்து கொண்டு அணையுங்கள்! இல்லாவிடில் உடைந்து விடுவார்கள் பார்த்தீர்களா!

எவ்விடயமானாலும் பக்குவமாகக் கூறிட வேண்டும்!

## உங்கள் சிரிப்பு மிக முக்கியமானது

படுக்கையில் நித்திரை கொள்வதும், அழுவதும், பால் குடிப்பதுமாக இருந்த பிறந்த குழந்தை, தனது தொடர்புக் கணையாக அழுகையைப் பாவித்த குழந்தை, முதன் முதலில் தனது முகத்துத் தசை நார்கள் விரிந்து,



சிரிக்க ஆரம்பிக்கிறது.

இரண்டாவது தொடர் கணையாகச் சிரிப்பது, புன்முறுவல் பூப்பது அதன் வளர்ச்சியின் ஒரு முன்னேற்றம்.

நீங்களும் கண் தொடர்பை நன்கு பேணிக் கொண்டு குழந்தையுடன் பேசுங்கள். அம்மா அப்பாவாகிய நீங்கள் சிரிக்கச் சிரிக்கக் குழந்தையும் சிரித்துத் தன் திறனை வளர்க்கும்.

மிகச் சிறு குழச்தைக்கு இது பொருந்தும்.

"உம்" என்று முகத்தைத் தூக்கி வைத்துத் திரிவது பிள்ளைகளைப் பாதிக்கும். சிரியுங்கள். புன்னகையுங்கள் இது வீணாகி விடாது.

பெற்றவரை மாதிரியாக வைத்தே பிள்ளைகள் வளருகிறார்கள். ஆகவே உங்கள் சிரிப்பு என்றுமே வீணாகாது.

சிரிப்பு முக்கியமானது. உங்கள் குழந்தைக்கு அந்தச் சிரிப்புக் கொடுக்கும் செய்தியாவது. நானும் நீயும் ஒன்று. எனக்கு நீ உனக்கு நானனெனும் செய்தியே. நாம் நெருக்கமானவர்கள் என்று கூறுகிறது.

அது போலவே தான் அழுகையும் அமைகிறது. மனிதர்களின் கவனிப்பை அழுகையும் இழுக்கிறது.

அதுவே குழந்தைக்குத் தேவையானதுமாகிறது.

பல விடயங்களில் மனிதரைக் குரங்குடன் ஒப்பிடுவோம். ஆனால் இந்தச் சிரிப்பில் மட்டும் அது ஒத்து வருவதில்லை. பிறந்த குழந்தையும் சிரிக்கிறது.

அம்மா அப்பாவின் தொடர்பு நழுவுகிறதோ! அதைத் தெரிவிப்பதும் சிரிப்புத் தான்.

ஒரு மாய மந்திரக் கயிறாக மழலைச் சிரிப்பு எம்மை இழுக்கிறது.

எத்தனை கோடியையும் அச் சிரிப்பிற்கு ஈடாகக் கொடுக்கலாம். பிள்ளையை விட்டு விலக மனமின்றி அணைக்கிறோம். இந்த அணைப்பையே குழந்தை கேட்கிறது.

ஏன் சிறு குழந்தை சிரிக்கிறது என்றால் நீங்கள் என்னோடு அருகிலேயே இருங்கள் என்று மேல் மனுச் செய்கிறதாம்.

உங்கள் குழந்தையை விளங்கிக் கொள்கிறீர்களா!

# தொட்டிற் பாடல்

சாய்ந்தாடய்யா சாய்ந்தாடு!
சாதனை வீரனாய்ச் சாய்ந்தாடு!

சாதுரிய சீலனே சாய்ந்தாடு!
சாந்த ஷரூபனே சாய்ந்தாடு!

கட்டித் தங்கமே சாய்ந்தாடு!
பெட்டி வைரமே சாய்ந்தாடு!



கற்கண்டுக் கட்டியே சாய்ந்தாடு!
கருணை ஒளியே சாய்ந்தாடு!

தாமரை மொட்டே சாய்ந்தாடு!
தாவிக் குதிக்கச் சாய்ந்தாடு!

சின்னப் புறாவே சாய்ந்தாடு!
சிணுங்காது சிரித்துச் சாய்ந்தாடு!

வண்ணங்களின் கீழ் வருகிறது இப் பாடல். தமிழில் 1000 வண்ணங்கள் உள்ளதாம். இப் பால்களின் ஓசை நயம் குழந்தைகள் செவிப் புலன் சீரடைய வழி வகுக்கும். இது பிள்ளைகளின் பிற்கால இசை வளர்ச்சியை, பாடல் (செய்யுள்) இயற்றலையும் வெகு இலகுவாகக் கற்க உதவிடும்.

மிகவும் முயற்சியுறாது கேட்டுணரும் இவை பிற்காலத் தமிழ் இசை, இலக்கிய வளத்திற்குப் பெரிதும் உதவியாற்றும்.

3 முதல் ஏழு வயதுப் பிள்ளைகளிற்கு இது நல்ல கருத்து ணர்வைத் தட்டியெழுப்பும். சிந்திக்கும் திறனை உருவாக்கும்.

இவர்கள் இந்த இசையின் கவர்ச்சியால் சொல்லின் கருத் தறிவார்கள். சொற் கருத்தால் பொருளின் அறிவு பெறுவார்கள். அறிந்த பொருளுடன் அறியாத பொருள் பற்றியும் ஆராய முயற்சிப்பார்கள்.

வியப்பு, நேசம், பாசமிகு அன்புப் பாடல்களை இவர்கள் மிக விரும்புவார்கள்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தன் பாட்டி இலக்குமிப்பிள்ளை ஒரு பிள்ளையைத் தூக்கி வைத்துப் பாடிய பாடல் என்று

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தாமரைப் பூவே சாய்ந்தாடு"

எனும் பாடலை எழுதியுள்ளார். இவை மழலைப் பருவ இலக்கியங்கள் என்கிறார்.

பாடசாலைப் பருவ இலக்கியத் தமிழ் கற்க ' அழகியலுணர்வு ' பெற இப்பாடல்கள் அடிப்படையைத் தருவது என்கிறார். ஓசை நயம் கலந்த இந்தப் பாடல்களை இடைவெளியின்றித் திரும்பத் திரும்பக் குழந்தைகள் கேட்கலாம். நாமும் பாடலாம். அவர்கள் அறியாது இவைகளை அறிவார்கள்.

மனம் முயற்சியின்றிப் படித்தலெனும் இத்திறனை அகநூலார் "அசாக்கிரப் படிப்பு" என்பார் என்கிறார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர்.

"குழவிப் பருவ இலக்கியப் பாடல்கள் எல்லாம் அசாக்கிரமயுருப் படுவனவாதலின் அவை செவ்விய ஓசை வளமுடையனவாக இருத்தல் வேண்டும்" என்கிறார் சோமசுந்தரப் புலவர்.

1955ம் ஆண்டுப் பதிப்பு நூலில் 35 ஆண்டுகளிற்கு முன்னர் இத்தகைய பாடல்கள் யாழ்ப்பாணத்தில் சொல்வழக்கிலிருந்தது என்கிறார்.

இதை நாம் இன்று கூறுவதானால் 92 வருடங்களிற்கு முன் இவை யாழ்ப்பாணத்தில் சொல் வழக்கிலிருந்தது என்று கூறமுடியும்.

பிறநாட்டு மொழிகள், நாகரீகம் வந்து புக எமது பழைமைப் பாடல்கள் அழிந்துபட்டன. ஆயினும் எனது பாட்டிமார் இதைப் பாட நான் கேட்டுள்ளேன். இதை எம் பேரனுக்காக நான் எழுதினேன். அவர் சிறிது வளர, பாடிக் காட்டுவேன்.

அருகும் தாலாட்டு.
தங்கக் குழந்தை தொட்டிலிலே
தலை சாய்த்துக் கண்ணயர
தாலாட்டு ஒரு சீராட்டு.
தாய்மடி அணைவில் அமைதியுற
தளிர் செல்வத்தை வசமாக்க
தானாகப் பாடுவது தாலாட்டு.

இன்பத்தில் மனிதக் குரலுயரும்.
இணையும் வார்த்தைகள் சந்தமாகும்.
இராகம் ஒன்றும் இழையோடும்.
இரத்தினச் சிற்பக் குழந்தையோ
இழைந்து வசப்படும் தாலாட்டில்.
இசையில் வசப்படாதார் யாருளர்!

தாயோடு கேட்டறிந்த தாலாட்டை
வாயாரப் பாடினோம் ஆராரோ.
ஓயாத நவீன இசைக் குவியல்கள்
சாயாதிங்கு வரமாகப் பூக்கிறது.
தூயதாய் ஒன்றைத் தாலாட்டாக
நாமாகப் பாடலாம் சேயுக்காய்.

மோதிடும் நவீன அலைகளால்
ஆதி எழுதுகோலிறகு இன்று
ஆச்சரியக் கணனியாகியது போல்,
அருமைத் தாலாட்டும் அருகியிங்கு
அற்புதக் கதம்ப இசைகளாகிறது.
கற்பனை பெருகிய இசைப்பாட்டாகிறது.

# மோகன முறுவலில் மயங்காதார் யார்?



"ஹாய்! எனக்கு உன்னைப் பார்க்க முடிகிறது. உன் குரலைக் கேட்க முடிகிறது. எனக்கு உன்னை மிகவும் பிடிக்கும். உன்னோடு சேர்ந்து இருப்பது மிக இன்பமயமானது"

பச்சிளம் பாலகன் வள்ளுவன் இந்த உலகத்திற்கு வந்து நான்கு கிழமைகள் தான் ஆகிறது. சிறு புன்னகை மூலம் தான் அவனால் செய்தி தெரிவிக்க முடியும். மேலே கூறிய தகவலை அவன் அப்படித்தான் தெரிவித்தான்.

அந்த மின்னல் கீற்று முறுவலைப் பார்த்து மனமிளகி மறுபடியும் அவனைப் பார்த்து நீங்கள் சிரிப்பீர்கள். நீங்கள் ஆனந்தத்தால் நிரம்பி வழிவீர்கள் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

தனது குழந்தையின் முதற் சிரிப்பால் பெறும் அனுபவம் மனித வாழ்வில் ஒரு மிகப் பெரிய அனுபவமாகும்.

ஆரம்பத்தில் அந்த மோகன முறுவல் ஒரு ஓட்டமானதாகத், தாயானவளுக்கு நிச்சயமில்லாததாக, பிள்ளை சிரிக்கிறானா இல்லையா என்று உறுதியின்றி இருக்கும்.

திடீரென எந்தவிதத் தடுமாற்றமுமின்றி உங்களைப் பார்த்துத் தான் அவன் சிரித்தான் என உணர்வீர்கள்.

குழந்தையின் முதற் சிரிப்பு சிறு சத்தங்களை உருவாக்கி இது ஒரு விளையாட்டுப் போன்று தோன்றும்.

உங்கள் கரத்தில் பிள்ளையைச் சாய்வாகத் தூக்கி நிமிர்த்திக் கண்களோடு கண்களின் தொடர்பைக் கொள்ளுங்கள். மிக இன்பமாக நிறையச் சிரிப்புகள் தொடரும். ஒரு மாதத்தினுள் குழந்தையின் சிரிப்பு மிக வளர்ச்சியடையும். இச்சிரிப்பு மிக நீளும். குழந்தையின் முகத்தையும் ஒளியடையச் செய்யும்.

அன்றாட வாழ்க்கைக் கடன்களால் நீங்கள் அமுங்கி, ஒளியிழந்து இருந்தாலும், கோபமாக இருந்தாலும் அந்தக் குழந்தைச் சிரிப்பை நீங்கள் பார்க்கும் போது ஈடு இணையற்ற ஆனந்தமடைவீர்கள்.

மறுபடி ஒரு பெரிய சிரிப்பைக் கொடுப்பது தவிர உங்களிற்கு வேறு வழியே இல்லை. உங்களால் எது விதத்திலும் இதிலிருந்து தப்பவே முடியாது.

ஒரு மாதக் குழந்தையான கைக்குழந்தை நீங்கள் தான், தன் பெற்றோர் என்று உங்களைப் பார்த்துச் சிரிப்பதில்லை.

மற்றைய பெரியவர்களையும், தன் கண்பரப்பில் விரிபவர்கள் அனைவரையும் பார்த்துச் சிரிக்கிறது.

ஏனெனில் அது ஒரு வகையான பேசப்படும் குரல். தொடர்பாடல் முறை.

தன்னைப் பற்றிய கவனத்தை உங்களிடம் எழுப்பி, தன்னைப் பார்க்கச் செய்கிறது.

உங்களுக்கே உங்களுக்காக பிள்ளை சிரிக்க நீங்கள் நான்கிலிருந்து ஏழு மாதம் வரை காத்திருக்க வேண்டும்.

சிரிப்பெனும் தூண்டிலால் ஒரு குழந்தை ஆறு மாதத்திற்குள் யாராயிருந்தாலும் எல்லோரையும் தன் பரப்பினுள் இழுக்கிறது.

ஏழு மாதத்தின் பின்னரே நெருங்கியவர்கள், தனக்குத் தெரிந்தவர்கள் என்று அடையாளம் கண்டு சிரிக்கிறது.

வெளியார் யார், தனது நெருங்கியவர் யார் என அடையாளம் புரிகிறது.

நன்கு சிரித்து விளையாடிய பிள்ளை ஏன் திடீரென தெரியாதவர்களைப் பார்த்து ஒரு வித்தியாசமான நிலையில் ஒதுங்குகிறது என நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. இது ஒரு சாதாரண நிலையிலான உங்கள் பிள்ளையின் முன்னேற்றமே.

நீங்கள் இதையிட்டு மகிழ வேண்டும். அதை மதிக்கப் பழக வேண்டும்.

பிள்ளை ஒரு படி முன்னேறியுள்ளான், வளர்ந்துள்ளான் என்று நீங்கள் மகிழ வேண்டும்.

## ஒரு குதூகலமான நாள் முயலுங்களேன்



வெளி நாட்டில் நல்ல கோடையில் சூரியன் உதிக்கும் போது பிள்ளைகளிற்கும், பெரியவர்களிற்கும் குதூகலமாக இருக்கும்.

குறைந்த ஆடைகளுடன் வெளியே போக விரும்புவார்கள். வார இறுதியில் பிள்ளைகளுடன் வெளியே புறப்படுங்கள்.

அழகான பூக்களை நீண்ட காம்புடன் பிடுங்கி வந்து ஒரு பாரமான புத்தகத்துள், சமையலறைக் கை துடைக்கும் கடதாசியை வைத்து அதன் மேலே பிடுங்கிய பூ வைத்து தலை கீழாக ஒவ்வொன்றாகப் புத்தகத்துள் மூடிப் பாரம் வைக்க வேண்டும்.

இரண்டு நாட்கள் செல்ல அவை காய்ந்த பின்பு எடுத்து அழகான வாழ்த்து அட்டைகள், சட்டம் போடக் கூடிய கலையழகுடைய படங்கள் செய்யலாம்.

2. இன்னும் காய்ந்த விதைகள், இறகுகள், கம்பளி நூல், மெல்லிய றிபன் போன்றவைகளையும் இவைகளோடு சேர்த்துக் கலா ரசனையுடன் வித விதமாக ஒட்டிப் பாவிக்கலாம்.

3. சவர்க்காரக் கரைசலை உறிஞ்சும் குழாய்கள் மூலம் ஊதிக் குமிழிகள் செய்து பறப்பதை ரசிக்கலாம். சிறுவர்கள் அதைப்

பிடித்தும் விளையாடுவார்கள். இதுவும் பெரியவர்கள், சிறியவர்கள் அனைவருக்கும் பிடிக்கும்.

4. பெரிது படுத்திக்காட்டும் கண்ணாடியுடனும் சென்று பூச்சிகளைப் பிடித்துப் போத்தல்களில் இட்டுக் கவனிக்கலாம். இது பெரியவர்களிற்கும் மனமகிழ்வு தரக் கூடியது என்பது எனது அபிப்பிராயம்.

5. தீயில் இறைச்சி வாட்டி உண்டு மகிழலாம்.

6. கடற்கரைக்குச் சென்று மகிழலாம்..

இப்படிப் பல வகையில் வெயில் நாளை அனுபவித்து மகிழலாம்.

# கைத் தொலைபேசியைப் பூட்டுங்கள்



காலை 8 மணிக்கு ஐந்தரை வயது டானியல் பாலர் நிலையம் வந்தான். காலை உணவையே பாலர் நிலையத்தில் தான் அவன் சாப்பிட்டான்.

மாலை 4.30 ஆகியும் அவனது பெற்றோர் அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வரவில்லை. மளமளவென மற்றைய பிள்ளைகளின் பெற்றோர்கள் வந்து தமது பிள்ளைகளை அள்ளி அணைத்து, ஆசை தீர முத்தமிட்டு, அன்பாக வீட்டிற்குக் கூட்டிச் செல்லும் போது டானியலின் முகம் வாடுகிறது.

அன்றாடம் நிலையத்தில் பெற்றவருக்காகக் காத்திருக்கும் இறுதிப் பிள்ளையாக இருக்கும் ஏக்கக் கொடுமையைப் பிஞ்சு மனங்களால் தாங்க முடிவதில்லை. அது ஒரு பயங்கர ஏக்க நிலையாகும்.

டானியலுக்காக நான் வாசித்த கதையில் அவன் மனம் செல்லவில்லை. மணி 4.45க்கு தந்தை யோசப் வந்தார். (நிலையம் பூட்டுவது மாலை 5 மணிக்கு.) அவன் முகம் பூவானது. "இதோ உன் அப்பா வந்திட்டார்" என்று கூறியபடி வாசிப்பை நிறுத்தி புத்தகத்தை மூடினேன்.

அவன் தந்தையோ ஒரு கரத்தைக் கதவு நிலையில் ஊன்றியபடி மறு கரத்தில் கைத்தொலை பேசியை ஏந்தி, காதோடு கதைத்தபடி, டானியலுக்குத் தலையை மட்டும் ஆட்டியபடி தனது கதையில் மூழ்கியிருந்தார்.

இந்நிலை எனக்கு எரிச்சலைத் தந்தாலும், எனக்கு எதுவும் கூறமுடியாத நிலைமை. டானியல் தந்தையின் சைகையைப்

புரிந்து இருவரும் பிள்ளையின் உடை தொங்கும் இடத்தை யடைந்து வீடு செல்லத் தயாராக, நானும் யன்னலை மூடி நிலையத்தைப் பூட்டும் முயற்சியில் இறங்கினேன்.

எட்டு மணி நேரமாகப் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைக்குத் தேவை ஒரு அன்பான அணைப்பு, ஆசை வார்த்தைப் பரிமாற்றம், ஒரு அன்பு முத்தமே! இதையறியாத தந்தைக்குக் கைத்தொலை பேசி முதலிடம் வகிக்கிறது.

இவர் போன்று பலர் உளர். எம்மோடு பிள்ளை பற்றிய அன்றாட அசைவுகள், அன்று என்ன நடந்தது, என்ற பல தகவல்களின் பரிமாற்றங்களின்று, தகவற் பலகையில் எழுதிய அறிவிப்புகள், தகவல்களையும் வாசிக்காது பலர் உளர். எது தனக்கு முக்கியம் எனும் நேரத்தில் கைத்தொலை பேசியைப் பூட்டுவது நன்றல்லவா!

குழந்தைகளைக் கையளிப்பதும், எடுப்பதும் கூட பெற்றவ ருக்கும், நிலையத்தினருக்கும் மிக முக்கிய பொழுதுகளன்றோ!

மாலையில் பெற்றவர் அன்புக்காக ஏங்கும் பிள்ளைகளை அன்பாக அணைத்துக் கூட்டிச் செல்ல வேண்டும். காலையிலும் அன்பாக அணைத்துக் கூட்டி வருவது மிக அவசியம். அப்போது தாராளமாகக் கைத்தொலை பேசியைப் பூட்டிவிடலாம்.

சக ஊழியர்களின் கலந்துரையாடல் நேரத்தில் இந்தத் தலைப்பை எடுத்து உரையாடினோம்.

எல்லோரும் கூடிப் பேசி எடுத்த முடிவின்படி "கைத்தொலை பேசி இங்கு தடை" எனும் அட்டைகளை நிலையத்தின் பல இடங்களில் தொங்கவிட்டு இதை எழுதுகிறேன்.

நீங்கள் என்ன கூறுகிறீர்கள்!..

கைத்தொலை பேசி வர முதல் எப்படி இருந்தீர்கள்!

சொல்லுங்கள்!.

## பாலுக்குப் பதிலாகக் கோலாவை

அதிகமாகப் பிள்ளைகள் பாலுக்குப் பதிலாக கோலாவைக் குடிக்கின்றனர்.

மரக்கறி, மீனுக்குப் பதிலாக சிப்ஸ், போகெர்ஸ் (burgers) உண்கின்றனர்.

வெளி விளையாட்டை, விளையாட்டுத் திடலைப் பாவிக்காது அமைதியாகக், கல்லுப் போலக் கணனிக்கு முன்பு உட்காரு கின்றனர்.

இது நல்ல யோசனையோ, ஆரோக்கியமான நிலையோ அல்ல என்கிறார் உலா கினப்ப (Ulla knappe) டென்மார்க் எலும்புகள் சம்பந்தமான ஒரு குழுமத்தின் தலைவர்.

இந்த நவீன வாழ்வு முறை, பிற்காலத்தில் பெரிய உடல் ரீதியான பாதிப்பை உருவாக்கப் போகிறது. என்கிறார் இவர்.

நலிவான எலும்புகள் விரைவில் உடையும் தன்மை கொண்டன. முதுகுத் தண்டு வளைந்து கோணலாகி விடும். அன்றாட வேலையைக் கூட செய்ய முடியாத நிலை உருவாகும். நடு வயதிலும் முதுமை வயதிலும் நோய்கள் அண்டிக் கொள்ளும். ஆதலால் சிறு பருவத்திலேயே இதைத் தடுத்துக் கொள்ள வேண்டும். பிற்காலப் பாதிப்பிற்கு முற்காலத் தடுப்பு நடவடிக்கை சுகாதாரமானது.

எலும்பு மச்சை வளர்ச்சி பெறும் 25 வயது வரை நம் உடம்பிற்குத் தேவையான அளவு கல்சியம் பெறும் படி நாம் கவனிக்க வேண்டும். எலும்பு மச்சைத் தேய்வு ஆணுக்கும், பெண் ணுக்கும் வயதுப் பிரகாரம் 35 வயதில் ஆரம்பமாகிறது. பின்னர் இது வாழ்வு முழுதும் தொடர்கிறது. இதனால் குழந்தைகளும் இளையவர்களும் தமது எலும்பு மச்சைகளை அதன் தேய்வு வயது வரு முன்னரே நன்கு கட்டி எழுப்ப வேண்டும்.

ஒரு பாடசாலைப் பிள்ளை ஒரு நாளிற்கு அரை லிட்டர் பாலும்

இரண்டு துண்டு சீசும் சாப்பிட வேண்டும். பதின்ம வயதினர் இன்னும் அதிகம் உண்ண வேண்டும்.

நிறைய சுகாதார உணவு, அதிக கல்சியம், டி உயிர்ச்சத்து இவைகளே பிற்காலப் பிரகாசத்திற்கு மிகச் சிறந்த தீர்வாகிறது.

பிள்ளைகள் தேவையான சத்தைப் பெறுவது பெற்றவர் கடனே.

டென்மார்க்கில் 4 இலட்சம் மக்கள் எலும்பு சம்பந்தமான நோய்களால் அல்லல் உறுகின்றனர்.

நாங்கள் இதை நல்ல கவனத்தில் எடுக்க வேண்டும்.

நலம் பெறுங்கள்!



# சந்தப் பாடல்கள்

(23-5-2004 ல் இலண்டன் தமிழ் வானொலி ஓடி விளையாடு பாப்பா வில் ஒலிபரப்பானது)



சந்தப் பாடல்கள் திறமைக்கு ஊக்குவிப்பு.

தொட்டிற் பாடல், தாலாட்டுப்பாடல்கள் இனிய ஓசை நயம், அழகியலும் கொண்டது. இது நல்ல தாள லயத்தோடு பாடப்படும் போது, செவிக்கு இதமாகிக் காதின் இயக்க சக்தியைக் கூர்மை யாக்குகிறது.

தால் என்றால் நாக்கு.

ஆட்டுதல் நாவை அசைத்தல், ஆட்டுதல், தால் ஆட்டுதல்.

ஆராட்டுதல், தாலாட்டுதல் ஒரே கருத்துடைத்து.

ஆதி காலத்தில் (பழங்குடியினர்) நாவை அசைத்து ஆட்டித் தானே முதலில் ஒலி எழுப்பினர்.

எனது அம்மம்மா ஆராட்டுதல் என்றே கூறினார்கள். குழந்தை அழுதால் கொஞ்சம் ஆராட்டுங்களேன் என்பார்.

ராராரோராராரோ

ஆராரோ ஆரிவரோ

அடித்தாரைச் சொல்லி..அழு!"

என்று அந்த அந்த நிலைமைகளை வைத்து இட்டுக் கட்டி, ஆனால் சந்தமுடன் பாடப் படுவதுமாகிறது தாலாட்டு.

இப்படிக் கேட்டுப் பழகும் அனுபவம் பிற்காலத்தில் இசை பயில்வதில் குழந்தைகளின் திறமையையும், பாடல் இயற்றும்

திறனையும் மிக எளிதாகப் பெறும் வாய்ப்பையும் உருவாக்கு கிறது.

சிரமப் பட்டு மனதில் பதிக்காது, தானாகக் காது வழி புகுந்து, இதயத்தில் இறங்கும் இப் பாடல்களால் பிள்ளைகளின் பிற்காலம் மிகச் செழிப்பாகும் என்று மனவியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

மூன்று வயது முதல் ஏழு வயதுக்குரிய பிள்ளைகளிற்கு ஓசை நயம் செறிந்த பாடல்கள் மிகச் சுலபமாக மனதுள் இறங்குகின்றன. இந்த எளிய ஓசை நயத்தால், சொற்களுடன் மனம் இலயித்து ஈடுபடுகிறது. சொல்லின் தொடர்பால் கருத்தோடு மனம் இணைகிறது. அறிந்த பொருட்களின் கருத்துடன், தான் அறியாத பொருளின் கருத்தையும் அறியும் வாய்ப்பைப் பிள்ளைகளிற்குத் தருகிறது.

உதாரணமாக:-

**சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு**
**சந்தனச் சிலையே சாய்ந்தாடு**
**கட்டிக் கரும்பே சாய்ந்தாடு**
**கண்ணின் மணியே சாய்ந்தாடு.**

**குண்டு மணியே சாய்ந்தாடு**
**குயிலே மயிலே சாய்ந்தாடு**
**அன்னக் குஞ்சே சாய்ந்தாடு**
**அம்மா மடியில் சாய்ந்தாடு**

இது எளிய நடைச் சந்தப் பாடல். குழந்தை இலக்கியமாகும். பல தடவை திரும்பத் திரும்பக் கேட்டாலும் அலுப்புத் தராதவை. இது குழந்தைகளின் பிற்கால பாடசாலை இலக்கிய அனுபவத் திற்கு அடிப்படையாகிறது.

(இது இலண்டன் தமிழ் வானொலி ஓடி விளையாடு பாப்பா நிகழ்வில் 23-5-2004 ல் ஒலிபரப்பானது.)

சந்தப்பாடலான தாலாட்டின் அடிப்படை பிற்காலப் பாடசாலையின் இலக்கிய அனுபவத்திற்கு அத்திவாரமாகிறது. சந்தப் பாடல், கும்மிப் பாடல், சிந்துப் பாடல் என்று இசைப் பாடல்கள் மூன்று வகையாகிறது. சந்தப் பாடலில் சந்த ஓசையே முக்கியமாகிறது. (இதனுள் கீர்த்தனம் என்பதையும் இணைக்கின்றனர். இது ஒரு பெரிய ஆய்வுக் களமாகும்.)

"..குழந்தைகள் தாய்மாரின் தாலாட்டில் கண்ணயர்ந்து துயில்கின்றன. இவ்வகைப் பண்பட்ட இன்னோசையின் அமைதியைத் தமிழிலக்கணத்தில் 'வண்ணம்' என்பர். தமிழில் நூறு வகை வண்ணம் உண்டு. ஒவ்வொன்றும் செவிக்குணவு தருவன." என்று யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் கூறுகிறார்.

(அருணகிரி நாதர் திருப்புகழும் வண்ணச் சந்தமுடையது.)

மூன்றிலிருந்து ஏழு வயதுக் குழந்தைகளுக்கு நகை, வியப்பு, அன்புச் சுவை மலிந்த பாடல்கள் மிக வாய்ப்பானவை என்றும் இவர் கூறியுள்ளார். இவ்வகைச் சந்தப் பாடல்களைக் குழந்தைகளுக்கு அனைவரும் பாடி பல திறமைகளுக்கு தூண்டுதலைக் கொடுப்போமாக.

எட்டு முதல் பன்னிரண்டு வயதுக்குரிய பிள்ளைகளுக்கு விவரணப்பாடல்கள், வண்ணப் பாடல்கள், வரலாற்றுப் பாடல்களையும் கொடுக்கலாம். இதை அவர்கள் விரும்புவார்கள். பதின்நான்கு முதல் பதினெட்டு வயதுப் பிள்ளைகள் காதல், வீரச் சுவையை மிக விரும்புவார்கள். அன்பு, சத்தியம், நேர்மை, அடக்கம், பொறுமை, ஒற்றுமை முதலிய பண்புகள் வளரும் பருவம் இதுவாகும்.

நீதிப் பாடலுள் அநீதிகள் பொதிந்த பால்களையும், கதை நிகழ்ச்சிப் பாடல்களையும் கற்றுக் கொடுத்தல் நன்மை தரும். பாடல்களை மனப்பாடம் செய்வதற்கும் பொருளறிந்து பாடி மகிழவும் இந்தக் காலம் ஏற்ற பருவமாகும்.

## சுத்தமாக மெத்தமும் புதிதாக்கலாம்

**சித்தம் புத்துயிர்க்க**
**நித்தம் சுத்தம்**
**உத்தம சொத்தாகும்.**
**சுத்தம் சுகம் தரும்**

தத்தம் பிள்ளைகள் மொத்த விளையாட்டுப் பொருட்களையும் வாயால் சுவைப்பார்கள், அன்புடன் முத்தமிடுவார்கள். சொத்தான அவர்கள் ஆசைப் பொருட்களை அடிக்கடி சுத்தம் செய்யும் பழக்கம் உங்களிற்கு இருக்கிறதா?

இரு வாரத்திற்கு ஒரு முறையோ, அன்றி அடிக்கடி இவைகளைச் சுத்தம் செய்தல் அவசியமானதாகிறது. நோயுற்ற போது, கிருமிகள் படிந்து, அவை மீண்டும் மீண்டும் தொல்லைகள் தராது இருக்கவும், மொத்தமான சுகாதாரத்திற்கும் இவற்றைக் கழுவுதல் மிகப்பயனுடைத்து.

லீகோ கட்டைகளைப் பாத்திரங்கள் கழுவும் யந்திரத்திலிட்டுக் கழுவலாம். பூனை நாய்க் குட்டிப் பஞ்சுப் பொதிப் பொம்மைக ளைத் துணி கழுவும் யந்திரத்திலிட்டுக் கழுவலாம்.

தண்ணீரில் விளையாட எந்தப் பிள்ளைக்கும் கொள்ளை ஆசை தான். தண்ணீரில் விளையாட ஆசையுள்ள பிள்ளைகளைப் பெரிய வாயகன்ற கிண்ணத்தில் சிறிது சவர்க்காரமிட்ட நீரில் விளையாட்டுப் பொருட்களைப் போட்டு விருப்பப் பிரகாரம் அவைகளைக் கழுவி விளையாட விடலாம்.

விளையாடி முடிய நிலத்தையும், பிள்ளையையும் துடைத்து விடலாம். விரும்பினால் பொருட்களை நீங்களும் இறுதியில் கழுவலாம், அல்லது பிள்ளைகளிடமே தண்ணீரை மாற்றி உதவி செய்து அவர்களையே துடைக்கவும் விடலாம்.

தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள். குழந்தைக ளுக்கு இது விளையாட்டாகவும், பொருட்கள் சுத்தமானதாகவும் ஆகிறது. முயன்று பாருங்களேன்!

## இப்படித்தான் வாசிப்பு தொடக்கப்படுகிறது



(அனுபவக் குறிப்பு:- 7-3.2005ல் இலண்டன் தமிழ் வானொலியில் " ஓடிவிளையாடு பாப்பா"வில் காலையில் இடம் பெறும் அனுபவக் குறிப்பில் ஒலி பரப்பானது.)

எனது வேலையிடத்தில் பிள்ளைகளைக் கொண்டு வந்து விடும் பெற்றோர், திரும்பிப் போகும் போது பிரியும் விடை கொடுப்பது என்பது சில பிள்ளைகளுக்கு மிகக் கஷ்டமான ஒரு விடயம். அழுவார்கள், பெற்றோரைக் கட்டிப் பிடித்தபடி அடம் பிடிப்பார்கள்.

சில பெற்றோர்கள் பிள்ளைகளைப் படம் வரைய, லீகோ கட்டைகளை அடுக்கி விளையாட என்று ஏதாவது ஒரு நடவடிக்கையில் புக விட்டு விடை பெறுவார்கள். அதாவது மகிழ்வோடு விடை பெறுவார்கள்.

இதில் இரண்டு பெற்றோர்கள் மிக சுறு சுறுப்பாக வருவார்கள். இவர்களது பெண் பிள்ளைகள் இன்னும் 4, 5 மாதத்தில் பாடசாலையில் அரிவரி வகுப்பில் சேர உள்ளனர்.

இவர்கள் பாலர் நிலையத்திற்கு வந்தவுடன் பெற்றோரோ அல்லது பிள்ளைகளோ புத்தக அடுக்கிலிலிருந்து ஒரு புத்தகத்தை

உருவி, பிள்ளையை மடியில் இருத்தி புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவார்கள். பிள்ளைக்கும் விளங்கும். 3 -4 பக்கங்கள், அல்லது ஒரு கதை என வாசித்த பின் மகிழ்வாக விடை பெறுவார்கள்.

இது நாள் தோறும் காலையில் நடக்கும். 24 பிள்ளைகளில் 2 பெற்றோர் தொடர்ந்து இப்படிச் செய்கிறார்கள். இந்தப் பெற்றோர் நல்ல படிப்பு. உத்தியோகம் என்று நல்ல நிலையில் உள்ளவர்கள்.

என்னை இது மிகவும் ஈர்த்தது.

எமது தமிழ்த் தாய்மார் இப்படி நடக்கிறார்களா?

இப்படிப் புத்தகம் வாசிப்பார்களா?

என்று பல கேள்விகளை எனக்குள் கேட்கிறேன்.

இப்படிச் சிறு வயதிலேயே இவர்கள் (டெனிஸ் மக்கள்) வாசிப்புத் தொடங்குகிறது. வாசிகசாலைக்குச் சென்று கட்டுக் கட்டாகப் புத்தகங்கள் கொண்டு வந்து வயது வித்தியாசமின்றி வாசிப்பார்கள்.

நாங்கள் புத்தகங்கள் செய்தால், கையில் வாங்கிப் பார்த்து விட்டுத் திருப்பித் தரும் எம்மவர்களும் உள்ளனர். (3 புத்தகங்கள் செய்து பெற்ற அனுபவம்)

இந்த அனுபவம் ஒருவரையாவது வாசிக்கப் பண்ணினால் அது எனது வெற்றி. உங்கள் ஒளிமய எதிர்காலமுமாகும். நல்லதிஷ்டம் கிட்டட்டும்

(எனது புத்தகங்கள் பற்றிய தகவல்கள் எனது புத்தகங்கள் என்ற தலைப்பின் கீழ் வலையில் உள்ளது. விரும்பியவர்கள் வாசிக்கலாம். உங்களிடமிருந்து கேள்விகள், மின்னஞ்சல்கள் வர முதல் நானே அத் தகவலைத் தந்துள்ளேன்.)

## இரட்டைக் கட்டிலில்

(இதைக் குழந்தைகள் உலகம் ஆக்கமாகவும் நீங்கள் எடுக்கலாம். தொடராக விரும்பியவர்களும் எழுதலாம். கௌரி சிவபாலன் இந்த வேண்டுகோளை தொடர் பதிவிட எனக்கு அழைப்பு விடுத்திருந்தார் என்பது குறிப்பிடக் கூடியது.)

காதலுடன் கணவரோடு துயில்வது, அவரது உடற் சூடு, உடலின் மணம் எப்படி சுகத்தைத் தருகிறதோ , அப்படியே ஒரு குழந்தைக்கும் உலகிலேயே தனக்கு மிகவும் பிடித்தவர்களான அம்மா அப்பாவுடன் துயில்வது சுகம் தருகிறது.

கருப்பையின் இருட்டில் தாயின் உடற் சூட்டுடன் மிகப் பாதுகாப்பாக தூங்கியது குழந்தை. அம்மாவின் உடலில் இருந்து வெளியேறும் மூச்சுச் சத்தம், இதயத் துடிப்பைக் கவனித்த பிள்ளை,

அம்மாவின் இருமலின் போதும், குறட்டை விட்ட போதும், சிரிக்கும் போதும், கதைத்த போதும் கேட்டுப் பழகியபடி தூங்கியது. இத்தனை ஆரவாரத்துடன் துயின்ற பிள்ளையைத் தனியே குழந்தை அறையில் படுக்கப் போடுவது மிகவும் கொடுமை அல்லவா!

குழந்தைப் படுக்கையறைக் கதவை இழுத்து மூடுங்கள். உங்கள் இரட்டைக் கட்டிலுக்கு குழந்தையை எடுத்து அணைத்துத் துயிலுங்கள். அப்பா அம்மாவுடன் இரட்டைக் கட்டிலில் படுக்க வைக்க நெருக்கடியாக இருந்தால் சிறு தொட்டில் படுக்கையோ எதுவோ உங்கள் கை எட்டும் படியாகப் படுக்க வையுங்கள்.

குழந்தை உங்களை (உணர), உங்கள் மணம், உங்கள் குரலையும் கேட்டு உணரட்டும். பசித்த போது அம்மா மார்பைச் சுவைக்கட்டும்.

பிள்ளை அருகிலிருந்தால் தான் பிள்ளைக்கு ஏற்றபடி தாயால், தந்தையால் உடனே இயங்க முடியும். குழந்தையின் சமிக்ஞையை உடனே அறிய முடியும். இது குழந்தைக்கு


நம்பிக்கை தரக் கூடியது. சுய பெறுமதியைத் தரும். குழந்தையின் தேவைகள் உடனே பூர்த்தியாகும்.

தனி அறையில் படுத்துத் தாயைத் தேடிப் பலமாகக் கத்தத் தேவையில்லை. பிள்ளை அருகிலிருப்பதால் தாயும் சேயும் நிம்மதித் தூக்கம் பெற முடியும்.

நாள் முழுதும் விலகியிருக்கும் தந்தையின் நெருக்கமும் ஒன்றாகத் தூங்கும் போது கிடைக்கிறது.

தந்தையின் நெருக்கமும், உடற் தொடர்பும் பிள்ளைக்குப் பாதுகாப்பு உணர்வு தருகிறது. இப்படி ஒன்றாகத் துயிலும் மன பலம் பின்னால் பிள்ளை தனியே தனது அறையில் துயில்வதற்கு மனத்துணை ஆகிறது.

"வெள்ளி நிலாக் குழந்தையைத்
தள்ளியே தூர வைக்காது
உள்ளம் நிறைந்த உங்களன்பைக்
கிள்ளிக் கொடுக்காது, வாரி
அள்ளியள்ளிக் கொடுங்கள்."



## நீங்கள் ஒழுங்கானவரா?



(இந்த இடுகையின் இரண்டு ஒடி விளையாடு பாப்பா அனுபவக் குறிப்புகளும் 2004 ம் ஆண்டு இலண்டன் தமிழ் வானொலியில் ஒலிபரப்பானது.)

நீங்கள் எடுத்துப் பாவித்த பொருட்களை எடுத்த இடத்திலேயே திரும்ப வைக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் ஒழுங்கானவர் தான் வாழ்த்துகள்!

உங்கள் பிள்ளைகளுக்கும் இப் பழக்கத்தைப் பழக்குகிறீர்களா?

ஏன்?

மறந்துவிட்டீர்களா?

இன்றே பழக்கிடுங்கள்!

மேசையிலிருந்து அல்லது சாய்வுக் கதிரையிலிருந்து படித்த பின் புத்தகங்களை, எழுதுகோலை உரிய இடத்தில் வைக்கிறீர்களா?

சாப்பிட்டபின் சாப்பாட்டுத் தட்டுகளைக் கழுவி உரிய இடத்தில் கவிழ்ப்பீர்களா?

பாண் வெட்டிய பின் மேசையைத் துடைத்து, பாண் வெட்டிய பலகையை உரிய இடத்தில் வைக்கிறீர்களா?

காலணிகளைக் (சப்பாத்துகளைக்) கழற்றி உரிய இடத்தில் வைப்பீர்களா?

மேலாடையை (ஜாக்கெட்டை) களற்றி கண்ட இடத்தில் போடுகிறீர்களா? அதற்குரிய இடத்தில் கொளுவுவதில்லையா?

அழுக்குத் துணிகளை அழுக்குக் கூடையில் போடுகிறீர்களா?

இப்படி ஒவ்வொரு செயல்களையும் சிறு வயதிலிருந்து பழகும் போது எதிர் காலத்தில் உங்கள் வாழ்வில் நீங்கள் சிறந்த கணவனாக, சிறந்த மனைவியாக வாழ முடியும்.

உங்கள் பழக்க வழக்கத்தால் நீங்களும் பெற்றோரும் சிறப்படைவீர்கள், பெருமையடைவீர்கள்.

பிள்ளைகளுக்குப் பெற்றோர் உதவி செய்ய, பிள்ளைகள் பெற்றோருக்கும் உதவி செய்யலாமன்றோ!

## ராகுல் நின்று கொண்டு சிறுநீர் கழிப்பதில்லை

வழக்கமாக ராகுல் கழிவறையில் (ரொய்லெட்டில்) நின்று கொண்டு தான்

சிறுநீர் கழிப்பான். இப்போதெல்லாம் இருக்கையில் அமர்ந்து சிறுநீர் கழிக்கிறானாம். இது அம்மா ரோகிணிக்கு மிகவும் ஆச்சரியம். ஏப்படி இப்படி மாறினான்! இதன் காரணம் என்ன?

பாலர் நிலையத்திற்கு ராகுல் வரத் தொடங்கி மூன்று கிழமை தான் ஆகிறது. மூன்று வயது ராகுலின் அம்மா ரோகிணி பாலர் நிலையத்தில் இது பற்றி அறிய கேள்விக் கணை தொடுத்தார்.

"ஆண் பிள்ளை நின்று தானே சிறு நீர் கழிப்பார். எப்படி கழிவறை இருக்கையில் அமர்ந்து சிறு நீர் கழிக்க முடியும்? வெளியே எல்லாம் சிந்திடாதா? " இலேசான புன்முறுவலுடன் கேள்விக் கணை தொடுத்தார் ரோகிணி என்னிடம்.

"ஆமாம்! சிறுநீர் கழிக்கும் இருக்கையில் அமர்ந்து, சிறுநீரை வெளியேற்றும் சின்ன மனிதனை (சிறுநீரை வெளியேற்றும் உறுப்பை) ஒரு விரலால் கீழே அழுத்திக் கொடுக்க வேண்டும். சிறுநீர் உள்ளேயே இறங்கும். நிச்சயமாக கழிவறை விஜயம் முடிய கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவ வேண்டும். இதையும் முக்கியமாக சொல்லிக் கொடுக்கிறோம்" என்று பதிலிறுத்தேன்.

"ஓகோ! அது தான் இப்போதெல்லாம் ராகுல் இருக்கையில் அமர்ந்து சிறு நீர் கழிக்க விரும்புகிறான்." என்று திருப்தியாகச் சிரித்தார்.

எமது பயிற்சி வெற்றியளித்தது எமக்கும் மகிழ்ச்சியே.

ஒரு பெண் குழந்தை பாலர் நிலையத்தில் நின்றபடி சிறு நீர் கழிப்பது வெள்ளைக்காரர்களுக்கு ஒரு ஆச்சரியமான விடயம்.

சோமாலியப் பெண் குழந்தை

பாத்திமா கூட ஆரம்பத்தில் நின்று கொண்டு தான் சிறுநீர்

கழித்தாள். வாராந்தர ஊழியர்கள் கூட்டத்தில் இது பற்றிக் கலந்துரையாடிய பின், அவளுக்குப் பயிற்சி கொடுத்தோம். இப்போது அவளும் அமரப் பழகிவிட்டாள்.

சிறுவர்கள் மட்டுமா?

எமது ஆசியக் குடும்ப நண்பர் டொமினிக் எமது வீட்டிற்கு விஜயம் செய்வதானால் எனக்கு ஒரே திண்டாட்டம் தான் போங்கள்!

அவர் போன பின்பு கழிவறை, தரை விரிப்பு, இருக்கை எல்லாம் சிந்திய சிறு நீரைத் துடைத்து, கிருமிநாசினி போட்டுக் கழுவாவிடில் இரவு எனக்குத் தூக்கமே வராது.

என்ன! தொட முடியதா புள்ளியைத் தொட்டு விட்டேனா?

சுத்தம் சுகம் தருமன்றோ!

எல்லாம் பேச முடிந்த விடயங்கள் தானே!



## இரு அனுபவங்கள் (சிறு கட்டுரைகள்)

(இங்கு வரும் இரு அனுபவக் குறிப்புகளும் 2005ல் ஓடி விளையாடு பாப்பா அனுபவக் குறிப்பாக இண்டன் தமிழ் வானொலியில் ஒலி பரப்பானது.)

ஒரு தாயும் ஐந்து வயதுப் பிள்ளையும் கடைக்குப் பொருட்கள் வாங்க வருகிறார்கள். பிள்ளை தனக்குத் தேவையான ஐஸ்கிறீம், இனிப்பு வகைகளைத் தானாகத் தெரிவு செய்து தாயுடன் சேர்ந்து வாங்குகிறது.

முடிவில் தாயார் வங்கி அட்டையைப் பாவித்துப் பணம் கொடுக்கும் போது, பிள்ளை தானே தான் அட்டையை யந்திரத்தில் உரசி பணம் கொடுக்க வேண்டுமென்று அடம் பிடித்தது. அட்டையை அழுத்தித் தேய்க்க பிள்ளையின் கைப்பலம் கூட, போதுமாவெனத் தெரியவில்லை.

இரண்டு பேரும் சேர்ந்து செய்வோமென உடன்பட்டுத் தாயாரும் பிள்ளையுமாக அட்டையைத் தேய்த்தனர்.

பின்னர் இலக்கங்களையும் தானே தான் அழுத்த வேண்டுமென பிள்ளை அடம் பிடித்தது. தாயார் பதிலேதும் கூறாமல் மௌனமாக இலக்கங்களை அழுத்திவிட்டு, இறுதியில் அங்கீகரிக்கும் பச்சைக் கட்டையை அழுத்தும்படி பிள்ளையிடம் கூறினார், பிள்ளை அழுத்துகிறார். உலகை வென்ற ஆனந்தம் பிள்ளை முகத்தில்.

விடயம் இனிமையாக முடிந்தது.

இது ஒரு சிறு விடயம். எவ்வளவு புத்தி சாதுரியமாக இந்தத் தாயார் விடயத்தைக் கையாண்டார்! இரு பகுதியும் திருப்தியாக மகிழ்வாகச் செல்கிறார்கள்!

இதுவே நம்மவர் ஒருவரானால் எத்தனை மறுதலிப்பு, பிரதிபலிப்புக்கு இந் நிகழ்வு ஆளாகும்!

தர்க்கம், எதிர்ப்பு என்று பலமான தாக்கங்கள் உருவாகு மல்லவா!

இப்படி நுணுக்கமாக விடயங்களைக் கையாளும் திறமை நமக்கு வேண்டும்!

நம்மில் எத்தனை பேருக்கு இப்படித் திறமையுள்ளது!.

## பயணப் பொருட் பட்டியல்

நீங்கள் குழந்தைகளுடன் குடும்பமாகப் பயணம் செய்கிறீர்கள். போயிருக்கும் இடத்தில் நித்திரையின் போது உங்கள் குழந்தை, எப்போதும் தனது கையில் வைத்தபடி அல்லது அணைத்தபடி நித்திரை கொள்ளும் பொம்மையையோ, பொருளையோ கேட்டு அடம் பிடித்து நித்திரை கொள்ளாது உங்களைப் படுத்துகிறது.

இது தவிர சிறிது வளர்ந்த பிள்ளைகளானால் தானாகவே ஏதாவது படம் வரைந்தோ அல்லது தானாக அடுக்கி விளை யாடும் சில பொருட்களுக்காக ஏங்கி, கவலைப்படுவார்கள். இவைகளைப் போகும் அவசரத்தில் நீங்களும் மறந்திருப்பீர்கள்.

இதற்கு மிக சுலபமான ஒரு வழி இருக்கிறது.

நீங்கள் பயணத்தின் போது எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்கள் அனைத்தையும் ஒரு பட்டியலிடுங்கள்.

உங்கள் பயணப் பெட்டியை அடுக்கும் போது சரியாகப் பார்த்துப் பார்த்து அடுக்குங்கள். இதில் அப்பாவின் பொருட்கள், அம்மாவின் பொருட்கள், பிள்ளையின் பொருட்கள்,

போகும் இடத்து விருந்தினர் பரிசு உட்பட எழுதுங்கள்.

கணனியில் கூட இந்தப் பட்டியலைப் பதிந்து வைத்துத் தேவையான போது பிரதி எடுத்து பார்த்துப் பார்த்து பொருட்களை அடுக்கலாம்.

இப்படியானால் பெரும்பாலும் பொருட்களை மறந்து விட சந்தர்ப்பம் அமையாது. இப்படித்தான் நான் செய்கிறேன். இது எனது அனுபவம்.

உங்களுக்கும் பயன்படுமா? சிந்தித்துப் பாருங்கள்.

## காலையுணவின் முக்கியத்துவம்

(23-5-2005ல் இலண்டன் தமிழ் வானொலியின் "ஓடி விளையாடு பாப்பா" நிகழ்வின் அனுபவக் (அவசியக்) குறிப்பில் இடம் பெற்ற குறிப்பு இது.)

காலையுணவை எல்லோரும் முக்கியப்படுத்தி உண்பதில்லை. ஆனால் காலையுணவு உட்கொள்ளுதல் மனித வாழ்வில் மிக முக்கியமான ஒரு நிகழ்வாகும். நாளின் சக்தியைக் காலையுணவு காலையிலேயே தருகிறது.

காலையுணவைத் தவிர்ப்பவர்களுக்குக் குருதிச் சுற்றோட்ட நோய் வரும் ஆபத்து அதிகளவாக உள்ளது.

புகைப்பவர்களுக்கு உடற்பாரம் அதிகரித்து மதுபாவனை அதிகரிப்புக்கும் ஆளாகிறார்கள்.

என்ன!! மூச்சுத் திணறுகிறதா?.. ஆய்வுகளின் கண்டுபிடிப்பே இது. அமெரிக்க ஆய்வின் படி காலையுணவு உண்பவர்கள் காலையுணவு உண்ணாதவர்களிலும் பார்க்க நோய் வாய்ப் படும் தன்மையைக் குறைவாகப் பெறுகின்றனர்.

காலையுணவு நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெருக்குகிறது. அதே நேரம் இரண்டாவது வகையான நீரிழிவு நோய் வராது தடுக்கிறது.

நாளின் தொடக்கத்தில் அதாவது காலையிலேயே இரத்தத்தில் நிதானமான சீனிச் சத்து உணவில் விருப்பத்தையும், மன அழுத்தம் உருவாகாமலும் சீர் செய்கிறது.

என்ன! உங்களில் எத்தனை பேர் காலையுணவு உண்ணாது நாளைத் தொடங்குகிறீர்கள்?

சரி! இனியாவது காலையுணவு உண்ண ஆரம்பிக்கலாமே!

## இப்படி ஏசுகிறீர்களா?

(இதுவும் 10-1-2006ல் அனுபவக் குறிப்பாக இதே வானொலியில் இடம் பெற்றது.

"எத்தனை தரம் உனக்குச் சொல்வது?"

"உனக்கு இன்னும் விளங்கவில்லையா?"

"ஏன் இதை முதலிலேயே உனக்கு விளங்கிக் கொள்ள முடியாதா?"

இப்படி உங்கள் பிள்ளைகளை நீங்கள் ஏசும் போது நீங்கள் பிள்ளைகளுக்கு வேதனையையே விதைக்கிறீர்கள்.

இந்த வார்த்தைகள் 'நீ புத்தியில்லாதவன்! மடையன்!' எனும் கருத்தை மறைத்து வைத்திருக்கிறது அல்லது மறைமுகமாகக் கூறுகிறது.

பிள்ளையின் உணர்வுகள் தேவைகள் எனும் நிலையில் எம்மை வைத்துப் பிள்ளையை நாம் கவனிக்க வேண்டும். அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும். உங்கள் பிள்ளை உங்களோடு ஒத்துழைத்து நல்லது செய்யவே விரும்புகிறது.

மிகச் சிறு பிள்ளையானால் அதற்குத் தன் மனதில் உள்ளதை அழகான சொற்களில் உங்களுக்கு விளங்க வைக்க முடியாது. இந்த நிலையில் இதை நாம் விளங்க முடியாத போது, பிள்ளைக்கு விரக்தி, வெறுப்பு உணர்வு வருகிறது.

ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவர்கள் அழுகிறார்கள், உதைக்கிறார்கள், பிறாண்டுகிறார்கள், அடிக்கிறார்கள், பொருட்களை வீசி எறிகிறார்கள்.

உங்கள் பிள்ளை அருகில் அமருங்கள், அவர்கள் கரத்தை ஆதரவாகப் பிடித்து நீங்கள் அவருக்கு உதவி செய்ய விரும்புவதாகக் கூறி இரு பகுதிக்கும் நன்மை தரும் தீர்வைக் காணுங்கள்.

ஆச்சரியமான விளைவைக் காணுவீர்கள்.

அன்பான அணைப்பு ஒரு அதிசய அட்சய பாத்திரம்.

இது உங்களுக்குத் தெரியாதது அல்ல.

## நட்பும் நடிப்பும்

மூத்தவர்களை மதிப்பதென்பதும், நல்ல நாட்கள், பெருநாட்களில் வயதுக்கு மூத்தோரிடம் ஆசீர்வாதம் வேண்டுதல் என்பதும், பழைய கலாச்சாரம். புதிய உலகம் வேறு மாதிரியானது.

என்ன கூறுகிறேன் என்று ஆச்சரியப் படுகிறீர்களா!.

அந்த இரண்டு குடும்ப நண்பர்கள் திருமண வெள்ளி விழாக்களுக்கு, சீதா வீட்டிற்கு அழைப்பு வரவில்லை. நகரத்தில் வாழ்க்கை அனுபவமும், வயதிலும் மூத்த தம்பதிகளே சீதாவும் ராமனும். அழைப்பு வராததால் மனது சிறிது கசங்கியது போல உணர்வு கொண்டனர் சீதாவும் ராமனும்.

பின்பு கேள்விப்பட்டனர். அவை பிள்ளைகளின் ஏற்பாட்டில் நடந்த ஆச்சரியக் கொண்டாட்டங்கள் என்று. அதிலும் ஒரு குடும்பத்திலேயே, பிள்ளைகள் குடும்பத்தை அழைத்தும், பெற்றவர் குடும்பத்தை அழைக்காமலும் என்று தவறுகள் நடந்துள்ளது என்றும் அறிந்தனர்.

இதில் ஒரு விழாவிற்கு ஒரு குழுவினரின் வேண்டுகோளின் படி சீதா வாழ்த்துப்பாவும் எழுதிக் கொடுத்துள்ளாள். அது வேறு விடயம்.

இந்த இரண்டு குடும்பத்து இளைய பிள்ளைகளுடன் சீதா மிக அன்பாகப் பழகுவாள். முகநூலில் கூட அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளாள். அப்படி இருந்தும் இப்படி நடந்துள்ளது. இதை சிறிது மனவருத்தத்துடன் சீதா என்னிடம் கூறினாள்.

இப்படி நடந்ததின் தவறு யாருடையது?

பெற்றவரின் கொண்டாட்டத்தை ஆச்சரியமாக நடத்துவது சரி. ஆனால் பெற்றவரின் மனதுக்குப் பிடித்த மாதிரித் தானே விழாவை நடத்த வேண்டும்!.

இங்கு பெற்றவர்கள் தமது உறவுகள், நண்பரது பெறுமதிகளை பிள்ளைகளுடன் நாளாவட்டத்தில் கலந்து பேச வேண்டும்.

உறவின் பெறுமதி, தராதரம் அனைத்தும் பிள்ளைகளுக்கு எடுத்துக் கூறப்பட வேண்டும். அப்போது தான் பெற்றோர் பழகும் முறை, உறவின் தரம் என்பவைகளைப் பிள்ளைகள் அறிவார்கள். இப்படிப் பேசாவிடில் பிள்ளைகள் தமது நட்பு வட்டத்தைத் தானே, தாம் ஒழுங்கு பண்ணும் விழாக்களுக்கு அழைப்பார்கள்!..

விழாவிற்கு வந்தவர்களை ஒளி நாடாவில் பார்த்த போது, இவ்வளவு தூரம் நாம் முக்கிய மற்றவர்களாகி விட்டோமே என்று சீதா மனம் சிணுங்கினாள்.

"இதென்னப்பா!.. பெடியள் தங்களோடு ஒத்த கூட்டத்திற்குத் தானே அழைப்பு அனுப்புவார்கள்! " என்று ராமன் சீதா மனசைத் தேற்றினார்.

"எல்லாம் பெற்றவர்கள் தவறு" என்றாள் சீதா.

"பெற்றோரைக் குறை கூறாதீர். பிள்ளைகள் செய்வதற்கு பெற்றவர் என்ன செய்வார்?" என்றார் ராமன்.

"சரியப்பா இந்தக் கதையை விடுங்கள்". என்று கதையின் தலைப்பை மாற்றினோம் நாங்கள்.

இனி இந்த இரண்டு குடும்பத்துப் பிள்ளைகளும் சீதாவைப் பார்த்து "ஹாய்! அன்ரி!".. என்பார்கள். எல்லாம் மறந்து சிரித்தபடி "ஹாய்! " என்று சீதா எப்படிப் பேசுவாள் சொல்லுங்கோ!

இது ஒரு சிறு சம்பவமானாலும் காத்திரமான தாக்கமுடைய ஒரு சம்பவம். பிள்ளைகள் பெற்றொரின் உறவின் நெருடல் இங்கு தெளிவாகப் பிரதிபலிக்கிறது.

இச் சம்பவம் மற்றைய பெற்றோருக்கு ஏதாவது கூறினால் அது நன்மையே!

நட்பு நடிப்பா!. நடிப்பு நட்பா!.

## பிள்ளையின் கத்தலும் கூச்சலிடலும்

திடீரென ஒரு பிள்ளை குழம்பி கத்தி கூச்சலிடுகிறது. குறிப்பட்ட சப்பாத்தைப் போடு என்று தான் கூறினீர்கள். இதற்கு எதிர்ப்பு, பலத்த கத்தல், மறுப்பு. ஒரு பிள்ளை இப்படிக் கோபமடையும் போது முழுக் குடும்பத்தையே வேலை வாங்கிவிடுகிறது.

'என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்களும் பலமாகக் கத்தப் போகிறீர்களா? குழந்தையைக் கவனிக்கப் போகிறீர்களா அல்லது அலட்சியம் பண்ணிக் காலுறையுடன் போகவிடப் போகிறீர்களா?'

"பிள்ளையை நோக்கிக் கத்தாதீர்கள்!".. என்கிறார் முழுநேர பேச்சாளர், குழந்தைகள் பின்னணியில் பலகாலம் வேலை செய்த ஒரு டெனிஸ் விற்பன்னர்.

இப்படிக் கத்தும் பிள்ளையை அடக்க ஒரு தொகைச் சக்தியைப் பாவிக்க வேண்டி வரும். நாமே சத்தம் போடும் போது, பிள்ளை நம்மோடு நல்ல மாதிரி சேர்ந்திருக்கும் நேரமும் வடிந்து போய், கோபமான பிள்ளையோடு சேர்ந்திருக்கும் அசிங்கமான நிலைமை உருவாகிறது. இதனால் பிள்ளையுடன் வீட்டிலிருப்பதிலும் வேலையிடத்தில் அதிக நேரம் தங்கி வரலாம் என்ற சிந்தனையும் உருவாகிறது. வேலையிடத்தில் நாம் நினைத்தபடி நடக்க முடியும். விடயம் சரிவர விளங்காது பிள்ளைகள் சொல்வதைக் கேட்காது எதிர்ப்பார்கள். அவர்களோடு சேர்ந்திருப்பது எப்போதும் நாங்கள் நினைப்பது போல இருக்காது.

நீங்கள் எடுத்த ஒரு முடிவை, தீர்மானத்தை எதிர்ப்பதற்குப் பிள்ளைகள் கோபத்தை ஒரு எதிர்ப்பு வழியாக பாவிப்பார்களானால் நீங்கள் உங்கள் நிலைப்பாடில் இருந்து வழுவாது திடமாக நிற்க வேண்டும் என்கிறார். ஃபிளெமிங் பீட்டர்சென்.

நீங்கள் உங்கள் தீர்மான நிலையிலிருந்து பின் வாங்கினால் அது பரிதாபகரமானது. இப்படிக் கத்தி, கோபத்தைக் காட்டினாலோ, நீண்ட நேரம் தொடர்ந்து செய்தாலோ தன் விருப்பம் நிறைவேறி விடும் என்று பிள்ளைகள் எண்ணுவார்கள்.

அதனால் பிள்ளையிலும் பார்க்க உங்கள் நிலைப்பாடில் இருந்து விலகாது பிள்ளையிலும் பார்க்க திடமாக நில்லுங்கள்.

சிறு விடயங்களில் வேணுமானால் பிள்ளையைத் திருப்பதிப் படுத்த நீங்கள் மாறலாம். அப்படி மாறும் சந்தர்ப்பங்களில், ஆனால் கட்டாயமாக அன்று பிள்ளையைப் படுக்கப் போடும் போதோ, அல்லது சரியான ஒரு சமயத்தில் " நான் யோசித்துப் பார்த்தேன் எனது முடிவு பிழை தான் என்று நினைத்து மாற்றினேன். நீ கோபப்பட்டுக் கத்தியதற்காக நான் மாறவில்லை ' என்பதை உறுதியாகக் கூறிவிட வேண்டும்.

சிலவேளை பிள்ளையின் கோபம் உங்களை எதிர்ப்பதற்காக அல்ல, இரவில் படுக்கைக்குப் போகும் நேரத்திலும் சிறிது கூடுதலாக விழித்திருக்கவோ, அல்லது சாப்பாட்டிற்குப் பின்னான இனிப்பு உணவு சிறிது கூடுதலாகப் பெறவோ என்றால்..

பெற்றவர்கள் அதைப் பண்பாக பிள்ளைக்கு எடுத்துக் கூற வேண்டும் இப்படிக் கத்திக் கூச்சலிட்டுக் காரியம் பெறுவது தவறு என்று.

அப்படியும் கேட்காது கத்திக் குளறிக் கூச்சலிட்டால் அதைக் கவனிக்காது, அலட்சியம் செய்ய வேண்டும். இல்லை உங்கள கண் முன்னால் வந்து நின்று நின்று கத்தினால் இடத்தை விட்டு வேறு இடத்திற்கு அவரை மாற்றி, அங்கிருந்து கத்தி முடித்து அல்லது அழுயை நிறுத்தினால் தான் மேற்கொண்டு பேச முடியும் என்று திடமாக நடக்க வேண்டும். திருப்பித் திருப்பியும் நாம் அப்படிச் செய்து அவர் அழுகையை நிறுத்திய பின் இவை அழுது பெறும் காரியங்கள் அல்ல என்பதை உணரப் பண்ண வேண்டும்.

நீங்கள் (பெரியர்கள்) தடுமாறினால் பிள்ளைகள் உங்களில் இடம் கண்டு கொள்வார்கள். இப்படிக் கத்தியே எல்லாக் காரியமும் பெறமுடியும் என்று முடிவு கொள்வார்கள்.

பிள்ளைகள் உங்கள் நெருக்கத்தையும் உங்கள் கவனிப்பையும் எப்போதும் விரும்புவார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

# ஈ... அடிச்சான் கொப்பி

கண்களை மூடினால் உலகே இருண்டதாக எண்ணும் பூனையாக இன்றி சரண் யார் எது செய்தாலும் அதையே தானும் செய்து முடிக்கும் கெட்ட குணம் கொண்டவனாக இருக்கிறான். ஆனால் இவன் மிகத் திறமைசாலி. தன் சுய சிந்தனையில் மிக நல்ல சிறந்த செயல்களைச் செய்யலாம்.

இது சரணின் மகன் சாந்தனுக்குப் பிடிக்கவேயில்லை. மற்றவனைப் பார்த்து செய்வதை 'ஈ அடிச்சான் கொப்பி' என்று கூறும் வழக்கம் உண்டு.

ஒருவன் மற்றவனைப் பார்த்து எழுதினானாம். இரவு. முதலில் எழுதியவன் எழுதும் போது பூச்சி ஒன்றும் அதில் விழுந்து இறந்து விட்டதாம் அப்படியே கொப்பியை மூடிவிட்டான். பூச்சியும் செத்து எழுத்தோடு ஒட்டுப்பட்டு விட்டது. பார்த்து எழுதியவன் அதே போல பூச்சியையும் தேடி தனது எழுத்தோடு ஒட்டி விட்டானாம். (ஈ அடிச்சான் கொப்பிக்கு வழங்கும் கதை இது).

'என்னப்பா! நீங்கள்! ..அதே போல ஏன் செய்ய வேண்டும்?..' என்று தடுத்தாலும் சரண் கேட்பதேயில்லை.

சரண் பொறாமைத் தினவெடுத்து, ஆற்றாமை, பொறாமைச் செங்கதிர்ப் பரப்பலில் வெந்து போகிறான். பிறர் செய்வதை அப்படியே தானும் செய்து மனம் ஆறுகிறான். தன் திறமையை உணராது.

இதை எண்ணி எண்ணி சாந்தன் வெட்கக் குமிழிகளில் தன்னை அமிழ்த்துகிறான்.

பெற்றவரின் நல்ல செயல்களைப் பிள்ளைகள் பின்பற்ற வேண்டும். இங்கு பெற்றவர் செயலால் குறுகிவிடுகிறான் சாந்தன்.

'அப்பா! உங்கள் திறமை சிறந்தது. உங்களால் முடியும். புதிது புதிதாக ஏதாவது செய்யுங்களப்பா!கண்ணன் மாமா, சுந்தர் மாமா செய்வதையே நீங்களும் செய்ய வேண்டாமப்பா!..' என்று ஓதியபடியுள்ளான் அப்பா மாறுவார் என்ற நம்பிக்கையில்

# தமிழ் செழிக்க வேண்டும்

அந்தத் தொலைபேசிக் கலந்துரையாடலின் பின் மனதில் ஒரே குடைச்சல், கவலையாக இருந்தது. அதனால் இதை எழுத எண்ணமும் உருவானது.

இலங்கையில் வசிக்கும் என் அக்கா வாணியின் மகளுக்கு இலண்டனில் திருமணம். அதற்காக வாணி அக்காவும் அத்தானும் இலண்டன் வந்து எனது ஒன்றுவிட்ட அண்ணா ரகு வீட்டில் தங்கியிருந்தனர். நான் தொலைபேசி எடுத்த நேரமெல்லாம் அவர்கள் வீட்டில் இருக்கவில்லை. தொலைபேசி எடுத்தே களைத்துப் போனேன். இறுதியாக எடுத்த போது மறுமுனையில் ' ..ஹலோ! ' என்ற குரல் கேட்டது.' நான் யேர்மனியிலிருந்து வாணியின் தங்கை ராதா கதைக்கிறேன். அண்ணா இல்லையா? ' ..என்றேன். மறு பக்கத்தில் அவ்வளவு ஆர்வமான பதில் இல்லை. 'நீர் மகளா பேசுவது?'என்றேன். ஓ என்று குரல் இழுபட்டது.

விடயம் என்னவென்றால் பிள்ளைக்கு தமிழ் பேசவரவில்லை. பதினைந்து வயதாம். ' நீங்கள் தமிழர் தானே! தமிழ் தெரியாதா? '..என்றேன் மிக வீரப் பிரதாபமாக '..பேசினால் விளங்கும் என்றாள். என்ன படிக்கிறீர்கள், சகோதரர்கள் தமிழ் பேசுவார்களா? வீட்டில் ஆங்கிலம் தான் பேசுவீர்களா? என்றெல்லாம் கேட்டு அறிந்தேன். வீட்டில் பெற்றோர் தமிழ் பேசியிருந்தால் தான் பிள்ளைகளும் தமிழ் பேசுவார்களே!

பின்னாலே அடுத்த அறையிலிருந்து எனது கணவர் ' பேசாமலிரேன்! உனக்கேன் இந்தக்கதை!' என்று என்னை அதட்டினார்.

தமிழ் தெரியாது என்ற பதிலை அங்கிருந்து நான் எதிர்பார்க்கவே இல்லை. எனக்குத் தூக்கிவாரிப் போட்டது போல இருந்தது.

அண்ணன் ரகு ஒரு வைத்தியரோ என்சினியரோ இல்லை. அதாவது உயர் சமூக அந்தஸ்து உள்ளவரும் இல்லை.

அண்ணியின் அப்பாவோ ஊரில் வெங்காயத் தோட்டம் வைத்து சம்பாதித்தார். அண்ணி கூட காலையில் பெற்றொருடன் தோட்டம் போய் விட்டுத் தான் பாடசாலை போய் படித்தார். இப்படி அடிமட்டம் அல்லது நடுத்தர வாழ்வு அடிப்படை உள்ள அண்ணியா தன் பிள்ளைகளை ஆங்கிலத்தில் வளர்த்துள்ளார்! இது என்ன ஒருவகைத் தாழ்வு மனப்பான்மையில் வந்த மனப்பிறழ்வா? எப்படி தன் அன்னை மொழியைக் கைநழுவ விட்டார்? தமிழ் பாடசாலைகளுக்குக் கூட பிள்ளைகளை அனுப்பவில்லையா?

எமது தமிழினம் எங்கே செல்கிறது! என்று பலவாறான கேள்வி, குழப்பம் உருவானது.

புலம்பெயர்ந்த துருக்கி இன மக்கள் தமது பிள்ளைகளுக்கு 3,4 வயது வரும் வரை அந்நிய மொழிப் பாலர் பராமரிப்பு நிலையங்களுக்கு தம் பிள்ளைகளை அனுப்புவதில்லை. தாங்களாக, பிள்ளைகளை மொழி, கலாச்சாரம், தமது உணவு என்று பழக்கிய பின்பே பிறமொழிப் பாலர் நிலையங்களுக்கு அனுப்புகிறார்கள். அந்த அளவுக்குத் தமது மொழி கலாச்சார விழுமியங்களைப் பாதுகாக்கின்றனர். தமது மரபு வழி வழுவுவதை விரும்புவதில்லை.

நம்மவர்களோ தலைகீழாக உள்ளனா. இலண்டன் என்பது சொர்க்க புரி என்று எண்ணி ஆங்கில மோகத்தை அணைத்து வாழ்கிறார்கள். அண்ணை ரகு மட்டுமல்ல, பலர் நமது வேர் எனும் மொழியை இழுத்து அறுக்கின்றனர்.

மறு பகுதியில் மண்ணுக்கு, மொழிக்காக சீவ மரணப் போராட்டம் நடக்கிறது.

ஒரு பிள்ளை தன் தாய்மொழியில் வல்லுனன் ஆகவோ அல்லது நன்கு பரிச்சயமாகி, சரளமாகப் பழகினாலோ அது பிறமொழி உயர்வுகளுக்கு நல்ல ஒரு ஏணியாகும் என்கிறார்கள். நல்ல படிக்கட்டாகும் என்கிறார்கள், மொழியியல் வல்லுனர்கள்.

தமிழன் என்பது ஆங்கிலம் பேசினால் இல்லாமற் போய் விடுமா?

அல்லது வெள்ளைத் தோல் தான் எமக்கு வந்து விடுமா? உண்டு. உடுத்துப் படுத்த எமது மொழி எப்படி எம்மை விட்டு விலக முடியும்? இது யாருடைய பிழை? நிச்சயமாகப் பெற்றோர் விடும் பிழை தான். பெற்றவரின் அறியாமை அல்லது அறிய மனம் இல்லாமை தான்.

இப்படியான குடும்பப் பிள்ளைகளுடன் நான் கூடியளவு தமிழில் தான் உரையாடுகிறேன். இது தான் என்னால் முடிந்த ஒன்று.

மங்கு தமிழ் என்று முதலில்
சங்கு ஊதுவது தாய்ப் பொருமாட்டி தான்.
ஆங்கில மோகம். அந்நியமொழி
ஓங்கி வளருது தமிழை உதைத்து.
கெஞ்சுதல் கொஞ்சுதல். மிஞ்சுதல்.
அஞ்சுதலும் அருமைத் தமிழானால்
இஞ்சு அளவும் எம்மை விட்டு
விலகாது எம் கொஞ்சு தமிழ்.
அம்மா அப்பாதமிழ் பேசி
சும்மா அலுப்பதும் தமிழாகி
எம் சுவாச ஒலியும் தமிழானால்
சுருண்டு. வரண்டிடாது தமிழ் மொழியும்.

## அனுபவக் குறிப்பு

பிள்ளைகள் பொருட்கள் போல வாகனங்களில் ஏற்றி இறக்கப்படுவதிலும் பார்க்க, அவர்களை நடக்க, துவிச்சக்கர வண்டி ஓட்ட விடவேண்டும். தமது கால்களை, உடலைப் பாவிக்க அனுமதிக்க வேண்டும்.

ஒரு தாய்க்கு ஒரு கைக் குழந்தையும், நடக்கக் கஷ்டப்படும் ஒரு பிள்ளையும் இருந்தால், பிள்ளை வைத்துத் தள்ளும் வண்டிலில் சிறு குழந்தையையும், நடக்கக் கஷ்டப்படும் முதற் பிள்ளைக்கு, நின்று கொண்டு போக, ஒரு தொங்கும் வண்டியும் தள்ளு வண்டிலில் இணைத்து, பெற்றோர் அதைத் தள்ளிக் கொண்டு போகிறார்கள்.

இது மிகவும் ஆரோக்கியமற்றது. சுகாதாரமற்றது. நடக்கும் குழந்தையை நாம் முடமாக்குகிறோம்.

இப்படிப் பொம்மையாக வளர்க்கும், வளரும் பிள்ளைகள், தமது பதின்ம வயதில் (teenage ல்) இருதய நோயோ, 2வது நிலை நீரிழிவு நோயோ, வயதுக்கு மீறிய எடை பெறும் நிலையோ உருவாகிறது.

சுறு சுறுப்பின்றி இருப்பதற்கு அதிகரித்த எடையும், தொலைக் காட்சி, கணனி போன்ற அதீத பாவனையும் இன்னொரு காரணமாகிறது. இதே நேரம் சுகாதாரமற்ற கொறிக்கும் உணவும் ஆரோக்கியமற்றதாகிறது.

உதாரணமாக:- கோலா, சிப்ஸ், கொழுப்புகள் கொண்ட, கலோறிகள் அற்ற அதிவேக உணவுகள் (பாஸ்ட் பூட் fast food) ஆகும்.

உடல் பருமனான பிள்ளைக்கு சமூகத்திலும் மதிப்புக் குறைந்து காணப்படும். இவர்கள் பிறரால் வித்தியாசமாக நோக்கப்படுகிறார்கள். அதனால் பெற்றவர் முதலில் சுறு சுறுப்பு, மகிழ்வானவராகி, பிள்ளையையும் அது நெருங்கச் செய்ய வேண்டும்.

எம்மைப் பார்த்தே எமது பிள்ளைகள் அனைத்தையும் பழுகுகிறார்கள். அதற்கு நாம் சிறந்த முன் மாதிரியாக வேண்டும்.

நீங்கள் விளையாட்டு வீரர்களாகத் தேவையில்லை. வீட்டில் உடற் பயிற்சி செய்தாலே பிள்ளைகளுக்கு அது தொற்றிவிடும்.

அசையுங்கள் உங்கள் உடலை! அசையுங்கள் உங்கள் அங்கங்களை அசையுங்கள்! அதைப் பிள்ளையும் பார்த்துச் செய்திடும்!

## பயிற்சி உலா - சிறுவர் இலக்கியம் 1

வெளியே வெய்யில். மூன்றிலிருந்து ஆறு வயதுப் பிள்ளைகள் கும்மாளம் அடித்து விளையாடுகிறார்கள். அவர்களை மேற்பார்வை பார்த்தபடி பெரியவராய் நான் மட்டும் வெளியே தனிய.

இந்த உலகில் நாமும் உலா வரவேண்டும். பக்கத்து அறைப் பெரிய பிள்ளைகள் போல நாமும் விளையாட வேண்டும் என்ற உணர்வில், இறக்கையின் உள்ளேயிருந்து தலை நீட்டிக் குஞ்சுகள் வெளியே பார்ப்பது போல 3 வயது டானியலும் முஸ்தபாவும் பூஜ்யத்திலிருந்து மூன்று வயதுப் பகுதிக் குழந்தைகள் அறையிலிருந்து மெல்ல மெல்லத் தயங்கியபடியே தங்கள் பக்கத்தால் வெளியே வந்தனர்.

இந்த வெளி உலகத்தில் அவர்களும் தனியே உலா வந்து உலகைச் சமாளிக்க வேண்டுமே! அவர்கள் தமது சிறு படலையைத் திறக்காமல் வெளியே வரும் ஆவலில் குட்டி போட்ட பூனை போல படலைக்கு உள்ளேயே வளைய வந்தது தெரிந்தது. ஆயினும் அவர்கள் வெளியே வருவதற்குரிய ஆடை போட்டிருப்பதும் தெரிந்தது. நான் நிற்பது தெரிந்தே அவர்களது அறைப் பெரியவர்கள் அவர்களை வெளியே வர அனுமதித்துள்ளதும் புரிந்தது.

அக் குழந்தைகளுக்கு ஒரு அங்கீகாரம் தேவைப்பட்டது. எம்மோடு இணைய ஒரு அனுமதி தேவை என்பது அவர்கள் தயக்கத்தில் தெரிந்தது. அதைப்பரிந்து கொண்ட நான் 'ஹாய்! டானியல்! ஹாய்! முஸ்தபா! வெளியே விளையாடப் போகிறீர்களா? ..' என்று வார்த்தையால் அவர்களை அணைத்து, வாங்களேன்..விளையாடுவோம் என்று நன்கு சிரித்தபடி அழைத்தேன். அவ்வளவு தான் முகத்தின் தயக்கம் முழுதுமாய் மாற, என் ஏற்றுக் கொள்ளலின் மகிழ்வில் ஓடி வந்து இணைந்து ஒவ்வொரு விளையாட்டிலும் பத்துப் பத்து நிமிடங்கள் முயற்சித்தனர். இப்போது நான் பார்த்தும் பார்க்காதது போல, ஆனாலும் அவர்களை மறைவாகக் கண்காணித்தபடி நின்றேன்.

அவர்கள் தமக்குள் பேசிச் சிரித்தபடி பாய்ந்து ஓடி விளையாடி அனுபவித்தனர். தமக்குத் துணையாக ஒரு பெரியவர் தயார் நிலையில் இப்போது உள்ளார் எனும் பாதுகாப்பு உணர்வு அது. முழு இடமும் தமக்குச் சொந்தம் போல இயல்பாக மகிழ்ந்து விளையாடினார்கள்.

குழந்தைகளுடன் ஒரு புன்முறுவல், ஒரு வார்த்தையின் அணைப்பு, ஒரு நெருக்கம் மிக அன்னியோன்னியத்தைத் தந்திடும். நிறைந்த மனோபலத்தை இது அவர்களுக்கும் தந்திடும்.

இந்தத் தொல்லை மிகுந்த வெளி உலகில் அவர்கள் தனியே தம்மைச் சமாளிக்க வரும் உலா, ஒரு பரிசோதனை இது. 3வயது தான் இவர்களுக்கு. ஒரு பெரிய மனிதர்களின் ஆசாபாசத்துடன் மலர்ந்த தளிர்கள்.

5, 6 வயது வலியவன் இவர்கள் விளையாட்டைத் தடுப்பான். விளையாடும் பொருளைப் பிடுங்குவான். போகும் போது வேணுமென்றே இடிப்பார்கள். நல்ல சந்தர்ப்பங்களைத் தட்டி விடுவார்கள். தட்டி விட்டு ஒரு வார்த்தையும் பேசாது, மன்னிப்பும் கேட்காது விலகித் தம் காரியம் பார்ப்பார்கள். இவைகளைக் கவனித்துச் சரியானபடி இயங்கப் பண்ணலே எமது கடமை. இந்த உலகத்துத் தொல்லை பெரியவர்களுக்கு மட்டுமல்ல.

வலியவன் மெலியவனை வருத்துதல், அழுத்துதல் சிறு உலகத்திலும் உண்டு. இதில் தான் டானியலும், முஸ்தபாவும் யோசித்து யோசித்து இறங்குகிறார்கள் என்பது உங்களுக்குப் புரிகிறதா?

பெரியவர்கள் கண்காணிப்பில் சிறுவர்களைத் தனியே இயங்கப் பண்ணலே சிறந்த வழியாகும்.

தேவையற்று நாம் மூக்கு நுழைப்பது அவர்களைப் பலவீனப் படுத்தும். தன் காலில் நிற்கும் தகுதியைத் தொலைக்கும்.

## பயிற்சி உலா - சிறுவர் இலக்கியம் 2

இது ஒரு மேடு பள்ளமான விளையாட்டிடம். மிக அழகான படிகளோடு எல்லா இடத்தையும் பாவிக்கும் முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலே மணல் விளையாட்டு, மிதி வண்டி ஓடல் போன்றவையில் அலுப்படைந்த டானியலும், முஸ்தபாவும் மரக்குத்திப் படிகளில் இறங்கிக் கீழே போய்விட்டனர். இவர்களது உடல் இயக்க சக்தி மிக அருமையாக வளர்ந்து, நரம்பு, எலும்பு யாவும் நன்கு இயங்குவது இதிலிருந்து தெரிகிறது.

தொட்டில் பிள்ளைகள் (3 வயதிற்குக் கீழானவர்கள்) அந்த மரக்குத்தியில் இறங்கக் கூட பெரியவர்கள் உதவி தேவை. இவர்கள் போனதற்கென்ன, நான்கு அடி நடந்து, தயங்கித் தயங்கிப் பள்ளத்திலிருந்து என்னைப் பார்த்தனர். அதன் கருத்து, நாம் அங்கே போய் விளையாடப் போகிறோம், நீ என்ன சொல்கிறாய், போகட்டுமா, என்பது தான். தொட்டில் பிள்ளைகள் ஒரு பெரியவரோடு தான் அங்கு போக முடியும். அப்படி அவர்கள் பெரியவரை மீறிப் போனாலும், பெரியவர்கள் பின்னாலே போய்விடுவார்கள். தனியே போக விடமாட்டார்கள். (இங்கு குறிப்பிட வேண்டும், நான் எப்போதும் 3க்கு மேற்பட்ட வயதுடையவர்களோடும், 3ம் வகுப்பு வரையுமான பிள்ளைகளோடு தான் வேலை செய்கிறேன்.)

கீழே 4, 5 அடி உயரத்தில் ஒரு செயற்கை மணல் மேடு உள்ளது. அதில் பெரிய பிள்ளைகள் தான் ஏறிக் குதிப்பார்கள். ஒரு பகுதி சாய்வாக யாவரும் ஏறும் விதத்திலும், மறு பகுதி செங்குத்துச் சாய்வாகவும், மூன்றாவது பகுதி செங்குத்தாக ஆனால் அதில் சுலபமாக ஏறி இறங்கக் கயிறும் கட்டப்பட்டுள்ளது. கயிறு பிடித்து ஏறி இறங்க முடிந்தவர்கள் மரக் குத்திகளிலும் ஏறி மேலே போகும் வசதியும் உண்டு. நிதானம் (பலன்ஸ்) அற்றவர் கயிறைப் பிடித்துக் கொண்டும், மரக்குத்தியில் ஏறி மேலே போக முடியும்.

ஆக, அது ஒரு சிறுவர் சாகச விளையாட்டு இடம். இங்கு தான்

இவர்கள் விளையாட ஆசைப்பட்டனர். ' அங்கே போய் விளையாடப் போகிறீர்களா? ' என்றேன். ஆமாம் என்று தலையாட்டினார்கள் ' சரி போய் விளையாடுங்கள்! நான் உங்கள் மீது கண் வைத்தபடி இருக்கிறேன், பயமின்றி விளையாடுங்கள்' என்றேன். அனுமதி கிடைத்த மகிழ்வில் குடு குடுவென மேட்டுப் பகுதியை நோக்கி ஓடினார்கள்

இப்போது நானும் இவர்களைத் துல்லியமாகப் பார்க்கக் கூடியதாகப் பல்கனி போன்று, அரச குடும்பத்தினர் நின்று கையசைப்பது போன்று ஒரு மரக் கொட்டில் மாடத்தின் ஓரமாகச் சென்று வசதியாக நின்று கொண்டேன். அதே நேரம் என் காதும் கவனமும் என் பின்னால் விளையாடும் மற்றப் பிள்ளைகளின் மீதும் இருந்தது. எங்கு அழுகைச் சத்தம் , அலறல் கேட்குமோ, அங்கு நான் உடன் பிரசன்னமாவேன். முடியாவிடில் இன்னொருவரை உதவிக்கு அழைப்பேன், அது வேறு விடயம்.

நீண்ட சாய்வான பகுதியால் தான் டானியலும், முஸ்தபாவும் ஏறுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அவர்களோ செங்குத்தான சாய்வான பகுதியால் முயற்சித்தனர். டானியல் விறுவிறென மேலே ஏறிவிட்டான். அவனோடு சோடியாக ஏறிய முஸ்தபா சறுக்கிச் சறுக்கி, உருண்டு உருண்டு விழுந்தான். நான் எனது இடத்தில் நின்று வாய்விட்டுச் சிரித்து விட்டேன். அவனால் ஏற முடியாமலேயே போய்விடுமோ, போய் உதவி கொடுக்க வேண்டுமோ என்றும் எண்ணினேன்.

டானியல் டெனிஸ் பையன். மேலிருந்து முஸ்தபாவை வரும்படி அழைப்பது தெரிகிறது. இருவரும் ஒரே வயதாயினும் முஸ்தபாவால் முடியவில்லை, டானியலால் முடிகிறதே

ஏன்? ஏன்?

ஆமாம் மிகவும் எளிமையான காரணம் தான். மிக மடைத்தனமான காரணமும் கூட.

சாப்பாட்டையும் ஊட்டி, சட்டையையும் மாட்டி, சப்பாத்து நாடா

வையும் கூட பெற்றவரே கட்டிக் கட்டி முஸ்தபாவின் தன்னம்பிக் கையை நொறுக்கி விட்டனர்.

தன்னம்பிக்கையிருந்தால் நிச்சயமாக அவன் டானியல் போலத் தடதடவெனச் செங்குத்துச் சாய்வில் தானாக ஏறியிருப்பான்.

இந்த இருவரில் டானியல் தான் தலைவனாக இருக்கிறான். நிர்வகிககிறான்.

இவை சாதாரண சிறு விடயங்கள் தான். இது பிள்ளைகளை எப்படிப் பாதிக்கிறது தெரிகிறதா?

பெரியவரின் மூக்கு நுழைப்பு இது பாசமாம்.

நான் பார்க்காத நேரத்தில் முஸ்தபாவும் மணல் மேட்டில் ஏறிவிட்டான் டானியலால் எவ்வகையிலும் முஸ்தபாவிற்கு உதவி செய்ய முடியாது. அவன் சிறுவன். முஸ்தபாவும் விடா முயற்சி கொண்டவன். அவன் பல தடவை முயற்சித்து மேலே ஏறியிருப்பான்.

இருவரும் மணல் மேட்டில் நீளவாக்கில் ஓடியும், அதில் இருந்த சிறு மரங்களைக் கட்டிப் பிடித்தும் விளையாடினார்கள். அது அலுத்ததும் டானியல் ஓடி வந்து மேட்டின் உச்சியில் நின்று கயிற்றைப் பிடித்தபடி என்னைப் பார்த்தான். அதைப் பிடித்தபடி கீழே இறங்க நெஞ்சுத் துணிவு வரவில்லை அவனுக்கு. ஒரு உந்துதல் தேவைப்பட்டது. அந்தப் பார்வை அதைத்தான் எனக்குக் கூறியது.

என்ன பிள்ளைக்கு முடியவில்லையா? இறங்க வேணுமா? நான் வந்து பிடிக்கட்டுமா? என்ற அர்த்தமற்ற கேள்விகள் இங்கு ஊக்கம் தராது. நான் நின்ற இடத்தை விட்டு நகராது ' டானியல்! ஞாபகம் வைத்திரு! நான் உன் மீது தான் கண்ணாக உள்ளேன்.'..என்றேன். என்னை அன்புடன் கனிவாகப் பார்த்து, சரி என்ற வகையில் தலையாட்டினான். கயிற்றைப் பிடித்தான் மளமளவெனக் கீழே இறங்கினான். நான் இரு கைகளையும் தட்டி ' கெட்டிக்காரன்! உன்னால் முடியும்'.. என்று உற்சாகமாகச் சத்தமாகக் கூறினேன். அவன் சிரித்து மகிழ்ந்தபடி பல தடவை கயிற்றைப் பிடித்து ஏறி இறங்கினான்.

முஸ்தபாவும் கயிற்றைப் பிடிப்பது , விடுவது என்று முயற்சித்தபடி இருந்தான். டானியலின் முன்னெடுப்புத் தான் முஸ்தபாவுக்கு இங்கு ஊக்குவிப்பாக இருந்தது. முஸ்தபாவும் பின்னர் வெற்றி கண்டான். தொடர்ந்த என் கைதட்டலும் 'நீங்கள் எவ்வளவு கெட்டிக் காரர்கள்!' என்ற என் புகழ்ச்சியும் இருவருக்கும் கிடைத்தபடியே இருந்தது.

அடுத்து டானியல் கயிற்றைப் பிடித்தபடி மரக் குத்தியில் ஏறினான்.

என் நெஞ்சு நடுங்கியது. இவன் கீழே விழுந்தால் பிஞ்சுத் தலை மரக்கட்டையோடு அடிபட்டால், அதை விட இது பெரிய பிள்ளைகள் விளையாடும் இடம். அவனால் முடியுமா என்று இப்படிப் பலவாறாக என் எண்ணம் ஓடியது.. என் எண்ணம் ஓடியபடி இருந்தது.

டானியலோ மளமளவெனக் கயிற்றைப் பிடித்தபடி சர்வ சாதாரணமாகக் குற்றிகளின் மீது நடந்தான். வெற்றி கண்டு விட்டான். கரகோசம் பாராட்டுடன் பெருமையாக நிமிர்ந்து விளையாடினான். பல தடவை முயற்சித்தான். இது டானியலின் முதல் முயற்சி.

அவனது திறமை,. சாகசத்தை, அவனது அறைப் பெரியவர்க ளிடம் அறிவித்தேன். 'ஆகா! அப்படியா! அவன் முன்பு அப்படி விளையாடவில்லை. இப்போதெல்லாம் புதிது புதிதாக அவன் ஆராய்ச்சிகள் செய்கிறான்' என்று மகிழ்ந்தனர். இனி அவன் விரைவில் பெரிய பிள்ளைகள் பிரிவிற்கு வந்து விடுவான்.

இப்போதெல்லாம் நானும் டானியல், முஸ்தபாவும் நல்ல சிநேகிதர்கள். வித்தியாச வேலை நேரங்களில் நான் உள்ளே போகும் போது அவர்கள் வெளியே ஏதாவது விளையாடியவாறு நிற்பார்கள். கண்டவுடன் ' உன்னைக் கட்டி அணைக்கட்டுமா? என்பேன. புன்னகையோடு தலையாட்டுவார்கள் சம்மதிப்பதாக. இறுக அணைத்து சில கணப்பொழுது மகிழ்வேன் அவர்க ளோடு. எனக்கும் இது திருப்தியான மகிழ்வுக் கணங்கள் தான்.

முஸ்தபாவின் பெற்றோர் மாலையில் வந்து அவனைக் கூட்டிப் போகும் போது, அவனைப் பச்சைக் குழந்தையைப் போல் தூக்கிப் போவதைச் சிலவேளைகளில் நான் காண்பதுண்டு. உள்ளூரக் கோபம் வந்தாலும், உலகைத் திருத்த முடியுமா வென்றும் எண்ணுவதுண்டு.

திருடனாகப் பார்த்துத் திருந்தி, திருட்டை ஒளிக்கும் நிலை தான் குழந்தை வளர்ப்பும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியே!

முற்றும்.

(படம்  ஒரு மழை நேரம். றப்பர் பாதணி, மழை மேலாடையுடன் என் பின்னால் ஒரு பிள்ளையை வைத்து குழந்தையாக நானும் சைக்கிள் ஓட்டினேன். தலைவியை இது கவர எங்களை  தன் கமராவுக்குள் அடக்கினார்.)



## அரை நேர வேலை அம்மா! அம்மா! என் அம்மா!

அம்மா கடமையை ஏன் மறந்தாய்?.
அம்மா நீயொரு பொம்மையம்மா.
அம்மா நாமம் உனக்கெதற்கு?
காலையில் எம்முடன் வெளிவந்து
மாலைக் கருக்கலில் வீடு வரும்
வேலை புரியும் அம்மாவே
என் வேதனையுனக்கேன் புரியவில்லை?.

குவிந்த தனிமைப் போர்வையுள்ளே
தவிக்கும் கணங்கள் இணை நடக்க
தொலைக்காட்சி, க்ணனி தோழியாக
கலைக்கிறேனே ஓய்வுப் பொழுதை.
நாலும் பேசி மனம் கலக்க
நல்ல தோழியாயேன் நீயில்லை?.
நான்கு சுவருக்குள் என் மகிழ்வு
நலமழிவதை நீ அறிவாயோ?.

பிள்ளையைப் பெற்றால் போதாதம்மா
கொள்ளை அன்பும் தேவையம்மா.
அள்ளியெடுத்து அணைக்க வேண்டும்.
ஆதரவு வார்த்தை தரவேண்டும்.
காணும் நட்புடன் மனம் திறக்க
காரணமெம் உறவின் தூரம்
பூரணமாக்க நெருங்கிடு அம்மா!
பூவான அன்பைத் தாவம்மா!.

பணத்தைப் பகட்டை நினைக்கிறாயே!
மனத்தை மகிழ்வைப் பாரம்மா!
தினமும் குடும்பக் குலாவலில் மகிழ
திட்டமொன்று தீட்டுவோமம்மா.

முழு நேர வேலையைக் கழுவி விடு!.
அழுமென் மனதைக் குளிர விடு!
அரை நேர வேலையை எடுத்து விடு!.
அருகினில் இருப்பாயா ஆசையம்மா!

## இதுவா இக் காலப் பிள்ளைகள் சிந்தனை!

தாரணியை எனக்குச் சமீப காலமாகத் தான் தெரியும். திருமணமாகி ஒரு மாதம் தான் கணவன் நரேனுடன் சண்டை பிடித்தபடியே இருந்தாள்.

சீக்கிரமாக ஒரு பிள்ளையைப் பெறுங்கள் சண்டை ஓடி ஒளிந்து விடும் என்றேன் நான். " அது வேறு ஒரு செலவு அல்லவா? " என்றாள் தாரணி திடமாக.

" பிள்ளை ஒரு செலவா? " என்றேன். " வேறு என்ன? " என்றாள் தாரணி. இவள் மட்டுமல்ல பலரது நினைவும் இதுவாகவே உள்ளது. பிள்ளை எதற்கு, நாம் மகிழ்வாகவே உள்ளோம் என்பது போன்ற அபிப்பிராயங்கள் இளையவரிடம், பலரிடம் உலவுகிறது. இதை நாம் புதிய சிந்தனை, நவீன சிந்தனை என்கிறோம். இப்போதைய பிள்ளைகள் மனப்பாங்கு என்கிறோம். சமீபத்தில் ஒரு சில வரிகள் வாசித்தேன்.

அகத்தியன் என்பவன் கடற் கன்னியோடு சேர்ந்து பெரும்சாகரன் என்ற மகனைப் பெற்றானாம். பெரும்சாகரன் தீண்டத் தகாதவள் ஒருத்தியோடு சேர்ந்து பகவன் எனும் மகனைப் பெற்றான். பகவன் பல்கலைப் பண்டிதனாக வளர்ந்தான். இது ஒரு புறமிருக்க.

பிரம்மகுலத்துத் தவமுனி ஒருவர் அருண்மாங்கை எனும் பெண்ணை மணந்து பெண் குழந்தை ஒன்றைப் பெற்றுக் கைவிட்டாராம். கைவிட்ட இந்தப் பெண் குழந்தையை உறையூர்ச் சேரித் தாழ்ந்த குலத்தவன் எடுத்த வளர்த்த போது அந்த ஊர் அழிந்தது.

அப்போது இப் பெண் மகவை மேலூர் அகரத்து நீதிஜயன் எடுத்து வளர்த்தாராம். நீதிஜயன் ஒரு சத்திரக் காவலாளியாக வேலை செய்த போது பல்கலைப் பண்டிதன் காசி போகும் வழியில், நீராடி, சத்திரத்தில் தங்கிய போது, நீதிஜயன் வளர்ப்பு மகளைக் கண்டு " நீ தீண்டத் தகாதவளா? " என்று கேட்டுச் சருவச் சட்டியால்

தலையில் அடித்தான். இரத்தம் வழிந்தது. இதுவும் ஒரு புறமிருக்க, .

பகவன் காசி நகர யாத்திரை முடித்துத் திரும்ப வந்த போது, இந்தப் பெண் பேரழகு மங்கையாகி நின்றாள். இருவரும் காதலித்து, நீதிஜயன் அனுமதி பெற்றுத் திருமணம் புரிந்தனர்.

நெற்றிக் காயத்தின் விபரம் கேட்ட போது, முன்பு பகவன் சட்டுவத்தால் அடித்த ஆதியளே அதாவது பழையவளே என்று பகவன் அறிந்தார். ஆதியள் என்று பகவன் கூறியதால் ஆதி என்ற பெயர் அவளுக்கு வந்தது.

ஆதி தன் கணவனை விடாது பின் தொடர்ந்தாள். இவள் தன்னோடு சேர்ந்து வாழ வேண்டுமானால் பிறக்கும் குழந்தைகளை அந்தந்த இடத்திலேயே விட்டுவிட்டு வர வேண்டும் என்பது கணவனின் வேண்டுகோள்.

முதற் குழந்தை அவ்வையார். அக் குழந்தையை ஆதி விட்டு வரத் தயங்கிய போது, கலைமகளே அவ்வையாராகப் பிறந்ததால்

**"இட்டமுடன் என் தலையில் இன்னபடி**
**என்றெழுதிவிட்ட சிவனும் செத்துவிட்டானோ**
**முட்ட முட்டப் பஞ்சமே யானாலும்**
**பாரமவனுக் கன்னாய் நெஞ்சமே அஞ்சாதே நீ"**

என்று குழந்தை பாட,

தாயார் விலகிச் சென்றார். இப்படி ஏழு பிள்ளைகளையும் பெற்று, விட்டு விட்டுச் சென்றனர். ஔவை, கபிலர், அதியன், வள்ளுவன், உப்பை, உறுவை, வள்ளி. என எழுவர்.

பிள்ளை வேண்டாம், செலவு, தொல்லை எனும் கருத்து நவீன கருத்து, இளையவர் கருத்து என்கிறோமே! பகவனுக்கும் அன்று வந்த கருத்தும் இதுவாகவே அல்லவா உள்ளது. என்ன கூறுகிறீர்கள்? இது நவீன எண்ணமோ?

## வயதுக்கேற்றபடி

இந்தக் குடிமனைப் பகுதிக் கல்விச் செயற்பாட்டுக் குழுவில் நானும் ஒரு அங்கத்தவராக இருக்கிறேன்.

அன்று இளவயதினரின் பேச்சுப் போட்டி நடக்கவிருந்தது. இதில் தெரிவு செய்யப்படுபவர்கள் குடிமனைக் குழுவிலிருந்து பிற மானிலக் கூட்டங்களிற்கு பேச்சுகள் செய்யச் செல்வார்கள். இதில் 3 பேரைத் தெரிவு செய்யும் நிகழ்வு இது.

பேச்சுகள் மேடையில் அரங்கேறியது. பத்துப் பேர் பேசினார்கள்.

பிறிட்டா (Britta) பிழியப்பிழிய அழுதாள்.

எனக்குத் தெரியும். அன்று நானும் இதே நிலையில் தானே இருந்தேன். குழந்தை வயதில் கம்பீரமாக பேசிய பாணியில் பல பரிசுகள் வேண்டிக் குவித்தவள் நான். 9 வயதில் திருக்குறள் பற்றிப் பேசும் போது அதே மழலைப் பாணியில் ஆனால் கம்பீரமாகப் பேசிய போதும் முதற் பரிசை வெல்ல முடியாது இரண்டாவது நிலைக்குத் தள்ளப்பட்டவள். பிழியப்பிழிய அழுதவள். அதாவது மழலைப் பாணியில் 9 வயதில் பேசியதால் எனது பேச்சு எடுபடாது போன நிலை அது. இன்று பிறிட்டாவின் நிலை அன்றைய எனது நிலை போலவே இருந்தது.

இந்த நிலையைப் பற்றி கவனிக்க வேண்டும், பிள்ளைகள் வளர வளர வயதுக் கேற்ற வகையில் பேச வேண்டுமென முன்னைய கூட்டத்தில் நான் விளக்கிக் கூறியிருந்தேன். பிறிட்டாவிற்கு உதவியவர்கள் இதைக் கணக்கில் எடுக்கவேயில்லை.

இன்று பெற்றவரும் உதவியாளரும் பேந்தப் பேந்த விழிக்கின் றனர். பிறிட்டா பிழியப் பிழிய அழுதாள். அருகில் சென்று அவளை அணைத்தேன். மிகவும் உடைந்து போய்க் குலுங்கிக் குலுங்கி அழுதாள். அருகில் இருந்த இருக்கையில் நான் அமர்ந்து அவளையும் மடியில் இருத்தி அணைத்து என் பாசத்தைச் சிறகாக்கினேன். அவளை ஆறுதல் படுத்தினேன்.

பிள்ளைகள் வளர வளர அவர்கள் அணுகு முறையில் மாற்றம் வர வேண்டும். மழலைக் கால நடவடிக்கை நிலை போல இளவயதுக் காலத்தில் பேசுவதை நடப்பதை மாற்றி சிறிது முதிர்ந்த நிலைக்கு வர வேண்டுமென்பதைப் பெற்றவர், உதவியாளரும் உணரத் தவறிவிட்டனர். கேட்க, பார்க்க இனிமையாக வயதுக்கேற்ற செயல் முறைகள் மாற வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மழலைப் பாணியின் எடுப்பான நிலை வயதுக்கேற்ற படி மாற வேண்டும்.

## ஏன் அந்தக் கேள்வி?

வாழ்வின் சவால்களை எதிர் நோக்கி, எப்படிச் சமாளிப்பது எனும் பயிற்சியைப் படிக்கும் ஓரிடமான பாடசாலையின் முதலாம் புகுமுகமான அரிவரி வகுப்பில், அன்றலர்ந்த ரோசாக்கள் போல வித்தியாசமான மலர் முகங்கள். பார்த்துக் கொண்டிருந்தாலே பசி தீரும் முகங்கள்.

இவ் வகுப்பிற்கு நிரந்தர ஆசிரியர்களின் பொறுப்பில், செய்முறைப் பயிற்சிகளைப் பயில வரும் மாணவ ஆசிரியர்கள், மாணவப் பெட்டகோமார்களாக அவ்வப்போது பல புது முகங்கள் வந்து வந்து போவார்கள். ஒரு கிழமை, இரண்டு கிழமை, ஒரு மாதம் மூன்று மாதங்களென இவர்கள் பயிற்சிக்காக வந்து போகும் போது, பற்பல புதிய விடயங்களைப் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிப்பார்கள். எமக்கும் அது சுவையாக இருக்கும்.

காலையில் முதலில் வட்டமாக அமர்ந்து பல விடயங்கள் பற்றிப் பேசுவோம். நிறங்கள், ஆடைகள், கிழமை நாட்கள், இலக்கங்கள் பற்றிப் பேசுவோம். புதிய பயிற்சியாளர்கள் வரும் போது, புதியவர்களின் பயிற்சிக்கு முன்னுரிமை கொடுத்து, நாமும் குழந்தைகளாவோம். மாணவப் பயிற்சியாளரின் தவறான வழிமுறைகள் திருத்திப் பயிற்றுவிக்கப் படும்.

அன்றும் பத்மா என்ற தமிழ்ப் பெண், மாணவ ஆசிரியையாக டெனிஸ் பிள்ளைகளுடன் இருந்தார். இவர் ஒரு டெனிஸ் பாடலைப் பிள்ளைகளுடன் பாட விரும்பிப், பாடலுக்கு விளக் கங்கள் கொடுத்தார். விளக்கம் முடிந்து பாடலைப் பாடுவதற்குப் பதிலாக "சரி நாம் இனிப் பாடுவோமா?" என்று கேள்வியைத் தொடுத்துப் பிள்ளைகளைப் பார்த்தார்.

உடனே கிறிஸ்ரினா, அந்த வகுப்பு ஆசிரியர் இடைமறித்தார். "அந்தக் கேள்வியை நீர் கேட்கக் கூடாது, பாடலைப் பாடத் தொடங்கும்" என்றார். பாடல் பாடப்பட்டு நிகழ்வுகள் இனிது நடந்தது. பின்னர் மாணவ ஆசிரியையும் வகுப்பு ஆசிரியரினதும் கலந்துரையாடல் நேரத்தில் கிறிஸ்ரினா விளக்கங்கள் கொ டுத்தார்.

"சரி இனி நாம் பாடுவோமா?" என்றால் பிள்ளைகள் " இல்லை இப்போது வேண்டாம், இல்லை நாம் பாடவில்லை. என்றெல் லாம் கூற சந்தர்ப்பத்தை நீர் கொடுக்கிறீர். நீர் முடிவு செய்த பின்பு அந்தக் கேள்விக்கு அங்கு இடமே இல்லை நேரடியாகப் பாடலைப் பாட வேண்டியது தான்" என்று உறுதியாகக் கூறினார். இப்படித்தான் நானும் எனது பெட்டகோ படிப்பிற்கு முன்னர் ' பாடுவோமா?, செய்வோமா? ' என்று கேட்டேன். 1993ல் எனது படிப்பு முடிந்த பின்பு அந்தப் பழக்கத்தை விட்டு விட்டேன்.

இது எம்மில் சிலரிடம் உள்ள ஒரு பழக்கம் . பேசுவோமா, பாடுவோமா, தொடங்குவோமா என்று போகிற போக்கில் ஒரு கேள்விக் கணையை வீசுவது.

உண்மை தான், நாம் ஒன்றைச் செய்யத் தீர்மானித்து ஆரம்பிக்கும் போது அப்படி ஒரு கேள்வியைப் போட்டு, முதலில் கூறிய பெறுமதி மிகுந்த வார்த்தைகளை, உறுதியான வார்த்தைகளை நாம் மழுங்கடிக்கச் செய்கிறோம்.

நமது உறுதியற்ற மனநிலையைப் பகிரங்கப் படுத்துகிறோம் என்பது என் எண்ணம். ' இதைப் பற்றிச் சிந்திப்போமா?' என்று கேட்டு நான் எழுதுவதை முடிக்க விரும்பவில்லை. மிக உறுதியான கருத்தாகக் கூறுகிறேன் இது பற்றிச் சிந்தியுங்கள்.

## வித்தியாச, விசித்திர அழைப்பிதழ்

பராமரிப்பு நிலையத்துப் பிள்ளைகளின் பிறந்த நாட்கள் பல பல விதங்களில் நடைபெறும். முன்னதாகவே அறிவித்து சிற்றுண்டிகள் செய்து கொண்டு வந்து நிலையத்திலும் கொண்டாடுவார்கள். பிள்ளைகள், ஊழியர்களைத் தமது வீட்டிற்கு அழைத்தும் கொண்டாடுவார்கள்.

அப்படி ஒரு அழைப்பிதழ் அது, அறிவிப்புப் பலகையில் தொங்கியது. ஒவ்வொருவர் வேலை நேரங்களும் வித்தியாச மானதால் வித்தியாசமான நேரங்களில் பெற்றோர் அழைப்பித ழைக் கையளிப்பார்கள். அது எல்லோரும் பார்க்க அறிவிப்புப் பலகையில் தொங்கவிடப்படும். அதைப் பார்த்ததும் எனது நெற்றியில் சுருக்கங்களும் அருவருப்பும் வந்தது. பல கேள்விகள் என்னுள் எழுந்தது. சிறுவருக்கு இப்படியும் அழைப்பிதழ் கொடுக்கலாமா? எவ்வகை மன நிலையில் இது கொடுக்கப்ப டுகிறது எனப் பலவறாக சிந்தனை ஓடியது. அழைப்பிதழ் இது தான்…

அன்பான பிள்ளைகள், பெரியவர்களே!

அரக்கனின் பிறந்த நாளை கமிலா

வீட்டில் கொண்டாட உங்களுக்குத் துணிச்சல் இருக்கிறதா?

எனக்கு மார்கழி ஐந்தில் ஐந்து வயதாகிறது. ஆகையால் நாங்கள் அரக்கர் விளையாட்டு விளையாடப் போகிறோம். அன்று மண்ணிறச் சேற்று நீர் குடிப்போம். சாப்பிடுவதற்கு இரத்தத்தோடு புழுவும், ஆந்தை வாந்தியும், வாந்திக் கட்டிகளுடன் உண்டு. சாப்பாட்டின் பின் இனிப்பாக பறவை மூளை, பொரித்த முட்டையுடன் உண்டு.

மகிழ்வுடன் உங்களை எதிர்பார்க்கிறேன்.அன்புடன் அரக்க வாழ்த்துகள்.

கமிலா.

அழைப்பிதழைப் பார்க்கப் பார்க்க எனக்கு அருவருப்புத் தான்

வந்தது. விசேடமாக நான் ஒரு தாவர உணவுக்காரி, மச்சம் உண்பவளுமல்ல. யாரிடமும் எதுவும் நான் கேட்கவில்லை. அதைப் பிறந்த நாளன்றே தெரிந்து கொள்ளும் பொறுமை எனக்குத் தாராளமாக இருந்தது.

அந்த நாளும் வந்தது. எனது வேலைச் சந்திப்பு நேரம் காலை எட்டு மணி.

நமது அறையுள் சென்று காலை வணக்கம் கூறி ஒரு மேசையைச் சுற்றியிருந்த பிள்ளைகளோடு அமர்ந்து பேசியபடி இருந்தேன்.

பியகிட் (Birget) சிணுங்கியபடி என்னருகில் வந்தாள். எனது கரங்களால் அவள் இடையைச் சுற்றி அணைத்து, டெனிஸ் மொழியில் "ஏனடா! ஏன் சிணுங்குகிறாய்? " என்றேன் பரிவுடன். எனது கதிரையைப் பின்னால் உருட்டி, அவள் என் மடியில் சாய, வேண்டிய இடம் கொடுத்து வசதியாக்கி, அவளை அணைத் தேன்.

"வேதா! எனக்கு இரத்தமும் புழுவும் வேண்டாம் வேதா.." என்று மறுபடியும் சிணுங்கினாள்.

ஓ! இதுக்குத் தான் கவலையா? நீ நினைக்கிறாயா அது நிசமான புழு என்று? அது சும்மா ஒரு பகிடி தான். ஒரு விளையாட்டுத் தான். நான் நினைக்கவில்லை அப்படி ஒரு உணவு அவர்கள் எமக்குத் தருவினம் என்று. நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் நீ கவலைப் படாதே." என்று அணைத்து அவளை ஆதரவாகத் தடவினேன். அவளது சந்தேகம் தீர்ந்தது. அவள் மன அமைதியுடன் ஓடிவிட்டாள்.

நேரம் 9.30.18 பிள்ளைகளும், நானும் எனது உதவியாள ருமாக சிறிது நடை தூரத்தில் உள்ள கமிலா வீட்டிற்குச் சென்றோம்.

கமிலா வீடு நத்தார் பொருட்களால் அலங்கரிக்கப்பட்டு, சிவப்பு, வெள்ளை மேசை விரிப்பு, தேவாலய மணி, இதயங்கள், நத்தார் மரம் என்று அலங்காரம் பிரமாதமாக இருந்தது.

(மிகுதி அடுத்த அங்கத்தில் தொடரும்.)

## வித்தியாச விசித்திர அழைப்பிதழ்

பொதுவாகப் பிள்ளைகள் மற்றப் பிள்ளைகள் வீட்டிற்கு வருகை தரும் போது முதலில் நேராக அந்த வீட்டுப் பிள்ளையின் அறைக்கே ஓடுவார்கள். நமது தமிழ் வீடுகள் போலவன்றி ஒரு கடை போடும் அளவிற்கு அத்தனை விளையாட்டுச் சாமான்களும் டெனிஸ் வீட்டில் நிறைந்திருக்கும். பிள்ளைகள் தமது விருப்பப்படி எல்லாம் எடுத்து இச்சைப்படி விளையாடி னார்கள். ஒரு பத்து நிமிடத்தால் "யார் அரக்கர்களின் வால் கட்டப் போகிறீர்கள்? விருப்பமானவர்கள் வாங்கோ!" என்று வீட்டுக்காரி (பிறந்த நாள் பிள்ளையின் தாய்) அழைத்தார். இடுப்புப் பட்டியோடு பின் புறமாக சாக்குக் கயிற்றைப் பின்னலாகப் பின்னிச் சிவப்புக் குஞ்சம் கட்டியிருந்தது. இது நிலையத்திலிருந்து நாங்கள் இரகசியமாகக் கொண்டு வந்திருந்தோம். இவை நாடகங்கள், நடனத்திற்கு நாங்கள் பாவிக்கும் சாமான்கள்.

சிலர் அருவருப்பும், சிலர் பயமும் கொண்டு ஒதுங்க, பலர் மகிழ்ந்து வாலைக் கட்டிக் கொண்டு, அதை ஆட்டிக் கொண்டும் குதித்து மகிழ்ந்தனர்.

அரை மணித்தியாலத்தால் எல்லோரையும் அழைத்தோம். சாப்பாட்டு மேசையில் அமர்ந்ததும் "மண்ணிறச் சேற்று நீர் குடிப்போம்' 'என்று கொக்கோப் பால் அட்டைப் பெட்டியோடு வீட்டுக்காரி வந்தார். "யாருக்கு வேணும்?" என்று கேட்டதும், எல்லோருமே வேணுமென்று ஆவலோடு வாங்கிக் குடித்தனர். யாருமே மறுக்கவில்லை. பொதுவாக கொக்கோப் பாலென்றால் பிள்ளைகளுக்கு நன்கு பிடிக்கும்.

தொடர்ந்து பிள்ளைகள் விளையாட, நாங்கள் கதைத்தபடி இருந்தோம். சாப்பாட்டு நேரம் வர வீட்டுக்காரியோடு நானும் குசினிக்கு ஓடினேன் உணவு பற்றிய பயத்தில்.

அவர் நூடில்ஸ் கொதிக்க வைத்தார்.

இதற்குச் சேர்த்துக் கொள்ள தக்காளிக் கலவை, தக்காளி சோஸ்,

இது செக்கச் செவேரென இருந்தது.

இதற்குள் போட பெரிய இறைச்சி உருண்டைகள். இவைகளை ஒன்றாகக் கலக்க முதல், நான் தாவர உணவுக் காரி என்று கூறினேன்.

உனக்கு எடுத்து வைப்போம் என்று தக்காளிக் கலவையை எனக்கு அளவாக எடுத்து வைத்தார்.

கன்னங்கரேல் என்று கறுப்பு நூடில்ஸ் ஒரு உறையில் இருந்தது. நான் ஒரு நாளும் இப்படிக் கறுப்பு நூடில்ஸ்ஐக் காணவில்லை. கணவாய் மையில் செய்தது விலையும் கூடியது என்றார். " இதை மற்ற நூடில்ஸ்சுடன் கலக்கப் போகிறாயா?" என்றேன். "ஓ! நீ சாப்பிட முடியாதல்லவா. சரி தனித் தனியே செய்வோம் " என்று வேறு வேறாகச் செய்தார். அது எனக்கு ஒரு நிம்மதியாகப் போய்விட்டது. எனது உணவு விடயத்தில்.

பொதுவாக இப்படி நிலைமைகளில் நான் லேசாக எண்ணெயில் வதக்கிய காய்கறிக் கலவையை வெண்ணெய் பூசிய மண்ணிறப் பாணுடன் நடுவில் உள்ளீடாக வைத்துக் கொண்டு போவதுண்டு. ஏதும் எனக்கு இசைவானதாக இல்லாது போனால் கைவசமாக உள்ள அந்த உணவு அன்று உணவாகும்.. இன்று அதற்கு வேலையில்லை.

(மிகுதியை அடுத்த அங்கத்தில் பார்ப்போம்.)

## வித்தியாச விசித்திர அழைப்பிதழ்

சாப்பாடு தயாராக பிள்ளைகளை அழைத்தோம். 'புழுவும் இரத்தமும் ஆந்தை வாந்தியும் உண்போம்' என்று, 'இதோ புழு!' என்று நூடில்ஸ்சைப் பரிமாறினார்கள். இரண்டு மேசையில் பெரியவர்கள் சிறுவர்களாக அமர்ந்தோம். என்னருகில் இருந்த பையன் தனக்கு உணவு வேண்டாம் என்று அருவருப்புடனும் கவலையுடனும் சொன்னான். அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தயாராக இருந்த பாண் அவனுக்குப் பரிமாறப்பட்டது. பாணுக்கு இரத்தமும் அதாவது சோசும் வேண்டாம் என்று கூறிவிட்டான். நாம் எவ்வளவோ விளக்கிக் கூறினோம், மறுத்துவிட்டான். 'கறுப்புப் புழு யாருக்கு வேண்டும்?' என்று வீட்டுக்கார ஆண் கரண்டியில் அதைச் சுற்றியபடி கேட்டுப் பரிமாறினார். இதைக் கொதிக்க வைத்த போது வந்த வாசனை சாப்பிடும் உணர்வைத் தூண்டியது என்று என் உதவியாளர் கூறினார். (கணவாய் மை கலந்ததால்)

கறுப்பு நூடில்ஸைப் பாதிக்குப் பாதியான பிள்ளைகள் சாப்பிட்ட னர். சிலர் இரண்டாவது தடவைக்கு பாண் வேண்டுமென அடம் பிடித்தனர்.

இவைகள் முடிய மோபின் (moffin) என்று கூறும் கேக், சின்ன வட்டக் கடதாசி கிண்ணத்தில் செய்த கேக், அதன் மேலே முட்டை உடைத்து ஊற்றியது போல வெள்ளை மஞ்சள் கருவுடைய ஐசிங் பொருள் கேக் மேல் வைத்து பேக் பண்ணப் பட்டிருந்தது. இது தான் பறவை மூளையும் முட்டைப் பொரியலும் என்று பரிமாறப்பட்டது.

உணவு முடிய இதே மேசையில் அமர்ந்தபடி பிறந்த நாள் பாடல் பாடி, பிறந்த நாள் பரிசும் அந்தப் பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டது.

பின் எல்லோரும் வெளியே போய் சுரங்க வேட்டை விளையாடி னோம். புதையலானது இனிப்புப் பண்டங்கள் நிறைந்த ஒவ்வொருவருக்கும் உரிய பைகளின் மூட்டை. அதைக் கண்டு பிடித்த பின், பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்தனர் வீட்டுக்காரர்.

இவை முடிய பாலர் நிலையம் வந்தோம்.

பெரியவர்கள் பன்னிரண்டரையிலிருந்து இரண்டு பிரிவாக இடைவேளை எடுப்போம். எங்கு போனாலும் அந்த நேரத்திற்கு நிலையத்திற்கு வந்து விடுவோம்.

இது தான் இந்த வித்தியாச விசித்திர அழைப்பிதழ். நான் அழைப்பிதழைப் பார்த்ததும் மிகவும் அருவருப்படைந்தேன். அப்படி அவசரத் தீர்மானம் கொள்ளக் கூடாது என ஒரு அறிவுறுத்தலாக இச் சம்பவம் எனக்கு இருந்தது. எதுவாக இருந்தாலும் அமைதியாக எதிர் கொள்ள வேண்டும். முடிவு சுபமாகவும் இருக்கலாம் என இதன் மூலம் என்னால் அறிய முடிந்தது.

சரி அன்பர்களே! இத்துடன் இந்த 3 அங்கமும் முடிவுறுகிறது.

வேதாவின்

# ஆத்திசூடி

## அகர வரி அடிகள் "அ"

அறம் செய்ய விரும்பு'
அவ்வையின் ஆத்திசூடி
செவ்வையாய் ஏத்தியபடி
செழித்தது பல அடி

1. அக்கிரமம் தவிர்.
2. அகங்காரம் விலக்கு.
3. அகந்தை கொள்ளாதே.
4. அகம்பாவம் அழிவு தரும்.
5. அகவிருள் நீக்கு.
6. அங்கவீனனுக்கு இரங்கு.
7. அச்சம் அழி.
8. அசமந்தம் அனர்த்தம்.
9. அசுத்தம் கைவிடு.
10. அசூயை அழி.
11. அஞ்ஞானம் விலக்கு.
12. அட்சரம் பயில்.
13. அட்டூழியம் பண்ணாதே.
14. அடக்கம் சிறப்பு.
15. அடாவடித்தனம் வேண்டாம்.
16. அடிமைப்படாதே.
17. அடுத்துக் கெடுக்காதே.
18. அதர்மம் அழி.
19. அதிகாலை துயில் நீங்கு.
20. அந்தரங்கம் பேணு.
21. அநாதைக்கு உதவிடு.
22. அநீதியை ஆதரிக்காதே.
23. அப்பியாசம் அழகு தரும்.
24. அமைதி பொன் பெறும்.

25. அலங்கோலம் தவிர்.
26. அலட்சியம் தேவையற்றது.
27. அவச் சொல் தவிர்.
28. அவதானம் அர்த்தமுடைத்து.
29. அழிச்சாட்டியம் ஆகாதது.
30. அழுக்காறு அழிவு தரும்.
31. அளந்து கொடு.
32. அறம் செய்தல் புண்ணியம்.
33. அறிவு தேடு.
34. அன்பு செய்.
35. அனுபவம் கோடி பெறும்.

## "ஆ" வரி அடிகள்

"ஆறுவது சினம்" ஆக்கியது ஔவையார்.
நோக்கிய போது ஆக்கியது இவை.

1. ஆக்கம் உயர்வுடைத்து.
2. ஆகமம் படித்தல் உயர்வு.
3. ஆகாத்தியம் அனுதினம் நன்றன்று.
4. ஆகாதவன் உறவு தவிர்.
5. ஆங்காரம், ஆவேசம் அழிவு வழி.
6. ஆச்சியை மதி.
7. ஆசாரம் பேணு.
8. ஆசிரியனைக் கனம் பண்ணு.
9. ஆசி பெறு, பெரியவரிடம்.
10. ஆசீர்வதி குழந்தைகளை.
11. ஆசவாசம் கொள் கடின வேலையின் பின்.
12. ஆசை, ஆசாபாசம் அளவாகக் கொள்.
13. ஆசை காட்டி ஏமாற்றாதே.

14. ஆம் போடுதல் எப்போதும் நன்றன்று.
15. ஆட்சேபனையும் தேவையெனில் கூறு.
16. ஆட்டம், அசைவு ஆக்கைக்கு நன்மை.
17. ஆட்படு, நல்ல அன்புக்கு.
18. ஆண்டவனை ஆராதி.
19. ஆணவம் அடக்கு.
20. ஆத்திரம் அழிவுடைத்து.
21. ஆத்மஞானம் வாழ்வுக்கு ஒளி.
22. ஆதங்கம் ஆக்கம் தரா.
23. ஆதரவற்றோரை ஆதரி.
24. ஆதிக்கம் என்றும் அமைதி தரா.
25. ஆபத்தில் என்றும் கை கொடு.
26. ஆய்வு செய்தல் பயனுடைத்து.
27. ஆயாசத்தில் இளைப்பாறு.
28. ஆயள்வேதம் சிறந்த வைத்தியம்.
29. ஆர்வம் முயற்சியைத் தூண்டும்.
30. ஆரம்பம் நேரப்படி அமை.
31. ஆரோக்கியம் சுகவாழ்வுப் பாதை.
32. ஆலோசனை ஆரோகணத்தின் படி.
33. ஆழம் அறியாது அடியெடாதே.
34. ஆற்றாமையை அடியோடு அறு.
35. ஆறப்போடு ஆத்திர நேரத்தை.
36. ஆதனம் சேர்ப்பதிலும் பார்க்க அறிவைச் சேகரி.

## "இ" கர வரி

இயல்வது கரவேல்.
(இயல்வது கொடுக்கக்கூடிய பொருளை
கரவேல் ஒளியாதே. (ஒளியாமல் கொடு).

1. இகத்தாளம் (கிண்டல், ஏளனம்.) செய்யாதே.
2. இகழ்தல் பண்பல்ல.
3. இக்கட்டில் கை கொடு.
4. இங்கிதமாய்ப் பேசிப் பழகு.
5. இசை இன்பம் தரும்.
6. இசைகேடின்றி இசை பயில்.
7. இஞ்சியையும் உணவில் சேர்.
8. இடம்பம் (ஆடம்பரம்) அவசியமற்றது.
9. இடர் துடை.
10. இடை மெலி.
11. இடைவேளையுடன் வேலை செய்.
12. இம்மையில் நன்மை செய்.
13. இயற்கையாம் அற்புதம் ரசி.
14. இரக்க குணம் கொள்.
15. இரத்தப் பலி வேண்டாம்.
16. இரகசியம் பாதுகாத்திடு.
17. இரசித்தல் இன்பம்.
18. இரண்டகம் (துரோகம், வஞ்சகம்) விலக்கு.
19. இரத்தலின்றி உழைத்திடு.
20. இரவி ஒளி உயிர்ச்சத்து.
21. இழுக்காறு (தீயொழுக்கம், தீநெறி) வேண்டாம்.
22. இலட்சியம் கொண்டு முன்னேறு.
23. இலயம் இசைக்கு வேர்.
24. இலைக் கறி உணவில் சேர்.
25. இளமையில் இயன்ற நல்லது செய்.
26. இளநீர் உடலுக்கு ஆரோக்கியம்.

27. இன்னா செய்யாது வாழ்.
28. இன்சொல் பேசல் ஆனந்தம்.
29. இன்னிசை மனஅமைதிக்கு மருந்து.
30. இறைமொழி (வேதம்) படியுங்கள்.

## "ஈ" கரம்

ஈவது விலக்கேல். (ஈவது- ஒருவர் மற்றவருக்குக் கொடுப்பது.) விலக்கேல் தடுக்காதே. ஔவையாரின் வரிகள் இது.

இதையொட்டிய எனது வரிகள்.

1. ஈகம் தேவைக் கேற்ப அமையட்டும்.
2. ஈடழிய வாழாதே.
3. ஈட்டும் பொருள் நேர்வழியாகுக.
4. ஈகைக் குணம் உயர்ந்தது.
5. ஈசனைத் துதி.
6. ஈச்சப்பியாய் வாழாதே.
7. ஈரடிக் குறள் படித்து நட.
8. ஈனமாக வாழாதே.
9. ஈன்றவரைப் பேணு.

## "உ" கரம்

உடையது விளம்பேல்.

(தன்னுடைய பொருளை அல்லது கல்வி முதலிய தன் சிறப்பைத் தானாகப் புகழ்ந்து பேச வேண்டாம்)

இது ஒளவையாரின் வரி.

**எனது வரிகள்.**

1. உகந்தவர் நட்பைத் தேடு.
2. உக்கிரம் கொள்ளல் ஆரோக்கியக் கேடு.
3. உசாவுதல் அறிவின் மேம்பாடு.
4. உச்சரிப்புத் தெளிவு மொழிக்குயர்வு.
5. உடற் பயிற்சி நாளும் அவசியம்.
6. உடல் எடையை அளவாக்கு.
7. உடற் கொழுப்பு அழித்தல் சுகம்.
8. உட்பகை உன்னையும் கெடுக்கும்.
9. உணவில் ஆரோக்கியம் தேவை.
10. உண்மையால் உயரலாம்.
11. உதறிவிடு கெட்ட சகவாசங்களை.
12. உத்தம நட்பு உயர்வு தரும்.
13. உத்தமனாக வாழ முயற்சி செய்.
14. உபகார உணர்வு உன்னதமானது.
15. உயிர்க் கொலை தவிர்.
16. உரிமையோடு உறவு கொண்டாடு.
17. உலக ஞானம் தேடு.
18. உலோபியாய் வாழாதே.
19. உழைப்பு உரம் தரும்.
20. உள்ளி உணவில் சேர்.
21. உள்ளுணர்வை எப்போதும் அவதானி.
22. உள்ளெரிச்சல் துடை.
23. உறக்கம் அளவாகக் கொள்.
24. உறவு குணத்தில் உயர்ந்தோரோடு ஆகட்டும்.


25. உறுதி எண்ணத்தில் கொள்ளு.
26. உறைவிடம் துப்புரவாய் வைத்திரு.
27. உற்றாரின் உறவு இனியது.
28. உற்சாகம் உன் ஆயுதமாக்கு.

## "ஊ" கரம்

ஊக்கமது கைவிடேல். ( ஒரு தொழில் செய்யும் போது முயற்சி, மனவலிமையைக் கைவிடாதே.)
இது ஔவையாரின் வரி.

இனி எனது வரிகள்.

1. ஊக்கம் உயர்வுக்கு ஏணி.
2. ஊடல் இணைகளுக்கு இன்பம்.
3. ஊதாரித்தனம் வாழ்விற்கு உதவாது.
4. ஊதற்காற்றில் உடலைப் பேணு.
5. ஊமைக் காயம் ஆபத்துடைத்து.
6. ஊரிற்கு நல்லது செய்.
7. ஊராரை மதித்து வாழ்.
8. ஊழல் தீவினைக்கு வழி வகுக்கும்.
9. ஊறுகாய் உணவின் சுவை மாற்றும்.
10. ஊனமுடையோரையும் ஏற்று வாழப் பழகு.



# "எ" கரம்

எண்ணெழுத்து இகழேல்.
கணிதத்தையும் இலக்கணத்தையும் அவமதிக்காதே.
இது ஔவையாரின் வரி.




இனி எனது வரிகள்.

1. எடுத்துக் காட்டு, நல்லவராக வாழ்ந்து.
2. எகத்தாளமாகப் பேசுவது தவிர்.
3. எடுத்தெறிந்து பேசுவதும் அழகல்ல.
4. எடை அதிகரிக்க விடாதே.
5. எண்ணம் தூயதாக இருத்தல் நலம்.
6. எத்தனை தரமும் நல்லதற்கு எத்தனிக்கலாம்.
7. எண் எழுத்து ஞானம் எவருக்கும் தேவை.
8. எண்ணும் எழுத்தும் ஏற்றம் தரும்.
9. எதிரியை நண்பனாக்குதல் நல்லதல்ல.
10. எதிர்ப்பைத் துணிவுடன் எதிர் கொள்ளு.
11. எதிர் நீச்சலிட்டு வாழ்வை வெல்.
12. எரிச்சலுணர்வை அண்டவிடாதே.
13. எச்சரிக்கையுணர்வு எப்போதும் தேவை.
14. எம்மை நாமே புகழ்தல் அழகல்ல.
15. எல்லம் (இஞ்சி) உணவில் சேர்.
16. எழுத்தைப் பிழையற எழுதப் பழகு.
17. எழுத்தைக் கற்பிப்போன் உயர்ந்தவனாகிறான்.
18. எறும்பு போல் சுறுசுறுப்பாயிரு.
19. எல்லை மீறாத அளவு எதற்கும் தேவை.
20. எழில் கொஞ்சும் இயற்கை ஆரோக்கியமுடைத்து.

## "ஏ" கரம்

ஏற்பது இகழ்ச்சி.

ஒருவரிடத்தில் சென்று பிச்சை கேட்பது,
இரந்துண்டு வாழ்வது இகழ்தலுக்குரியது.
இது ஔவையாரின் வரி.



இனி எனது வரிகள்.

1. ஏகாந்தம் எப்போதும் நல்லதல்ல.
2. ஏவல் மொழி கேட்டுப் பிறரைப் பகைக்காதே.
3. ஏய்த்தல், ஏமாற்றுதல் விலக்கு.
4. ஏமாளியாய் வாழாதே.
5. ஏண்டாப்புக் கொள்ளாதே.
6. ஏட்டுப் படிப்புடன் அனுபவ அறிவும் இணை.
7. ஏன் என்ற கேள்வி எப்போதும் கேள்.
8. ஏற்றமும் தாழ்வும் சமமெனக் கருதி வாழ்.

## "ஐ" கரம்

ஐயம் இட்டுண்.
ஏழைகள், அங்கவீனரெனும் இயலாதவர்களுக்கப் பிச்சை இட்டு உண்.
ஔவையின் வரி இது.



இனி எனது வரிகள்.

1. ஐக்கியம் பேணு.
2. ஐசுவரியம் என்பதில் அறிவும் அடக்கம்.


## "ஓ" கரம்

ஓப்புரவு ஒழுகு.


உலகத்தோடு பொருந்த, உலகநடையைத் தெரிந்து அந்த வழியிலே நட.
இது ஔவையார் வரி.

இனி எனது வரிகள்.

1. ஒத்தாசை செய்து வாழ்.
2. ஓப்புரவறிந்து ஒழுகு.
3. ஓப்பமிடமுன் உள்ளடக்கம் வாசி.
4. ஒட்டுக் கேட்டல் தவிர் ஒரு மனப்பாடுடை வழிபாடு தெளிவுடைத்து.
5. ஒற்றுமை ஏற்றமுடைத்து.
6. ஒழுங்கீனம் மதிப்பிறக்கும்.
7. ஒழுக்கம் ஒருவனுக்கு ஒளி தரும்.



# "ஓ" கரம்



ஓதுவது ஒழியேல்.

நல்ல நூல்களைப் படித்தலை
விட்டுவிடாதே. படித்தபடியே இரு.
இது ஔவையார் வரி.

இனி எனது வரிகள்.

1. ஓச்சம் (உயர்வு) கொள், நன்னடத்தைகளால்.
2. ஓசி வாங்கி வாழப் பழகாதே.
3. ஓடக்கோல் போல் பிறருக்கு உதவியாயிரு.
4. ஓடுதல் உடலுக்கு நல்ல அப்பியாசம்.
5. ஓதி, உணர்ந்து வாழ்தல் அழகு.
6. ஓவியக்கலை மனதுக்கு மகிழ்வு தரும்.
7. ஓர்மம் (மனஉறுதி) கொண்டு முயற்சிகள் செய்ய வேண்டும்.
8. ஓட்டைவாயனாக வாழப் பழகாதே.

# "ஔ" கரம்

ஔவியம் பேசேல்.
பொறாமை வசனங்களைப் பேசாதே.
இது ஔவையார் வரி.

இனி எனது வரிகள்.

1. ஔவையார் மொழி படித்து நட.
2. ஔவியம் கொள்ளுதல் தவிர்.

**நல்ல தமிழ்.**

உயிரெழுத்து உயிருள்
பயிராகும் முதலெழுத்து.
உயிர், மெய்ப் பயிரெழுந்து
உணரவைக்கும் அகிலத்தை.

மொழிகள் அழகுடை மலர்கள்.
மொழிகள் உருசியுடை கனிகள்.
விழி நிறைந்த இன்பத் துளி.
அழிவற்ற பாதைக்கு ஒளி.

எடுத்தாள ஆள இன்பம்.
எனக்கும் உனக்கும் எழிலானது.
எழுது! எட்டும் வரை எழுது!
எல்லையில்லா இன்பத்தின் கொல்லை.

# பெற்றோர் மாட்சி

## அப்பா அன்பு அப்பா.



வெற்றிக்கு அடிப்படை தந்த
சற்குணவாளன் என் அப்பா.
நற்தமிழ் காட்டி என்னை
பற்றுடன் அணைத்த அப்பா.
பாப்பாவாய் பருவப் பெண்ணாய்
கோப்பாக அறிவுட்டிய அப்பா.
தப்பில்லா நேர் வழியை
செப்பமாய்க் காட்டிய அப்பா.

துயரைத் துரும்பாக எடுத்து,
அயர்வின்றி நாளும் எமக்காய்,
உயர்வுக்கு உழைத்து. அன்புப்
பயிர் வளர்த்த அப்பா.
முதுமைப்படி உங்களை அழுத்தும்
துன்பப்படி போதும் அப்பா.
அம்மாவடி சேர உங்களுக்கு
அருள் தரவேண்டும் இறைவன்.
22-5-2006.

(இலண்டன் தமிழ் வானொலி, ரி.ஆர்.ரி தமிழ் அலையில் கவிதை நேரத்தில் என்னால் வாசிக்கப்பட்டது.)

**தந்தை போலாகுமா!**

முந்தைப் பண்புகளையும் சேர்த்து மிளிர்த்தியவர்
சிந்தை எண்ணங்களை வைரமாய் செதுக்கியவர்.
விந்தை உலகில் பெருமுறவு என்
தந்தை போலாகுமா சொல் உறவே!

பக்தியைப் பாங்காய் ஒளிர்த்திய சமயவாளர்
சக்தியாய் விடாமுயற்சியை என்னுள் ஊன்றியவர்.
பக்குவமாய் கேட்பவைகளை ஆரத் தழுவி
அக்கறையாய் உணர்ந்து அன்பளிப்புச் செய்தவர்.

வசந்தக் காற்றில் குளிர் சுவாசமாய் கசந்திடாது ஊக்கமூட்டும்
உங்கள் நினைவுகள்
அசர்தலற்ற தெவிட்டாத அற்புத சஞ்சீவி.
பிசங்கலற்ற பரிசுத்து உறவன்றோ தந்தை.

நீங்கள் மேலுலகம் சென்றாலும் அன்பான
உங்கள் ஞாபகக் கிடக்கைகளெனக்கு வைரம்.
தங்கமான கிராமத்து ஞாபகச் சுரங்கள்
அங்கம் முழுதும் ஓடுவது அப்பாவாலன்றோ.

இளவேனிலாக இதயத்தில் அப்பா என்றும்.
அளவற்ற நினைவு வேர்களை ஊன்றியவர்.
தளம்பாத என்னுயர்வின் அத்திவாரம் வேறெவர்!
வளமுயரவுதவும் தாய் தந்தை போலாகுமா!

வெற்றிக்கு அடிப்படை தந்த
சற்குணவாளன் என் அப்பா.
நற்தமிழ் காட்டி என்னை
பற்றுடன் அணைத்த அப்பா.
பாப்பாவாய் பருவப் பெண்ணாய்
கோப்பாக அறிவுட்டிய அப்பா.
தப்பில்லா நேர் வழியை
செப்பமாய்க் காட்டிய அப்பா.

துயரைத் துரும்பாக எடுத்து,
அயர்வின்றி நாளும் எமக்காய்,
உயர்வுக்கு உழைத்து, அன்புப்
பயிர் வளர்த்த அப்பா.
முதுமைப்படி உங்களை அழுத்தும்
துன்பப்படி போதும் அப்பா.
அம்மாவடி சேர உங்களுக்கு
அருள் தரவேண்டும் இறைவன்.
22-5-2006.

(இலண்டன் தமிழ் வானொலி, ரி.ஆர்.ரி தமிழ் அலையில்
கவிதை நேரத்தில் என்னால் வாசிக்கப்பட்டது.)

**தந்தை போலாகுமா!**

முந்தைப் பண்புகளையும் சேர்த்து மிளிர்த்தியவர்
சிந்தை எண்ணங்களை வைரமாய் செதுக்கியவர்.
விந்தை உலகில் பெருமுறவு என்
தந்தை போலாகுமா சொல் உறவே!

பக்தியைப் பாங்காய் ஒளிர்த்திய சமயவாளர்
சக்தியாய் விடாமுயற்சியை என்னுள் ஊன்றியவர்.
பக்குவமாய் கேட்பவைகளை ஆரத் தழுவி
அக்கறையாய் உணர்ந்து அன்பளிப்புச் செய்தவர்.

வசந்தக் காற்றில் குளிர் சுவாசமாய் கசந்திடாது
ஊக்கமூட்டும் உங்கள் நினைவுகள்
அசர்தலற்ற தெவிட்டாத அற்புத சஞ்சீவி.
பிசங்கலற்ற பரிசுத்து உறவன்றோ தந்தை.

நீங்கள் மேலுலகம் சென்றாலும் அன்பான
உங்கள் ஞாபகக் கிடக்கைகளெனக்கு வைரம்.
தங்கமான கிராமத்து ஞாபகச் சுரங்கள்
அங்கம் முழுதும் ஓடுவது அப்பாவாலன்றோ.

இளவேனிலாக இதயத்தில் அப்பா என்றும்.
அளவற்ற நினைவு வேர்களை ஊன்றியவர்.
தளம்பாத என்னுயர்வின் அத்திவாரம் வேறெவர்!
வளமுயரவுதவும் தாய் தந்தை போலாகுமா!

## நந்தவன இனிமை



**அன்னைக்கு..**

எந்த உறவிலும் இல்லை இணை
இந்த உலகிலொரு தனிப்பெருமை
நந்தவன இனிமை நல் தாய்மை.
வந்தித்துப் போற்றல் நம் உரிமை.

அந்தமில்லா அரிய முதல் நேசம்.
நந்தாவிளக்கு நல் தாய்பாசம்.
சந்தத்தோடு பாடுவோம் தாயின் பாசம்.
சிந்தச் சிறக்கும் எம் சுவாசம்.

அவஸ்தைகளை மட்டும் தனக்குள்
ஆதரவுகளை எமக்காய் தந்தவள்.
சத்துக்களை மட்டும் எமக்குள்
சருகுகளைத் தானும் ஏந்துபவள்.

தன் சிறகின் கூடாரத்துள்
என் உயர்வை எண்ணியவள்.
என் சிறகின் கூடாரத்துள் நானென்
கண்மணிகள் உயர்வை எண்ணுகிறேன்.

வாழையடி வாழையான உறவு.
தாய்மையடித் தாய்மையான தொடர்வு.
சுழலும் சக்கரமான வாழ்வு.
சுழன்று உய்த்திடுவோம் உயர்வு.

17-05-2008.

(இலண்டன் தமிழ் வானொலியில், ரி.ஆர்.ரி தமிழ் ஒலியில் என்னால் வாசிக்கப்பட்டது.)

**அன்னைக்கு..**

எந்த உறவிலும் இல்லை இணை
இந்த உலகிலொரு தனிப்பெருமை
நந்தவன இனிமை நல் தாய்மை.
வந்தித்துப் போற்றல் நம் உரிமை.

அந்தமில்லா அரிய முதல் நேசம்.
நந்தாவிளக்கு நல் தாய்பாசம்.
சந்தத்தோடு பாடுவோம் தாயின் பாசம்.
சிந்தச் சிறக்கும் எம் சுவாசம்.

அவஸ்தைகளை மட்டும் தனக்குள்
ஆதரவுகளை எமக்காய் தந்தவள்.
சத்துக்களை மட்டும் எமக்குள்
சருகுகளைத் தானும் ஏந்துபவள்.

தன் சிறகின் கூடாரத்துள்
என் உயர்வை எண்ணியவள்.
என் சிறகின் கூடாரத்துள் நானென்
கண்மணிகள் உயர்வை எண்ணுகிறேன்.

வாழையடி வாழையான உறவு.
தாய்மையடித் தாய்மையான தொடர்வு.
சுழலும் சக்கரமான வாழ்வு.
சுழன்று உய்த்திடுவோம் உயர்வு.

17-05-2008.

(இலண்டன் தமிழ் வானொலியில். ரி.ஆர்.ரி தமிழ் ஒலியில் என்னால் வாசிக்கப்பட்டது.)

# பெற்றவர் மாட்சி வரிகள்



லண்டன் தமிழ் வானொலியில் எழுதி வாசித்தவை.

1. முதன்முதலாய் விரல் பிடித்து
முதல்வராய் முன்னேற்றப் பாதையில்
முதன் மொழியாம் முத்தமிழை எமக்கு
முத்தம் முதலீடாகப் பதித்தவர்.
முதல் வர்க்கமிவர் எம் மனதில்.

2. எமக்குள் மனிதம் நுழைத்து
ஏகபோக இராச்சியம் அமைத்து
எல்லவனாய் என்றும் ஒளிதரும்
நல்ல பெற்றவரன்பில் நனைதலின்பம்

3. கனவில் அம்மா வந்தால்
மனதில் நிறைவு பெருகும்.
வானவில்லாய் முகம் மலரும்.
வாழ்வில் அந்த முகம் தானே
வாயார வாழ்த்துக் கூறும்.
வாழ்வில் பலரிதை அனுபவித்திருப்பாரோ!

4. என்னைக் கருவறையில் அம்மாவும்
தன் மனஅறையில் அப்பாவும்
தினமும் தாலாட்டி வளர்த்தனர்.
பணிப்பெண் கைத்தொட்டிலில்
பலர் வாழ்கிறார். இந்நிலை
எனக்கு வராததற்கு பெற்றவருக்கு நன்றி.

5 தாரம் எனும் பெண்மை
ஈரம் மிகுந்த தாய்மை.
பாரம் கருதாது உண்மை.
பாசமது சாயாது. ஓயாது.

6. அலையலையாக என்றும்
நிலையாக வீசும் பாசத்தின்
வலை பெற்றவர்அன்பு.
தலை நிமிர்ந்து எம்மைத்
தகுதியாக வாழ வைக்கும்
தண்ணிலவு வட்டம் இவ்வன்பு.
மண்ணிலெம்மை நிலையூன்ற வைப்பது.

7. மூடரும் பெற்றவரன்பை முதலாக
வடமாகச் சுற்றினால் வளம் பெறுவார்.
சீடரானால் சீருடன் முத்தியடைவார்.
தொடரும் அன்பு விடமாகாது.

8. என்றும் இன்ப நறுமணப் புகையாக
என்மனச் சிம்மாசனத்தில் வாசனையாக
என்னைச் சுற்றிப் படலமாகக் கவியும்
என் பெற்றவர் நினைவுகளென்றும்.
என் மனமன்றத்தில் இராசராகம்.
நின்று வாழும் நிலைத்த இன்பமது.

9. வல்லமை பெருகும் பெற்றவரைப் பேணுங்கள்.
நல்லதாகப் பெறுவீர்கள் வெற்றி மாளிகை.

10. ஆலம் விழுதாக நெஞ்சிலூன்றுவர்.
நூலெனும் உறவு ஏணியாக
பலமான தொடர்பிற்குப் பாலமாவார்.

11. அடியளந்து ஆலயம் சுற்றி
மடியில் வந்துதித்த செல்வங்கள்
படியேறி, பண்பு, அறிவில்
முடிசூட வேண்டுமென்று
துடிப்போடு ஆர்வம் கொள்வார்
நடிப்பில்லா ஆவலுடன் பெற்றோர்.

12. சன்மார்க்கம் கல்வி, சமயம்
சகல கலைகளையும் காலத்தில்
சம்பிரதாயப்படி ஊட்டுவார் பெற்றோர்.
சந்தணமாக எம்மனதில் மணக்கிறார்.
சங்கீதமாக இனிக்கும் பிறந்தவீடு
சன்னிதி, சிறப்பிலொரு இமயம்.

13. ஆழம் ஆயுளற்றது, பெற்றவரன்பு.
சூழல், சுகம் பார்க்காத பொன் பூ.
வாழும் காலத்திலும் வீழும் போதினிலும்
நீளும் வாழ்வினிலும் உயிர் நீரோட்டமானது.

14. தேகமிது பெற்றவர் தந்தது.
ஊகமில்லையிது அழிவது.
மேகமென அன்பு பொழிந்து
நோகுமெனப் பாதுகாத்து எமை
சோகம் அண்டாது காத்த
தியாக நெஞ்சுடையோர் பெற்றவர்.

15. கருவறைக் கர்ப்பக்கிரகம், மனிதத்தின்
உருவறை. தந்தையால் உருவாகும் அறை.
இருவரின் பாச நிறைவை நாம்
கல்லறை செல்லும் வரை
மன அறையில் மதித்தப் பூசிப்போம்.

16. ஆற்றல் மிகு பெற்றவர் அன்பை
நேற்றும், ,ன்றும், நாளையும்
ஏற்றமுடன் காற்றும் பேசும்.
அகில சீவன்களும் பெறும்
அளப்பரிய அன்பு, பண்பு
ஆதரவு தாய் மடியில்தானே!

17. ஏழேழு சென்மங்கள் அல்ல
எழுந்துள்ள .ந்த சென்மத்திலேயே
பழுதற்ற வாழ்வை மனதிலேற்றி
பெற்றவரை மதித்துத் தொழுதிடுங்கள்.
அவரை அழுதிடச் செய்யாதீர் பாரினிலே.

# மனம் செல் வழி



நல்ல வளர்ப்பு, நல்ல பெற்றொர், நல்ல சூழல்
அமைந்த பிள்ளையின் மனம் செல் வழி
பெரும்பாலும் நன்றாகவே அமையும்.

இப்படிச் செய்! அப்படிச் செய்! என்று கட்டளையிடுவது
முரட்டுத்தனத்திற்கே பாதை காட்டும்.
நல்ல வகையான மனம் செல்வழி அதுவாகாது.

ஒன்றும் மந்திரமும் இல்லை தந்திரமும் இல்லை.
வீட்டில் பெற்றவர் எவ் வழியோ அவ் வழியே
பிள்ளை மனம் செல் வழியாகிறது.

பிழையையும் சரியையும் எடுத்துக் கூறி, பிள்ளையின் மனம் செல் வழியில் விட்டுக் கண்காணிக்கலாம். மறுபடியும் பிழையானால் எடுத்துக் கூறி விளக்கினால் உணர்வு உள்ள பிள்ளை புரிந்து கொள்ளும்.

## பெற்றோர் மாட்சி



(இலண்டன் தமிழ் வானொலியில் சனி, ஞாயிறில்
பெற்றவருக்காக நடக்கும் நிகழ்வில் எழுதி வாசித்தவைகள்)

31-7-2005.
நெஞ்சம் நிறைந்து கொஞ்சம் குறையாது
பிஞ்சு வயதிலிருந்து பஞ்சாக என்னைப் பாதுகாத்து
மஞ்சுக்குள் துயிலும் அம்மாவே! உன்
மஞ்சாடி குறையாத அன்பினை
மிஞ்சிட உலகில் ஏதுண்டு! இம்மியளவும்
நெஞ்சம் இதை மறவாது.

6-8-2005.
வலிமை கொண்ட பெற்றோர் அன்பு தினம்
பொலிவு கொண்டெமை ஆட்கொள்ளும் அன்பு வனம்.
மெலிவு கொள்ளாத எம் பணிவு மந்திரம்
எளிமையாய் அவரை மகிழ்விக்கும் அதிகம்.

7.8.2005.
கொஞ்சும் நெஞ்சு கொண்ட பெற்றவர்
தஞ்சம் நிறை தியாக சுரங்கங்கள்.
மிஞ்சும் சேவையில் வலது கரங்கள்.
வஞ்சமில்லாத பெற்றவர் பூவுலகத் தெய்வங்கள்.

13-8-2005.
வரம் தரும் இறைவன் பெண்களிற்கு
உரமாக காலத்திற்கும் பெற்றவர் அணைப்பை
நிரந்தரமாக்காது பாத்திரம் மாற்றி
தரம் மாற்றும் வாழ்வு சுபம் பெறுகின்றதா?

14-8-2005.
உள்ளம் முழுதும் கள்ளம் நிறையாது
தெள்ளத் தெளிந்த பரிசுத்த அன்பை
பள்ளமின்றி அள்ளித் தருவதில்
எள்ளளவும் தயற்காது தாயுள்ளம்.

19-8-2005.
உலகுக்கொரு வாரிசை உருவாக்கிக் கணமும்
விலகாது கண்ணிமையாதெமைக் காத்து.
திலகமாய் உலகில் திகழென்று பார்த்தல்
இலகுவான கடமையல்ல. பெற்றவர் மனம்
கிலமாகாது காத்தலெம் கடன். அவர்கள்
நலமாக நாம் பார்க்க வேண்டியவர்கள்.

20-8-2005.
தாயே தனிப் பெரும் கருணையே!
தாயகமாக மனதில் தரிப்பவளே!
தயாள மனம் கொண்டவனாய்
தாங்கி அவளுக்குத் தாரமானவன் தந்தையே!

27-8-2005.
உருகியே பாசத்தில் தம்மைத்
தருகின்ற பெற்றோரை மதித்தல்
அருகி வருதல் ஆரோக்கியமல்ல.
கருவோடு திருவானவர்களென உணர்தல்
பெருமைமிகு பணியாகும்.
துருவநட்சத்திரமாகவன்றோ அவர்கள்
உயர்ந்தவர்கள்.

ஆயுள் முழுவதும் ஆயாசமின்றி
ஆழமாக என் செயல்கள் நிலைக்கவும்
ஆழமான கருத்துகள் பேசவும்
ஆதிக்க ஆளுமையை எனக்குத் தந்த
ஆருயிர்ப் பெற்றொர் மிக ஆளுமையுடையவர்கள்.

18-9-2005.
'பூவாக மலர்ந்தாயே' என்றென்னை
அணைத்திருப்பார்கள்.
'பாவாக எம்முள்ளெ பாடுகிறாய்' என்றிருப்பார்கள்.
சேயாக நான் பிறந்து இன்று சீராக வாழ்வதற்கு
தூய என் தந்தைக்கும் தாயிற்கும் வாழ்த்துகள்!
தேனாக உங்கள் நினைவு இனிக்க நாளும்
ஊனாக, உயிராக என்னுள் ஊறி மலர்ந்துள்ளீர்கள்.

# பெற்றோர் மாட்சி



(லண்டன் தமிழ் வானொலியில் சனி, ஞாயிறில்
பெற்றவருக்காக நடக்கும் நிகழ்வில் எழுதி
வாசித்தவைகள்)
31-7-2005.

நெஞ்சம் நிறைந்து கொஞ்சம் குறையாது
பிஞ்சு வயதிலிருந்து பஞ்சாக என்னைப் பாதுகாத்து
மஞ்சுக்குள் துயிலும் அம்மாவே! உன்
மஞ்சாடி குறையாத அன்பினை
மிஞ்சிட உலகில் ஏதுண்டு! இம்மியளவும்
நெஞ்சம் இதை மறவாது.

6-8-2005.
வலிமை கொண்ட பெற்றோர் அன்பு தினம்
பொலிவு கொண்டெமை ஆட்கொள்ளும் அன்பு வனம்.
மெலிவு கொள்ளாத எம் பணிவு மந்திரம்
எளிமையாய் அவரை மகிழ்விக்கும் அதிகம்.

7.8.2005.
கொஞ்சும் நெஞ்சு கொண்ட பெற்றவர்
தஞ்சம் நிறை தியாக சுரங்கங்கள்.
மிஞ்சும் சேவையில் வலது கரங்கள்.
வஞ்சமில்லாத பெற்றவர் பூவுலகத் தெய்வங்கள்.

13-8-2005.
வரம் தரும் ,றைவன் பெண்களிற்கு
உரமாக காலத்திற்கும் பெற்றவர் அணைப்பை
நிரந்தரமாக்காது பாத்திரம் மாற்றி
தரம் மாற்றும் வாழ்வு சுபம் பெறுகின்றதா?

14-8-2005.
உள்ளம் முழுதும் கள்ளம் நிறையாது
தெள்ளத் தெளிந்த பரிசுத்த அன்பை
பள்ளமின்றி அள்ளித் தருவதில்
எள்ளளவும் தயற்காது தாயுள்ளம்.

19-8-2005.
உலகுக்கொரு வாரிசை உருவாக்கிக் கணமும்
விலகாது கண்ணிமையாதெமைக் காத்து.
திலகமாய் உலகில் திகழென்று பார்த்தல்
,லகுவான கடமையல்ல. பெற்றவர் மனம்
கிலமாகாது காத்தலெம் கடன். அவர்கள்
நலமாக நாம் பார்க்க வேண்டியவர்கள்.

20-8-2005.
தாயே தனிப் பெரும் கருணையே!
தாயகமாக மனதில் தரிப்பவளே!
தயாள மனம் கொண்டவனாய்
தாங்கி அவளுக்குத் தாரமானவன் தந்தையே!

27-8-2005.
உருகியே பாசத்தில் தம்மைத்
தருகின்ற பெற்றோரை மதித்தல்
அருகி வருதல் ஆரோக்கியமல்ல.
கருவோடு திருவானவர்களென உணர்தல்
பெருமைமிகு பணியாகும்.
துருவநட்சத்திரமாகவன்றோ அவர்கள் உயர்ந்தவர்கள்.

ஆயுள் முழுவதும் ஆயாசமின்றி
ஆழமாக என் செயல்கள் நிலைக்கவும்
ஆழமான கருத்துகள் பேசவும்
ஆதிக்க ஆளுமையை எனக்குத் தந்த
ஆருயிர்ப் பெற்றொர் மிக ஆளுமையுடையவர்கள்.

18-9-2005.
'பூவாக மலர்ந்தாயே' என்றென்னை அணைத்திருப்பார்கள்.
'பாவாக எம்முள்ளெ பாடுகிறாய்' என்றிருப்பார்கள்.
சேயாக நான் பிறந்து இன்று சீராக வாழ்வதற்கு
தூய என் தந்தைக்கும் தாயிற்கும் வாழ்த்துகள்!
தேனாக உங்கள் நினைவு இனிக்க நாளும்
ஊனாக, உயிராக என்னுள் ஊறி மலர்ந்துள்ளீர்கள்.

# பெற்றவர் மாட்சி



12-6-2005.
இனிமை பெற்றவர் அருகு.
இனிமை அவர்கள் அணைப்பு.
இனிமை அவர்கள் ஆதரவு.
இவையே உலகின் முதற்தர இனிமை.

24-6.2005
ஆகுலத்திலும்(மனக்கலக்கத்திலும்), ஆபத்திலும்
அணைக்கும் ஆதரவும், பெற்றவர்
ஆசி மொழி கேட்பதுவும் பேரானந்தம்.

ஆயுள் முழுதும் அன்பு, ஆதரவெனும்
ஆயுதபாணியாக வாழ்வுப் போரில்
தீயுள்ளும் நீராக, தீரமாய் வாழ்ந்தது
சாயும் நினைவல்ல. அப்பா! அம்மா!
சகலபொழுதும் நினைவில் நீங்களே!

3-7-2005.
உள்ளமும் உணர்வுகளும்
தெள்ளிய நீரோடையாக
கள்ளமின்றி உருவாக்கியவர்கள்
உள்ளபடியெம் பெற்றோர்கள்
புள்ளிக் களங்கமும் படாதவர்
மனதை வெள்ளையாகக் காப்பது மேல்.

23-7-2005.
அன்பு நிறை பெற்றவர் உள்ளம் அமிர்ததாரை
இன்பமாய் இதயத்துள் சிறகடிக்கும் ககனப் பறவை
பண்பாய், இதயத்துத் தீப்பெட்டிப் பொன் வண்டாய்
என்றும் போற்றிடுமே அவரன்பை எமதுள்ளம்.

20-3-2005.
கண்ணாக நீ, பண்ணாக நீ
மண்ணாக நீ விண்ணாக நீ
கண்ணிலே உறவாடும் உருவங்கள்
எணணிடில் பிள்ளைகளின் தெய்வங்கள்.
எண்ணாத பொழுதிலும் உங்களை நினைவு
என்னோடும், என்னுயிர் மூச்சோடும்.

26-3-2005.
என்றோ கேட்டது போலவல்ல உங்கள் குரல்.
என்றோ பார்த்தது போலவல்ல உங்கள் உருவம்.
நன்றே இதயச் சிறையில் பதிந்து
இன்றும் பார்ப்பது போலத் தெரிகிறது.
இன்றும் அன்பு மொழிகள் கேட்கிறது.

4-4-2005.
பெருமையாய் பிள்ளை வாழப் பாடும் தரங்கம்.
அருமையறியாது அவலமெனும் துன்ப அரங்கக்
கருமையில் தள்ளிவிடும் சில பிள்ளையின்
இரங்காமனம்.

10-4-2005.
கனவுத் தொழிற்பாடு எதிர்காலத் திறப்பு.
நினைவுடன் பின்னியது பிள்ளை வளர்ப்பு.
வினவுதல் விடைகாணல் உறவுக் கவனிப்பு.
நனவுக் கடமை பிள்ளையின் நல்லெதிர்காலம்.

நீங்கள் உங்கள் பெற்றவரைப் போற்றுவதும்
உங்கள் சொத்தாகப் பார்ப்பதுவுமென்றும் நிலைக்கட்டும்.
நிலையான இந்தப் பந்தம் உங்கள் வாரிசுகளுடனாகவும்
என்றும் தொடரட்டும் உங்கள் வழிகாட்டலாய்.

# பெற்றோர் மாட்சி வரிகள்



4-4-2004.

ஒவ்வோரு வீட்டு ஒளி தீபமும் தாய், எண்ணெய் விட்டு திரியின் ஒளியில் பலன் காண்பவரும், அன்பெனும் எண்ணெயின்றி திரி கூடுபத்தி அவிய விடுபவரும் உலகில் உள்ளனர். கடமையில் கருத்தாக இருப்பவரால், கடமையைச் சரிவரச் செய்பவரால் தீபமும் காக்கப்படும்.

30-10-2004.

முகவரி தவறிப் போய்
முழுவதும் தொலைந்திடாது
முறையாக என்னை வளர்த்து
முத்தமிழில் குளிப்பாட்டினீர்கள்.
முன்மாதிரியாக வாழ்ந்து என்னை
முன்னேற்றினீர்கள். முறையாக வாழ்ந்து
முன்னிலை பெறுவேன். முதலீடான
உங்கள் வளர்ப்பு முறையை
முக்காலமும் என்னால் மறக்க முடியுமா!

6-11-2004.

சுகமான வேளை, இதமான காலை
அகமீதில் பெற்றவர் நினைவு மாலை.
இகமீதில் இவ் வெண்ணமாலை
பகுக்கட்டும் உயர் வெற்றிச் சாலை.
புகுத்தட்டும் ஒரு பாசச் சோலை.
பெற்றவர் புகழுக்கிது வரமாகட்டுமிவ்வுலகுக்கு

2004 கார்த்திகை.

உந்தன் மனதில் பொங்கிய ஆசைகளை
எந்தன் மனது எண்ணிப் பார்க்கிறது,
சொந்தமாய் நானும் தாயான போது.
பந்தமெனும் பெற்றவர் உறவு
எந்தக் காலமும் ஒன்றெனவே
இக்கணத்தில் நான் எண்ணுவது.

12-12-2004

குயில் கூவும் வேளை இனிமையிலும்
மயில் ஆடும் மாலை அழகிலும்,
மலர் மலரும் இனிமை சுகந்தத்திலும்,
அலர்ந்திடும் அதிகாலை அமைதியிலும்
ஆறுதல் தருமுன் புன்னகையை
எண்ணுகிறேன் அம்மா!

18-12-2004.

கூவின பூங்குயில் கூடின குருவிகள்
கூட்டுறவாய்ப் பாடும் காலையில்,
பாட்டுடன் பெற்றவர் புகழ் பாட
வீட்டினில் குழந்தைகள் துயிலெழுப்பி
நாட்டமாய்த் தமிழினில் பாட
நாமகளே நல்லருள் தர வருவாய்!


8-1-2005.

மனத்திரையில் விழும் உறவுப் படங்கள் பெரும்
தனமெனும் உறவின் தொடர் சங்கிலிகள்,
தினம் நினைவில் வரும் நிழல்கள்.
இனம் இதைப் போற்றி வாழ்தல்
புனல் போல் மகிழ்வைப் பெருக்கி,
கனமன துயரை அகற்றும்.

11-2-2007.

நிலவாக, அதன் குளிர் ஒளியாக
உலவுவது வாழ்க்கை வானில் பெற்றவரன்பு.
இலவம் பஞ்சாய் மனதுக்கு இதம் தருவது,
உலகில் பலரை ஏங்க வைப்பதுவும்
பொன் நினைவாக மனதில் பதிந்து
செந்நீராக உள்ளே ஓடுவதும்.
பேரன்புடை பெற்றவர் அன்பே!

# தில்லானா ஆடும்...



தில்லானா ஆடும்.
(இசையமைத்துப் பாட.)

இல்லம் நிறைந்து இனிக்க
தில்லானா ஆடுவது பெற்றோரன்பு.
மல்லிகையாய் மணந்து சுகமாய்
மெல்ல வருடும் மனமாளிகையை. (இல்லம்..)

அன்பு முத்தாரம் எமக்கணிய
தராதரம் தேடாதோர் பெற்றோர்.
அரிதாரமற்றவர், ஆதாரமானவர்.
அன்பாயிருக்க அவதாரமானவர். (இல்லம்..)

தண்ணிலவு வட்டமாய் எம்மை
மண்ணில் நிலையூன்ற வைப்பார்.
கண்ணில் தூசி விழுந்தாலும்
ஏண்ணம் கலங்குவார் பெற்றோர். (இல்லம்)

# தங்கச்சுராங்கம்



ஊற்றெடுத்துப் பெருகும் அன்பு
வற்றாத அருவியாய் ஓடும்.
அற்புதமிது உலகில் அதிசயம்.
பெற்ற மனம் தங்கச் சுரங்கம்.
தமையீந்து எமைக் காக்கும்
சுமை தாங்கிகள் பெற்றோர்.
இமை சோர்ந்து தளர்ந்தால்
இதமாகப் பாதுகாப்போம்.

முதன் முதல் விரல் பிடித்து
முதலீடாக்கினார் தமிழை.
முப்போதும் எம் நினைவில்
முதல் வர்க்கம் பெற்றோர்.

# ஆரமிடுவோம்



ஈரமிகு பெற்றவர் எண்ணங்களை
சாரமுடன் நன்றியெனும் வார்த்தைகளால்
ஆரமிட்டு உணர்வோடு பாடுவோம்.
நேரமிதே. பெற்றவரை ஏற்றுவோம் ( ஈரமிகு)

தரணியில் எம்மைத் தவழவிட்டு
அரவணைத்து அகம் குளிர்ந்து
மரணம் வரை மாய்பவர் நாம் சரணமாகும்
பெற்றவர்கள் தான். ( ஈரமிகு)


வானமாய் இதயத்து அன்பைத்
தானமாய் இறைக்கும் பெற்றோர்
ஊனவர். உயிரவர் எமக்கு.
ஆனவரை பாசம் பொழிவோம். ( ஈரமிகு)

# வாழ்கடல் வலம்புரி அம்மா



தாமரை பூத்த கரையிலே
சாமரம் வீசும் தென்றலாய்,
சாந்தி தரும் தாயன்பு.
சாமகானத் தாய்மை. சீவன்களை
சாரத்தியம் பண்ணும் சங்கீதம். சர்வலோக சஞ்சீவி
தாய்மை. அன்பு அகராதியை ஆரம்பித்த அறிமுகத்
தொப்புள் கொடிப்பாசம்.
காலங்கள் வெற்றுக் கிண்ணமாகாது,
கோலமிடும் துன்ப நூலாம்படைகளை,
மூலமான பாசக் கண்ணிமையால்
பலமாகத் தள்ளும் மின்சாரம் தாய்மை.
நந்தவனப் பாசக் குகையதில் அம்மா
விந்திலிருந்து உருவான இசைச்சந்தம்.
வசந்த மழலையின் நேச அருவி.
அந்தமுடன் நீந்தும் அமுதஅருவி.
உயிருக்கு உறவானவள். சிந்தனைப் பயிருக்கு முன்
மாதிரியானவள்.
துயருக்குப் பாச மருந்தானவள்.
அயராது உழைக்கும் தேனீயவள். மனிதம் உய்ய வந்த
மகரந்தத் தேன் தாய்மை.
ஏழ் கடலிலும் காணாத
வாழ்கடல் வலம்புரி அம்மா.

## பெற்றோர் மாட்சி வரிகள்



24-7-2005.
எதிர்பார்ப்பில்லாத பெற்றவர் அன்பொளி
எழுவான் சூரியனாக எம் இதயத்தில்
எழிலாகக் கொலுவிருக்க வேண்டும்.
உள்ளம் வெள்ளையாக வைத்திரு
கள்ளப் புள்ளிகளதில் வேண்டாமென
பள்ளிப் பாடத்தோடு பண்புப் பாடமும்
வள்ளலாய் அள்ளித் தந்தவரை
தள்ளிடாது காலமுழுதும் காப்பது எம் தலையாய
கடமை.

12-6-2005.
சங்கிலும் பால கொடுத்து
தூங்கும் போது முகம் பார்த்து
கயிறாக எமக்காக உடல் வருத்தி
உயிரினுமினிய தங்கள் காதலால்
உயிர் தந்த உத்தமர் நீங்கள்.
பதிலாக நிங்கள் விரும்புவது
பாசம் தானே! இதில தானே உலகில் பேதம்!
கொடுங்களேன்!
குறைந்திட மாட்டீர்கள்.

8-4-2007
ஒரு நாள் சனிக்கிறோம் பெருமை மனிதமாக
அருமைத் தமிழ் ஏற்றி அவனியில் உலா வர
கருவியாகிறார் பெற்றவர். திருப்தியான வாழ்வின்
திருக்கதவு திறக்கவேண்டும், துருவப் பயணமாக அல்ல.
துருப்பிடிக்காது துளிர்க்கும் கனவாக!

2005.
பெற்றவர் எனும் அதிகார நிலையை உணராது
எப்போது கண்ணை மூடிட எண்ணம் கொள்கிறீர்களோ
அப்போது பொறுப்புணர்வையும் நீங்கள் கீழே
வைக்கிறீர்கள் இச்செயலால் நீங்கள் உங்கள் பிள்ளையை
ஏமாற்றுகிறீர்கள்.

21-5-2005
அன்புக் கவிதையாய் உறவு மலர
அழகிய கவிதையாய் வாழ்வு மலர,
இன்பக் கவிதையாய் வெற்றி மலர
என்புருகத் தினம் எமக்காய் உருகிய
காலத்தால் அழியாத ஓவியங்கள்,
ஞாலத்தில் பெற்றோர், உயிர்க் காவியங்கள்.
பாசத்திற்கு அவரெமது அகரம்.

28-7-2007.
கண்ணுக்குக் கண்ணான பெற்றவர்
மண்ணில் நடமாடும் பாச இலக்கியங்கள்.
எண்ணாத பொழுதிலும் எம் செயல்களில்
பண்ணாக ஒரு வகையில் மிளிர்பவர்கள்.
அவர் விண்ணேகிடிலும் எம் மனக்கண்ணானவர்.

6-3-2005.
நிலவு நீங்கள் எங்கள் வாழ்க்கை வானில்
உலவுகிறீர்கள் நிலையாக சமமாக.
தொலையாத ஏக்கம் என்றுமுங்களுக்காக!

14-1-2006.
சிறப்புடை வாழ்வு நல்ல பெற்றோரைப் பெறுவது.
பறப்பது அவர்கள் உன்னை உயர்த்தவதற்காக.
சிறக்க வாழ்ந்திடும் திறப்பு உன்னிடமே.
இறப்ப வரை நற் பண்பகளால் அவர் மனதை நிரப்பு

## பெற்றோர் மாட்சி வரிகள்



19-7-2008.
மனம் என்ற கனவுத் தொழிற்சாலையில்
சினமின்றிப் பல போதனைகளையேந்தி
கனமின்றி வாழ்வுக் கடலை நீந்த
தினம் பாடுபட்ட பெற்றோரே பெரும்
தனம் நீர் எமக்கு. கடவுளின்
இனமாக உம்மை மனம் விரும்புதே.

6-2-2005.
யுகங்கள் தோறும் அனைத்தும் அழியினும்
யோகமாக தாய்மைச் சுடரை.
யாகமாகப் பெற்றவர் அன்பை
யௌவனமாய் உலகம் போற்றும்.

5-2-2005.
திருமந்திரமாக அம்மா உன் பெயரோடு
திருப்தியாக அப்பா பெயரும் இணைந்து
திவ்வியமாய் இதமாய் மனதில் நிலைக்கிறதே!

2005.

கொஞ்சி எனை அணைத்த சந்தன ராகம்
அஞ்சிடும் போதெனை அணைத்த ஆதரவு ராகம்
பஞ்சணை மழலையிலிருந்து பதிந்த ராகம்
கஞ்சமில்லா அப்பாவின் பாசராகம்
வஞ்சமற்ற உலகை மிஞ்சும் அம்மா நேசம்
மஞ்சுக்குள் மறையும் வரை மருந்தாகும்
நஞ்சில்லா உயிர் நாடியாம் அன்பு ராகம்.

2005.

ஆலயம் எம் வீடெனும் இலக்கணம்
ஆதார சுருதியாக ஆலாபனமானது மனதிலே.
ஆரோகண சுருதியாகட்டும் வாரிசுகள் வாழ்வு.
ஆக்கினைகள் அவரோகணமாகி ஆவியாகட்டும்.
பெற்றொர் ஆசீர்வாதமும் பேரர்களுக்காகட்டும்.

25-2-2006.

உங்களோடு வாழ்ந்த காலங்கள் ஒளியாய்
திங்கள் கிணற்றுள் மின்னும் நிறைவாய்
பளிங்கு போல எனக்கு மட்டும்
விளங்கும் அற்புத ஆழ்ந்த உன்னதங்கள்.
எங்கும், எப்போதும், என்னுடன் அவை
மங்காது பின் தொடரும் உயிர் நிழலாய்.

26-2-2006

அன்று முதல் அன்பின் கண்ணிமையில் நான்
இன்பமாய் வாழப் பாதையிட்ட பெற்றோர்
சின்னக் கவலையின் வாசனையும் என்னைக்
கவியாத
ஏண்ணம் கொண்டவர், இதே போல
சின்னக் கவலைகளும் என் பிள்ளைகளைத்
தின்னத் தகாதெனும் நினைவு என்னோடு.

12-3-2006.
பண்புடை மொழிக் கலாச்சார அகராதியை
அக்கறையாய் எம் வாழ்வில் ஏடு தொடக்கினீர்.!
என்றுமதன் நல் வரப்புக்குள் நடக்கவன்றோ
வழிகாட்டினீர்!

1-4-2006.
கண்டேனுங்கள் உறவு உலகிலுயர்ந்ததென்று
கண்டேன் பல உன்னதங்களையுங்கள்
வாழ்க்கையால்.
கண்டேன் உண்மையுலகில்
வெல்லுமென்பதை.
காற்றோடு போகாது பெற்றவர் நினைவு.
ஏற்றமிகு சிந்துபாடுமொரு தொடர்கதையது

# பாசாங்கில்லாத...



பாசாங்கில்லாத பரிசுத்த ஆட்சி
தாய்மையாம் இராசாங்க ஆளுமை.
தூய்மைக்கு ஆதாரம் தாய்மை.
தலை சாய்த்து வணங்குவோம்.
(பாசாங்கில்லாத..)

ஆசை அம்மா அப்பாவுடன்
ஆயுட்காலத் தொடர்பு ஆனந்தம்.
ஆயுதமாய் அன்பை ஏந்தி
ஆயாசமின்றி எம்மை ஆதரிப்பார்
(பாசாங்கில்லாத.)

சுடரும் குத்துவிளக்கான அன்பு
படர்ந்து எமக்கு (படர்ந்தெமக்கு) ஒளியாகும்.
திடமான பெற்றவர் பாசம்
இடர் களைந்து இதமாகும்.
(பாசாங்கில்லாத)

# பெற்றவரே பேறுபெற்றவரே



உயிருக்குள் உயிர் வைத்துப் பிள்ளையை
கருவறைக் கர்ப்பக் கிரகத்தில் கருத்தாய்
உருவாக்கி உலகிற்குத் தரும் இனியவர்
பெருமையுடை பேறு பெற்ற பெற்றவரே!

அகமெனும் கோயில் மூலவிக்கிரகங்கள்!
அன்பென்ற இறகினால் ஆன்மா கோதியவர்கள்!
பண்பின் போதி நகரமான இல்லத்தில்
பாசத்தின் சாசுவத சிகரமானவர் பெற்றோர்!

சொர்க்கமாய் இவ்வுலக வாழ்வை, இனிய
வர்க்கமாக்கு என்று தீர்க்கமாய்,
வேரோடி விழுதுவிடும் மனிதத்தை
தூரோடு நுழைத்த உன்னதமானவர்கள்.

நெஞ்சுரம் தந்து நெம்புகோலாகி,
நெறிகாட்டி, நெஞ்சில் நிறைந்தவரைத்
தரணியில் எம்மைத் தவழவிட்டவரை,
அரவணைத்து மரணிக்கும் வரை காப்போம்!

அருமை பெருமையறிந்து பெற்றவரை
கருமைபட வைக்காது நாம் காப்பதே
திருவுடை எமது பெற்றவர்களை
பெருமைக்குரிய பேறு பெற்றவராக்கும்.

(இலண்டன் தமிழ் வானொலி. ரி.ஆர்.ரி தமிழ் ஒலி வானொலிகளில் என்னால் வாசிக்கப்பட்டது.)

# உறவு வட்டம்



அருமை உறவு வட்டம்
உருவமைத்தார் உலகில் பெற்றோர்
திருவோடு கருவிலான உரிமை
ஒரு வீடு உறவெனும் பெருமை.
(அருமை.)

நிறம் மாறாப் பாசம் உயிராட,
திறவுகோல் அன்பு ஆதரவாய்
உறங்காது பாடுபடும் பெற்றேரின்
இறவாத பாசம் உலக சங்கமம்.
(அருமை)

நிறக்கும் வானவில்லான உறவு
சிறந்த ஏலக்காயாய் மணந்து
சிறகு விரித்தால் பெற்றோரன்பு
பிறகொரு குறையில்லை. பேதமில்லை..
(அருமை.)

# மூலச்சக்கரங்கள்



அன்புப் போதி மரம்
இன்பப் பெற்றோர் இல்லம்.
பண்பின் இலக்கியம் பெற்றவர்
உன்னத உரை நடைகள். (அன்புப்)

காலச் சக்கரம் சுழல எமக்கு
மூலச்சக்கரம் பெற்றோர்.
சீலமான வாழ்வுத் தேரிற்குப்
பாலமான இராசிச் சக்கரம். (அன்புப்..)

என்னை உருவாக்கிய உயிர்த் துளி.
என்னுள் எதிரொலிக்கும் அன்புமொழி.
எழுத்தாணி இயக்கத்து ஆதார சுருதி
முழுவதும் பெற்றோரின் கொடைகளே. (அன்புப்.)

## ஊக்கம் தருமன்பு



வாய்மை, வலிமையாம் தந்தையன்பு,
வலையாக வீட்டில் தாய்மையன்பு,
ஆய்வுக்கும் அப்பாலொரு தூயஅன்பு.
ஓய்வின்றிப் பொழியும் பெற்றோரன்பு.
(வாய்மை)

பத்து விரல்கள் பாசமாய்ப் பதித்து
சொத்தாகப் பிள்ளையைப் பார்ப்பார்.
தித்திக்கப் பேசித் தாய்மொழியை
முத்தாகப் பழக்கும் பெற்றோர்.
(வாய்மை.)

பூக்கும் பெற்றோர் அன்பு
ஊக்கம் தந்து காக்கும்.
ஆக்கமான அன்பிழந்தால்
ஏக்கம், தாக்கம் சோகமே.
(வாய்மை.)

## எம்மைப் பயன்படுத்துவோர்



ஒரு மழலை தன் குமுத இதழ் விரித்துச் சிந்தும் முதல் புன்சிரிப்பானது, ஒரு தாய்க்கு வெற்றியை, ஆனந்தத்தை, பெருமையைத் தருகிறது. இவ்வுணர்வுகளால் அவள் புரட்டி எடுக்கப் படுகிறாள்.

தம் அழியாத அன்பைத் தந்து வாழ்நாள் முழுவதும் எம்மைக் கொத்தடிமையாக வைத்திருப்பவர்கள் நமது பெற்றோராவர்.

ஒரு தாயன்பு கொண்ட மனிதன் பெரிய கோட்டை, கொத்தளம் வைத்திருப்பதிலும் பார்க்க, மிகப் பெரிய செல்வந்தனாகிறான்.

ஒரு மனிதனின் வாழ்வைச் செம்மையிடுவதில் ஒரு கொத்தனின் கடமையைப் புரிபவர்கள் பெற்றவர்களா கின்றனர்.

பிழைகளைக் கொத்தி எடுத்து வெளியே வீசி, மனப்பாத் தியின் பூச்சிகளுக்கு மருந்திட்டு, நல்ல மனிதப் பண்பு விதையிடுபவர்கள் தந்தையும் தாயுமாவார்கள்.

அன்பு மலர்க் கொத்தின் சுகந்த மணத்தில், ஊக்குவிப்புக் கூடையில் நம்பிக்கைப் பழங்கள் தருகின்றனர் பெற்றோர். இவர்கள் தரும் பாதுகாப்பு உணர்வில் கனவு நுரைகள் உருவாகின்றன. எண்ணற்ற கனவு நுரைகளில் சில பலமடைகின்றன. அதனுள் நாம் அமர்ந்து உலக வானத்தில் வலம் வருகிறோம். நிச வாழ்விலும் உயர்கிறோம்.

நம்பிக்கை அடித்தளம் உறுதியானால், மனதில் பாதுகாப்பு உணர்வு பலமானால் கொத்தும் மனிதப் பூச்சிகளால் எம்மை எதுவும் செய்துவிட முடியாது.

## பெற்றோர் மாட்சி



23-12-2007.

உயிரில் உயிர் வைத்து உலகுக்கு எனைத் தந்தவர்கள் பயிரிட்ட பாசம், பண்பு பாங்காய் வளர்ந்துலகில்
பரவியமை, எமது வாரிசுகளுக்கும் பிறருக்குமான ஒரு பூந்தோட்டம்.

5-1.2008.

இதயம் முழுதும் தியாக சிந்தனையுடன்
உதயமாகும் பெற்றவர் அன்பெனும் திருக்குறள்.
பதியமாகி நல்வழி செல்லும் பிள்ளைகள்
பெருநிதியமானவர்கள். அவர்கள் பண்பை அறியும் பெற்றவரதும், பிறர் மனமும்
பாகாக உருகுமே! நல்ல பிள்ளைகளால் அன்பு மனம் உருகுமே!

21-5-2006.

நானே மட்டுமல்ல, மானே தேனே
எனக் கொஞ்சி அணைத்து
ஊனே உருக எமை வளர்த்த உயிரான பெற்றோரை யாரும்
உதறி மறக்க முடியாது.
நான் மட்டும் மறப்பேனா?

இதயம் உணர்ந்து அனுபவிக்கும்
இன்ப உறவு பெற்றவர் அன்பு.
இதை முழுமையாக அடைந்த மனிதனின்
இதயம் ராக்பெல்லர் மாளிகை தான்.
இனிய பெற்றவர் அன்பெனும் திருக்குறள்
இல்லம் தோறும் நாளும் புரட்டும் குறள்தான்.

இமையாக எமைக் காப்பார்.
சுமையாக எமைக் கருதுவதில்லை.
தமைக் கொடுத்துத் தியாகிப்பார்.
அமையவேண்டும் இது அனைவருக்கும்.
எமைக் காப்பவருக்குப் பிரதியுபகாரம்
எம் அன்பைக் கொடுக்கும் உபாயமே!

20-5-2006.
அழகான உங்கள் உருவம்,
பழகிய அன்பால் பெருகியது.
இழகிய மனதால் உயர்ந்தது.
பல்கலைக்கழகமான குடும்பத்தில் அப்பாவுடன் நிழலாக நீங்களும்
ஆழமாய்ப் பதிந்த உருவம் அம்மா.

13-5-2006.
எப்படி வைப்படி இருப்பதென்று
தப்படியின்றி என்னை வளர்த்தவர்கள்.
அப்படி வளர்ந்த நான் இன்று
இப்படிக் கவித்துவமாய் நன்றி கூற
நாடி எழுதுகிறேன் பெற்றவருக்காய்.
நன்றி தவிர வேறெது சொல்வேன்!



3-6-2006.

தெய்வமெனும் நிலைக்குச் சமமான தெய்வத்துவம் நிறைந்தவர் நல்ல பெற்றோர். தொய்யாத அன்புடைய பெற்றவரும் குழந்தைகளும்

தெய்விகமாக அமைவது தெய்வச் செயல்.

தெரிந்து என்றும் உலகில் நல்லவற்றைச் செய்தால் நல்ல இன்பம் காணலாம் என்று கண்டு கொணடேன்.

4-6-2006.

ஆலயமாம் இல்லத்தில் தெய்வங்களாக ஆலிங்கனம் செய்த மனித தெய்வங்கள்

ஆலமரமான அருள் நிழற்குடைகள்.

ஆளாகி நாமுயர தினமும் அன்பை ஆலாபனம் செய்யும் ஆளுகையான பெற்றோர்

நிழலில் இல்லைச் சேதாரம். ஆளாகி நாமுயர அதுவே ஆதாரம்.

17-6-2006.

நானாகப் பிறந்தேனா! பெற்றது

நீங்கள் தானே என்று பெற்றோரை வீணாகச் சினப்பார் சிலர்.

கூனாகக் குருடாக இருந்தாலுமெம்மை

ஊனாக, உயிராக எண்ணுவோர் பெற்றோர்.

கோனாக வரவேண்டுமென்று எம்மைக் கோடி கற்பனையில் வளர்ப்பவரல்லவா நீங்கள்!

18-6-2006.

நினைவில் இருக்கிறது,என் நினைவு தொடங்கிய நாள் முதல் அனைத்திலும்,

வினையிலும், மனையிலும், முனைவாய்

என்னுடன் பழகிய பெற்றவர் மலையிலும், பனையிலும் உயர்வாய் மனதில் நிறபவர்களென்று

புனைகிறேன் வரிகள் மனதில் நிறுத்தி.

25-6-2006.

நானாக எல்லாம் செய்தேனா!

ஊனாக, உயிராக என் பெற்றவர்


தூணாகத் துணையாக இருந்து

துளிர்த்து வளர உதவினரே!

தேனான காலங்கள் மாறியது.

தேடுகிறேன் அந்நாளை மறுபடி தேடுகிறேன்.

# பாச வரிகள்



24-10-2004.

பாசமழையில் நனைந்து, நேசக் கடலில் மிதந்து,
தாசனாக ஒவ்வொரு சீவனும்
நாசமாகாது உயர, வாசமான
தாய் தந்தையோடு வீசிய நேசத்திற்கு உலகில் ஈடு ஏது!

24-2-2007.

உதயத்திலிருந்து கற்பனை நிறம் கூட்டி, பதியம் வைத்து வளர்த்தனர்.
தமது பெருநிதியமாகமனசில் கொலுசுகட்டி
எம்மை உருவாக்கியவர்கள் எம்மினிய பெற்றவர்.
வரமாகப் போற்றி அவர்களைப் பாதுகாப்போம்.

2-7-2006.

காலம் முழுதும் அழியாத ஓவியங்கள்,
பாலத்தில் அன்பின் அடித்தூண்கள்.
பாலம் அமைக்கும் அறிவின் தூண்கள்.
சீலம் போதிக்கும் பெற்றோர் ஆசிரியர்கள்.
ஆலம் விழுதாக விழுதுவிடுமிவர் நேசம்
தாலம் (பனை) போல உயரும் பாசவாசம்.

23-7-2006.
நாளும் கோளும் பார்த்து
நீளும் காலத்தில் உம்மை
தேளும் பூரானும் கூடத் தோளில் மேயாது வளர்த்தார்.
ஆளுமவர் தூய அன்புச்
சரணாலயம் என்றும் நமதே.

7-8-2006.
நிலாவெனும் தண்மையான அன்பு
உலாவியது பெற்றவர் பாசத்திலே.
குலாவி மகிழுந்தோம் கலகலப்பாக.
குடும்பமெனும் நிலாமுற்றத்தில் இந்தக்
குடைபோன்ற குளிரன்பைக் கொடுப்போம்
வாரிசுகளுக்கு குளிர்நிலா முற்றமாக.

6-8-2006.
புன்னகையோடு வாழ்வை எதிர்நோக்கினால்
அந்நகை எனக்கும் வருமம்மா.
பொன்னகையால் தராத நிறைவு
இனிய மென்னகையால் வருமம்மா.
உன் புன்னகை ஒளியால் அப்பாவை.
எம்மைப் புளகம் செய்த காலம்
என் பிறந்த வீட்டுத் தேசம்.

15-7-2006.
மாண்புடன் நாம் வாழவென்று
மானசீகமாய் எமை வளர்த்தார்.
மாலுமியாகக் குடும்பத்தில் அப்பா.
மந்திரியாய் அருகில் அம்மா.
மாசில்லாத இவர்கள் பெயர்
மாட்சிமையடைய மாண்புடன் நாமும் வாழலாம்.

## பாச மொழிகள்



10-9-2006.
தரணியிலே பெற்றோர் அன்பெனும், பாச ஆரணமாக
வந்தவர் பெற்றோர். இவர்கள்
பூரணமான அன்பினை இணைத்து
மரணம் வரை நேசம் குலுங்கும்
தருணம் நிசமான உறவின்
சமர்ப்பணம் ஆகும்.

4-11-206.
உறங்காத தாய்மை மனம்,
இறங்காத தந்தையின் தேடல்,
அறங்காவலராய் நற்பண்பகளை,
சிறந்திட எமக்கு ஊட்டியவர்கள்,
மறக்காது இவர்களை நினைக்க
சிறப்பாக அனைவருக்கும் வரம் வேண்டுமே!

7-10-2006.
வாழ்வுக் கடலில் முத்துக்குளிக்காது வந்த முத்துகள்
தாயும் தந்தையும்.
அந்தப்புரமான மன மாளிகையில் ஒளிவீசி

இந்த உலகில் திறமைச் சுடருடன்
சிந்துபாடி வாழ்ந்து நன்றிக் கடனாகத்
தந்திடுவோம் நல்லவொரு வாழ்வை.


27-5-2007.
துல்லியமாக விடயங்கள் மனதில் பதிவதாக,
மெல்ல விளக்கமாக பிள்ளைகளுக்கு எடுத்து, வல்லமையாகக் கூறுவது பெற்றவர் கடமை.
சொல்லெடுத்து இதயத்தைக் காயப்படுத்தாது
கல்லாக வில்லெடுத்துச் சொல்லை எறியாது
அன்புச் சொல்லால் பிள்ளைகளை வெல்ல வாழ்த்திடுவோம்.

13-5-2007.
கண்களாய் எம்மை உயிரில் சுமந்தனர்.
புண்கள் பட்டெமை உருவாக்கினர். செய்தவை
எண்களில் இயம்பவியலாத தியாகங்கள்.
பண்கள், பரிசுகள், மாலைகள் போதாது.
எங்கள் நன்றிக் கடனே பெற்றோரிற்குப் பொங்கும் மகிழ்வு தரும் பூவாக்குவோம்.

26-5-2007.
உதிரம் உணர்வு சேர்ந்த உறவின்
உதிர்ப்பே இவ்வுலக வாழ்வு. பெற்றோரும்
சதிரம் தேய உயிருள்ளவரை பிள்ளைகளுக்காய்
கதிரவன் போல் ஒளி தருவதே பெற்றோர் இலட்சியம்.

வைகாசி-2007.
சித்திரமாய் மனதில் நிற்பவர்.
பத்திரமாய் நாம் நடக்க
புத்தி தந்தவர். நெஞ்சில் சத்தமிடுமவர் மொழிகள் அவர்
உத்தம வாழ்வு எமக்கு
நித்தமும் வழிகாட்டும் சிறப்பாய்.

## பெற்றோர் மாட்சி



வைகாசி 2007.
செம்மண் புலத்தில் பெய்த மழைநீராய்
செந்தளிர்ப்புடன் இணைந்து பெற்றவர் அன்பில்
செழித்திடும் பிள்ளைகள் வழி மாறாது, அன்பில்
குளிப்பாட்ட வேண்டும் பெற்றவர்களை.
அழிவின் பாதையில் செல்லாது ஆக்க
வழியில் பிள்ளைகள் செல்ல வேண்டி வாழ்த்துகிறேன்.

15-7-2007.
காலை மாலையிலும், வேலையிலும் ஓயாது
மாலையாகக் குடும்ப நலத்தைத் தமது
தோளில் போடும் பெற்றோரே! எமக்கு
வேலையென்ன! உங்கள் நினைவை
நூலைப் போல நுகர்ந்து அனுபவிக்கும்
மகள் நான் என்றென்றுமுங்கள் நினைவுடன்.

ஆனி 2007.
ஆதியில் உறவு கொண்டு உயிரில்
பாதியாய் எம்மில் கலந்தவர் பெற்றோர்.
மீதியின்றி முழுகௌரவமும் அவர்களுக்கு
வாதிடாது கொடுப்பது நம் கடன்.
மேதினியில் பெற்றவர் நிம்மதிக்காய்
ஆதியும் அந்தமுமான இறையை யாசிப்போம்.

29-9-2007.
நினைவுகளில் உயிர் உடலிலிருந்து பிரியும் வரை
நிசமாக வாழ்வது பெற்றவரின் பேரன்பு.
நிலநடுக்கம் சுனாமியான வாழ்வில் நிகரற்ற
நிவாரணம் தரும் நிம்மதி இன்பநிலவு அது.
நிர்மலமான அன்பில் கடைத்தேறும் உயிர்கள்
நிறைவடையவே நிவேதனமானது பெற்றவரன்பு அலைகள்.

2007.ஐப்பசி.
பொன் எழில் பூத்த என் பெற்றொர் மனமெனும்
அன்பு மாளிகையின் சின்ன ராணியாம்
என் சுய ஆளுமையை அன்பெனும்
மென்னலகால் கோதி, ஆளுமைப் பூவாம்
தன்னம்பிக்கையை மலரச் செய்தவர்கள் பெற்றோர்.

20-10-2007.
பூக்கள் ஏந்தி சக்தியையும், நன்றியுடை
பாக்கள் ஏந்தி பெற்றவரையும்,
நோக்கும் மனம் வேண்டும்.
ஏக்கம் எழாது பெற்றவரைக் காக்கும் உள்ளங்களினால்
பெற்றவர்
கவலைகள் அழிந்து இதயம் அமைதி பெறுவார்.

15-12-2007.
குறிஞ்சிப் பூவல்ல பெற்றவர் அன்பு.
நிறைந்து மலரும் மல்லிகையாக
முல்லையாகத் தினம் விரியுமன்பு.
வாழ்காலம் முழுதும் பெற்றோரன்பால்
இருபகுதியாரும் உயர்ந்து வாழ்ந்து
உயர் ரோசா மலராக அவரன்பைத்
தகவுடன் போற்றிப் பேணுவோம்.

## அறுகம்புல்லாய்ப் பரந்தவள்



புல்லாங்குழலின் இசையில் மயங்கினாய்.
எல்லா இசையும் மகிழ்ந்து கேட்பாய்,
வஞ்சக நெஞ்சம் கொஞ்சமே இல்லா கொஞ்சிடும் மனமுடை
அன்புள்ள அம்மா.

ஆலம் விழுதாய் மனதில் ஊன்றியவள்,
அறுகம் புல்லாய் பரந்து படர்ந்தவள்.
உருகும் நெய்யாய் எனையாக்குகிறாள்.
அவளருமை நினைவால் மகிழ்வைத் தருகிறாள்.

கருவறையில் எனைக் காத்தது போலவே
ஒரு பார்வையால் எனை உருவாக்கினாள்.
பிழையென நானும் அதைக் கருதியே
பிணங்கினேன் அவளுடன் கோபமாகினேன்.

என் அறியாப் பிழையும், அவசரப் பிழையும்
பெரிதாய் எண்ணிப் புலம்பாத அம்மா
நெஞ்சில் நிறைந்து நினைவில் கலந்தவள்.
பஞ்சாய் எனையேந்திக் கொஞ்சிய அம்மா.

(ரி.ஆர்.ரி தமிழ் அலையில் என்னால் வாசிக்கப்பட்டது.
இலண்டன் தமிழ் வானொலியில் 12-6-2004ல் அறிவிப்பாளர்
சாயிபா இசையமைத்துப் பாடினார்.

தமிழ் ஆத்தேர்ஸ் இணையத்தளத்திலும் பிரசுரமானது.)

# பெற்றோர் மாட்சி



21-10-2007.
இதந்தரும் தாலாட்டாக எம்மோடு சுந்தரத்தமிழை
ஒட்டவைத்தனர் பெற்றோர்.
அந்தரத்திலின்று தமிழ் இங்கு.
மந்திரம் மாயமாய்க் காணாமற் போகாது
நிரந்தரமாய் வேர்த்தமிழை வாழ்வியுங்கள்.
நிம்மதியானது, பெற்றவர் போன்றதே தமிழும்.

23-12-2007.
பொத்தி எமை வளர்க்கும் பெற்றவர்கள்
எத்தனை எண்ணிக்கையென்று பார்ப்பதில்லை.
முத்தம் தரும் எத்தனம் அன்பின் மிகுதி.
வித்தகமாய் எம்மை வளர்த்து முன்னேற்றலே
மொத்தமான அவர் நன்நோக்கம்.
பின்னடைவற்ற சிந்தனையுடையதே
அவர்கள் மன முற்றம்.

6-4-2008.
கற்தூண் போன்ற எமது சுயத்தை
வெற்றியுடன் கொண்டு செல்லப்

பற்றிய துணிவு பெற்றவர் தந்தது.
இற்றுவிடாத தன்னம்பிக்கை என்றும்
வற்றாது இருக்கும் வரை கொற்றமாய் அவர்கள் துணை
நிற்கிறது எம்முள் உயிருள்ளவரை.

12-1-2008.
இயற்கை தந்த உறவு பெற்றோர்.
செயற்கையில் உறவெனப் பலர் தொற்றுவார்.
மயக்கமும் தந்து மாயமும் செய்வார்.
வியக்கும் உறவான பெற்றவர் பாசமே தயக்கம் காட்டாது தனியே துடிப்பது.
தவறிடாது அவரைப்போற்றி நன்கு வாழ்வோம்.

8-3-2008.
சுகங்களின் கைப்படுபொருள்
சுகமான எம் பெற்றவர் ஆதரவு.
தேகம் வளர்த்து, முகம் மலர்த்தி,
அகத்தில் வேரோடி நிறைவு தரும்
சுகத்தை ஒதுக்கித் தள்ளாதீர்!
அணைப்பதால் சுகங்கள் ஆயிரம், ஆயிரம்.

15-3-2008.
கேள்வியில்லாத ஏற்றுக் கொள்ளல்.
கேடு இல்லாது வாழ்வில் பெறுதல்.
கேந்திரமாகிப் பெற்றவர் புத்திமதிகள்
கோடு போட்டு எம்மை வாழவைக்கிறது.
கோணல் மாணலான கோட்டை நாடினால்
பிழையாகிறது வாழ்வின் பதில்.

# எம்மை ஆக்கியவர்



நாங்கள் பெற்றோர் என்ற கொடிக்காலில் பாங்காகச் சுற்றி வளர்ந்த கொடி மலர்கள். தேங்கிய அன்பில் தீதும் நன்றும் அறிந்தோம். எங்கும் இவ்வுறவின் சிறப்பான அடித்தளம் அமைந்தால் பூங்காவனமான உறவமையும். எங்கும் எப்போதும் பேதமற்றது பெற்றோரின் அன்பும், ஆதரவும்.

எண்ணத்தில் ஒரு சுகம் தருவது பெற்றவர் சொல்லும் இன்ப மொழிகள். அவர்கள் அன்புச் செயல்கள். அச்சுறுத்தல், பயமுறுத்தலின் தாக்கங்கள் அதிக நன்மை தருவதில்லை. நன்மையான எண்ணத்தை எண்ணி அதன் சுகமான நற்பாதையில் நடப்போம்.

மனநிறைவோடு தான் பெற்றவர் எம்மை வளர்க்கிறார். மனம் நிறைந்து பிள்ளைகள் இதை ஏற்றக் கொள்வதில்லை. மனநிறைவோடு பிள்ளைகள் இதை ஏற்றுக் கொள்வதில் தான் பெற்றவர் நிறைவு தங்கியுள்ளது.

3-4-2004.

தேவையைக் குறிப்பாலுணர்ந்து, சேவையினை உவந்து செய்து பூவுலகில் என்னைப் பாவையாக்கினாய். உன் பூரண சேவையின் சிறப்பிற்கு உனக்காகப் பூரிப்புடன் சமர்ப்பிக்கிறேன் பூவை என் கவிப்பூவை அம்மா.

அன்னை எனும் பெயரோடு நீயே தென்னையாய் உயர்கிறாயே! என்னை உலகினுக்குத் தந்து, கண்ணாய் கருதி நீயேந்தி, வண்ணமாய் வாழவைத்தாய் அன்னையே உனக்கு நன்றி!

2-10-2004.

உன்னைக் காணும் போதெல்லாம் உருகியதே என் நெஞ்சம். பனையளவான உன் சேவைகளையெல்லாம் பதமாக அனுப வித்தது கொஞ்சமோ! நினைத்து நினைத்து உருகுவ தல்லாமல் அம்மா! அதை மறக்குமோ என் நெஞ்சம்.

3-10-2004.

பூவாய் முகர்ந்து பூப்போல காத்தாயெமை. பாராட்டி வளர்த்தாய்! தரணியில் நீ பாவை விளக்காய் என் நெஞ்சில் பரந்து ஒளிர்கிறாயம்மா!

27-8-2005.

குழந்தைப் பருவத்தில் பெற்றவர் வழங்கும் அதிகார நிலை புழங்கும் அடக்கு முறை, குழந்தை மனதில் புழுக்கம் உருவாக்கி, அழுக்குப் படிய வைத்துக் கிருமிகளை உள்ளத்தில் நிறைத்து விடும். குழந்தை பெரியவரானதும் உறைந்த கிருமிநிலை உயிர்த்து தனது செயற்பாட்டை ஆரம்பித்துவிடும். அத்துடன் பெற்றோரின் வாழ்க்கை முறையும் குழந்தையின் மன வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கிறது.

பாரில் பெற்றவர் அன்பு தூரிலிருந்து நாம் பெறும் பொக்கிசம். யாரும் ஈடு செய்ய முடியாத பாசம். வேரினைக் காத்தலும், ஊரிலும் சிறந்து வாழ்தலும், அனைவரின் கடனென அனைவரையும் வாழ்த்துகிறேன்.

# வானுயர வாழ்வோம்



17, 24-3-2007.

வானுயரமாய் எம் மனதில் பெற்றவர் தேனின் தித்திப்பாய் தினம் இனிக்கிறார்.

காலையில் எழுந்து கடமைகள் தொடங்கி கணவன், பிள்ளை, குடும்பமாய் வாழ்வு.

கருத்துகள் கூறி கருமம் ஆற்றும்
கச்சேரிப் பெண்ணாய் தாய் இன்று.
கடக்கும் பாதையில் மாற்றம் இன்று.
நோக்கம் மட்டும் தினமும் ஒன்றே

4-3-2007.

சேவல் கூவ விழித்துத் தூசிபடாது எம்மைக் காவல் காத்துக் கண்ணியம் ஊட்டினார்கள்.

ஆவல் நிறைந்து எம்மை உயர்த்தினார்கள்.
காத்தல் தெய்வங்களாம் எம் பெற்றவர்களின்
வயோதிபக் காலத்தில் அவர்களுக்கு நிம்மதி கொடுப்பதான கடமையை மனிதர் மறக்கலாகாது.

6-5-2007.

பால கால அனுபவங்கள் அற்புத பொக்கிசங்கள்.
அடியெடுத்து, தடுக்கி விழுந்து, கடித்து
கண்ணீர் விடும் போதும் கருணையாய்
அணைத்த பெற்றவர் பாசம் உலகில் திடமாக நிற்கும் பாதப் பிடிப்பிற்கு அற்புதமானது.

7-4-2007.
ஏக்க வெயிலில் தவிக்கும் உயிர்களைக் காக்கும் குடை நிழலாகப் பரந்து விரிந்து
காலத்திலும் ஆனந்தம் அளிக்கிறார் பெற்றவர்.
பெற்றவர், பிள்ளைகளின் நோக்கம் நிறைவேறினால்
இவ்வுலகு அன்புத் தோட்டம் தான்.

1-4.2007.
அம்மா என்ற முதல் வார்த்தையில்
அன்பும் அகிலமும் என் கண்ணில்.
அகரமும் அறிவும் அணைத்தது என்னை.
அறிவால் இணைந்து அருகில் துணையாக
ஆதரவாக என்றும் அப்பாவும் என்னோடு.

3-12-2006.
உலகெலாம் உயிர் நனைத்து
வலம் வந்து வளம் பெருக்கும்
பலமுடைய பெற்றோர் அன்பெனும் பூமெத்தையின் சுகம் அறிவோர்
பூவாக அவர் மனதையும் என்றும்
உணர்ந்து போற்ற வேண்டும்.

25-11-2006.
நினைவுகள் உள்ளவரை பெற்றவர் கனவுகள் தொடரும். கடமையாகக் கனவுகளை பிள்ளைகள் நிறைவேற்றுதல் கனமான கடனாகிறது. பிள்ளைகள்
கனவையும் பெற்றவர் ஆதரித்துக்
கைகொடுக்கும் கடன் வாழ்வுள்ளவரை உண்டு.

# பெற்றவர் மாட்சி வரிகள்



14-1-2007.
உதிரத்தில் உதித்த வாரிசுகள் உதட்டில் சதிராடட்டும் சரளமாய் ஆதித் தமிழ். கதிரவன் கதிராய்ப் பொங்கட்டும் தமிழ். பதியாம் நம் தாய் மண்ணில் அமைதி புதிய வருடத்தில் பொங்கிப் பொலியட்டும். கொதிக்கும் மனங்கள் அமைதியில் பொங்கட்டும்.

21-1-2007.
அனுபவங்கள் பொன் பெறும். அனுராகமான பெற்றவருடனான அனுபந்தம் இன்பச் சுரங்கம். அனுதினம் அதையே எம் பிள்ளைகளுக்கும் அள்ளிக் கொடுத்தல் ஆரோக்கியமே!.

3-3-2007.
எப்பொழுதும் பெற்றவர் அன்பு அமுததாரை. தப்பின்றி வாழ எப்படி வைப்பபடி இருப்பதென்று செப்பமாய்க் கூறிப் பாசமழையில் நனைத்த அப்பாவும், அம்மாவும் மனதினுள் எப்பொழுதும். எப்பொழுதும்.

25-3-2007.
செல்வம் குவிவது போன்றது செல்வோமென விலகாத உறவு. நல்ல பெற்றவர் உறவு. வெல்வோம் வாழ்க்கையை என்று நல்ல பிள்ளைகளாய் நாம் வாழ்தலால் நாளும் மகிழ்வதும் அவர்களே.

23-6-2007.
அற்புதம் உலகில் எம்மில் பற்றான
பெற்றவர் முதலாவதாகவும், அவர்
வற்றாத அன்பு, ஆதரவு பின்னாகவும்
ஊற்றாக வாழ்வின் இறுதிவரையோர் ஆறுதல்

24-6.2007.
சுயநலமுடைய சுவடு பதிப்பவர்,
நியமம்(விதி) என்று கடமையாய், யாகம் போல் தம் வாழ்வைத் தியாகம் செய்தவர்கள் பெற்றவர்.
இத்தயாள குணம் எமக்கு வந்தால் வியப்புடன் அமையும் எம் வாழ்வு.

2-12-2006.
பாசம் பெற்றவர் நேசம்
பொன் எழில் நிகரொத்தது.
பூம்பொழிலான அவர் பாசம்
பேதம் காட்டாத நந்தவனம்.
வான் எழில் நிகரான அன்பை
தினம் பொழிவார் யாரென தவிக்கிறோம்.

# பெற்றோர் மாட்சி



சக்தி, மகாசக்தி நிறைந்தது தாயன்பு.
பெற்றவரின் அன்பை அள்ளிக் கொண்ட பிள்ளையின் முகக் களை மிக பிரகாசமாயிருக்கும். அதன் செயல்களில் அமைதி, நிதானம் கூர்மையிருக்கும். பெற்றவர் அன்பை ஆதரவை எட்ட முடியாத பிள்ளை களைத்து, சோர்ந்து செயற்படச் சக்தியின்றி காணப்படும். முகத்தின் ஏக்கக் களை பார்வையில் புலப்படும்.

4-9-2004.
நெஞ்சில் பால் வார்க்கும் பிள்ளையைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். நெஞ்சில் விடம் ஊற்றும் பிள்ளைகளைப் பெற்றவர்கள் துரதிஷ்டசாலிகள்.
நினைவிலும், கனவிலும் பிள்ளைகள் நினைவு.
வாழ்விலும், தாழ்விலும் பிள்ளைகள் நினைவு.
அது பெற்றவர் மனது.

5-9-2004.
மனிதனின் கொடுமைகளை, குழப்படிகளை ஆண்டவன் தாங்குவது போல, பிள்ளைகளின் குழப்படிகளை கொடுமைகளைப் பெற்றோர் பொறுக்கின்றனர். பல வகையில் இவர்களும் ஆண்டவர்கள் தான்.

பரபரப்பான, சுமையான, நெருக்கடியான உலகில் நாம் தயாராக, உலகில் உரிமையுடன் ஊன்றிட தேவையான பற்றுக்கோடு என்ற அன்பு பெற்றவர் அன்பு தான்.

அன்பென்ற சொல்லெடுத்து அகம் நிறைக்கும் அமிர்த சஞ்சீவி. பாசமென்ற மழை பொழிந்து பாரில் பாக்கியம் தரும் பாசம், மனதில் என்றும் பால் வார்க்கும் அன்பு பெற்றவர் அன்பு தான்.

12-9-2004.
அன்பெனும் நாணயக் கயிறு மாட்டினால் பாலபருவம் எனும் வண்டி சீராக ஓடும். இதன் மதிப்புக்குரிய சாரதிகள் பெற்றோர். கருவில் உயிரின் ஆதாரம் தாயின் தொப்புள் கொடி. அக் கொடியை ஏற்றியவர் தந்தை எனும் பெயராளர். காசினியில் உயிரின் ஆதாரமும் அவர்கள் அன்புக் கொடி தான்.

11-9-2004.
மனித மனக் கோயிலின் மூல விக்கிரகங்கள் பெற்றோர் தான். தாய்மையைத் தவிர உலகில் வேறு எதிலும் கூடுதலான அதிகாரம் பெற முடியாது. ஒரு தாயிற்கு தனது சிறு பிள்ளைகள் மீது முழுமையான அதிகாரம் உள்ளது. அவளது அதிகாரம் அவர்களை உடைக்கவும் முடியும், உருவாக்கவும் முடியும்.

10-12-2006.
மானுடம் நிமிர்த்தும் பெற்றவர் அன்புச் சாரல் ஆற்றலுடைத்து. அதைப் போற்றுதல் பிள்ளைகள் கடன். ஓற்றும் உதடும், ஒரு தொடுகையும் வற்றிடும் போது வேதனை அதிகம்.

9-7-2007.
பிறந்தேன், வளர்ந்தேன், வாழ்ந்தேன் என்றில்லாது பிறப்பு நிறக்க பண்பாக வாழ்ந்து, இறக்க முன்னர் நல்லவை செய்து இறக்கமின்றி வாழ நல்ல மனுசியாக வளர்ந்தேன்.

9-12-2006.

பொன் எழில் நிகரொத்தது பெற்றவர்
அன்பு எழில்(வலிமை). அவரோடணையும் ஆதரவு
பூம்பொழில். தேனாய் அவர்கள்
தினம் பொழிந்த அன்பு முத்தத்து
வான் எழில் நிகரான அன்பு எமைக்காத்தது.
நான் எழிலாய் திரும்பக் கொடுக்க அவர் மனம் பூத்தது.

## அம்மா

**அம்மா.**
அம்மா என்றால் அன்பு
மம்மா மம்மியும் அன்பு.
தெம்மாங்கு இனிமை அம்மா.
தெய்வீகப் பெருமை அம்மா.

அன்புருகி ஆசையாய் பெருகி
இன்பத்தின் எல்லையில் உருவாகி
ஒன்பது மாதம் பொறுத்திருந்து
ஒருயிர் தருபவர் அம்மா.

எல்லையில்லா அன்பு! இதற்கு
இல்லை எதுவும் ஈடு!
நல்ல அம்மா அப்பாயிணைவு
இல்லாண்மை பெருக்கும் உறவு.

வல்லமைப் பெற்றோரால் அமையும்
நல்ல பிள்ளை உருவாக்கம்.
அம்மாவோடு அப்பாவையும் இணைப்போம்.
ஆனந்த உலகைக் காண்போம்.

# அம்மா





பத்து மாதம் கருவாய் வயிற்றிலெமை
மெத்தக் கவனமாய் சுமந்தாயம்மா!
முத்தாய், சத்தாய், தலைமகளாயெனை
பத்திரமாய் நெஞ்சிலும் சுமந்தாய்!

உருகியோடும் பனி ஆறாய்
பெருகும் அன்பு பேராறாய்
பெரும் ஆதரவான கைப்பிடியது.
தந்திட்ட நேசம் அமைதியுடைத்து.

மனம் நிறை அறுசுவையுணவு
குணம் நிறையவளது பண்பு
இனமணைத்து வாழும் கூட்டுறவு
பணக்குறையைச் சமாளிக்கும் சாதுரியம்.

அம்மாவொரு அரசியல்வாதி போல்
அன்பு மந்திரியாய் அப்பாவிற்கு!
இன்ப இல்லற அரசியாயவள்
இனிய முன்மாதிரி எமக்கென்றும்!

# பெற்றோர் மாட்சி



17-11-2007.

சொர்க்கம் என்ற வாழ்வை இனிமையான
வர்க்கமாக்கு என்று பெற்றவரெத்தனை தீர்க்கமாய் எம்மை வளர்த்தார்.
தர்க்கங்களும் தியாகங்களுமாய் வளர்த்தார்.
சொர்க்கம் கையினில் வருமென்று வேர்க்க விறுவிறுக்க நாமும் பாடுபடுகிறோம்.

16-9-2007.

எங்கள் வாழ்வின் கலங்கரை விளக்குகள்
பொங்குமனுபவ. ஆதரவின் அரிச்சுவடி எழுத்துகள்.
மங்காத பாசமுடைய இனிய பெற்றவர்.
பொங்குமன்பின் அட்சய பாத்திரங்கள்.
இங்கிவ்வுலகில் வாழும் பேசும் தெய்வங்கள்.
எங்கும் வியாபித்த இறைவனுக்குச் சமமானவர்கள்.

ஆவணி-2007.
பெற்றோரின் ஆதரவின்றேல்
முற்றாத பிஞ்சு மழலைகள்
சற்றேனும் முன்னேற முடியாது.
வற்றாத அன்பிலும், அனுபவத்திலும்
குற்றாலம் அருவியில் குளிப்பதாய்
பற்றும் நம்பிக்கையில் நாம் குவிப்பது வெற்றிகளையே.

15-9-2007.
துயர்களைத் துரத்தத் துணையானவர்கள்.
துணிவைத் துடுப்பாகத் தர முயன்றவர்கள்.
துருவநட்சத்திரமாக எம் மனதில் உள்ளவர்கள்.
துடிப்புடை எமதுயர்வின் சிந்தனையுடையவர்கள்.
துலக்கமாகக் கூறமுடியும் வேறு யாரது?
துயிலாத கண்ணாகவெமைப் பாதுகாத்த பெற்றோரே.

24-1-2009.
முதியோரான பெற்றவர் தரும் முதிர்ந்த சிந்தனைகளை நாம் மனமுவந்து ஏற்று நடக்கலாம்.
முகமூடியற்ற அனுபவ உரையது.
முன்னுரையாகுமிது பேரக்குழந்தைகளுக்கு.
முதன்மையான வழிகாட்டியுமாகும்.

தை -2009.
பூமியின் வாழ்க்கை. உறவினால்
பூத்துக் குலுங்கக் கிடைத்த பொக்கிஷம்.
பூமி போல் பொறுமையுடையவர் பெற்றோர்.
பூப்போல் அவர்களைப் பேணுங்கள்.
பூமியில் உங்கள் பாதை நிம்மதியில் பூக்கும்.
பூக்குமேயதனால் சிறந்த வாழ்வு அனைவருக்கும்.

## ஏணிப்படியான அன்பு



19-4-2008.

மாணிக்கம் முதலாம் நவமணிகளும், ஆணிப்பொன்னும் கூடக் காணிக்கையாகாது பெற்றவரன்புக்கு. ஏணிப் படியாக இவ்வன்பை எண்ணுவோர், நாணிடத் தேவையில்லை. மானிலத்தில் நாம் உறவாடும் இவர்கள் உயிர்த் தெய்வங்கள்.

"எம்மை உதாசீனம் செய்வோரைப் பொருட் படுத்தாதே. அம்மணமாக அல்ல, நீ ஆயிரம் திறமைகளுடன் இம்மியளவும் தயங்காது தொடர்ந்து முன்னேறு." அம்மா, அப்பாவின் புத்திமதி இது. இம்மட்டும் அப்படியே தொடர்கிறேன். கம்பீரம் எம்மை வந்தடையப் பெற்றவர் ஆசி துணையே. எம்மைப் பெற்றவரை மதித்தால் உரிய சம்பளம் செம்மையாய் வந்து சேரும்.

இயற்கை தந்த உறவு பெற்றோர். செயற்கையில் உறவாகப் பலர் தொற்றுவார். மயக்கமும் தந்து மாயமும் செய்வார். வியக்கும் உறவான பெற்றவர் பாசமே. தயக்கம் காட்டாது தனியே துடிப்பது. தவறிடாது அவரைப் போற்றி நல்வாழ்வு வாழ்வோம்.

விழியோரம் அன்பு கசிய, களிகொள்ளும் பார்வையாய், ஒளிச்சுடராக அன்பு காட்டி வழி காட்டிய பெற்றோரே, வழி வழியாக நீங்கள் தந்த பண்புகளை எழிலாக எடுத்து, ஆயிரம் அனுபவங்கள் பெற்றோம், பெறுவோம். அவரணைப்பில் ஆதரவு துளியும் குறையாது. அவரன்பை ஆராதிக்காத உள்ளங்கள் அவர்களுக்கு அன்பை அள்ளிக் கொடுங்கள். மறுபடி வராது இந்த ஜென்மம்.

கருணை மனம், தென்றல் வீசும் வாசல், அருமையாக அன்போடு பிணைத்து, திருவாக பெற்றொர் ஊட்டிய விடயங்களை நாம் பெரிதாக எடுப்பதில்லை. அமுத வாசலிது. கருமை குணங்களை விலக்கி, அனைவரும் கருணா மூத்தியாய் எம் உள்ளத்தை வளர்ப்போம்.

26-4.2008.

சிறையல்ல உலகு. சிலவற்றைச் செய்யப் பிறந்தாய் என்று நற் பண்பெனும் மறை ஓதி உருவாக்கிய போசகர்கள், இறைவன் தந்த பொக்கிசம் பெற்றவர். முறையாக இதை உணர்ந்து, குறையின்றி அமைக்கும் வாழ்வே வரம்.

27-4-2008.

அழுதவர் அழுகையை நிறுத்தும் . இழுக்கற்ற பாசம் பொழியும், தொழுகைக்குரிய பெற்றவர் விரும்புவது, முழுவதுமான எமது பதில் அன்பைத்தான். மதிப்புடைய பதில் ஆதரவைத்தான். மிதிக்காத அந்த அன்பால் தானே நாம் எழுந்தோம்.

நிலா போன்ற அன்பெனும் ஒளி, உலாவியது பிள்ளைகளுக்காய் பேதமின்றி. பலாச்சுளை போல் இனிக்குமதை, சகோதரர்கள் நாம் குலாவி மகிழ்ந்து உயர்ந்தோம். குறையின்றி அவர்களை இறுதி வரை காப்போம்(காத்தோம்). எம் வாழ்வில் அவர்கள் தானே வானம்.

4-5-2008.

உறவே உலகின் இணைப்புச் சங்கிலி. குறையே இன்றி அதைப் பேணுதல் நிறைவே. உன்னத பெற்றவர் அன்பு வாழ்வில் கறை துடைத்து, உயிரின் கலங்கரை விளக்காகிறது. அறவே விலக்காது பெற்றவரை அணைப்போம். நறவான அவர்கள் உறவு உலகில் உயர்வே! உயர்வே!

17-5-2008.

சொந்தம் கொள்ளும் பெற்றவா, உறவின் சந்தம், அன்பு ஆதரவு எனும் பந்தம், பகிர்தலின் உருவம் தான். அந்தம் வரை தொடர்தலில் தான் உண்டு சொர்க்கம். முந்துவோம். இதைப் பிந்தாமற் பகிர்வோம். வந்திடும் வாழ்வில் நிதமும் சொர்க்கம்.

# பெற்றோர் மாட்சி



18-5.2008.
நிறைவு நிறைந்தது என்பது அங்கு குறைவாயிருக்கும். குறைவற்ற பேராசைக்காரர் எம் இறையான பெற்றோர். தம் பிள்ளைகள் இமயப் புகழ் பெற்றிட இணையில்லா ஆசையு டையோர். இவர்கள் எண்ணம் எம் நடவடிக்கையைச் சீராக்கி நிலைக்க வைக்கிறது.

28-5-2008.
உறவுகளின் தொகுப்பு வாழ்வு. திறவுகோல் இங்கு பெற்றவ ராகிறார். தினம் எம்மை வழி நடத்தி, திகட்டாத உறவுகளை இணைத்து, திறமையாக வாழ்க என்று எம்மைத் திறம்பட நடத்துகிறார்கள், வாழ்வை உறவுகளின் சங்கமமாக்கி.

20-7-2008.
"தூங்கிய பொழுதாக முயற்சியின்றி வாழாதே! ஏங்கிய பொழுதாக இவை போய்விடும்! தீங்கு நீங்க முயற்சி செய்திடு!". பெற்றவரிடம் இருந்து வாங்கிய அறிவுரை ஓங்கி ஒலிப்பதால், சோம்பலை ஒதுக்கி நன்றியைத் தூது விட எழுகிறேன் தூக்கத்திலிருந்து.

18-10-2008.
குழந்தையிலிருந்து எம்மைக் குறையின்றி வளர்க்கும் பெற்றவரின் குறிக்கோள் சீரும் சிறப்புமாகக் குன்றில் எம்மை ஏற்றுதலே. அழவைத்து அவர்களுக்கு ஆக்கினை கொடுத்து அறியாது வளர்கிறோம் நாம். குறைகள் கொடுக்காது அவர்களைக் குனிய விடாது வளர்வோம், நட்சத்திரமாவோம் என்று பெரியவரானதும் எண்ணுகிறோம். அப்போது பெற்றவர் எம்முடன் இல்லை.


2-8-2008.
நித்தமும் முத்தத்துடன் சத்தான மொழிகள் கொத்தாகத் தரும், அன்புப் பெற்றோரின் உத்தம நோக்கத்தை நிறைவேற்றும் விழுதாக, வித்தாகப் பிள்ளைகளை ஆக்குவது சத்தமில்லாத யுத்தமிப் புதிய உலகில்.

9.8.2008.
முத்து பவளமென எம்மைத் தம் சொத்தாக ஏந்திய பெற்றவருக்கு, "தத்தெடுத்தவர்களாக பிள்ளைகளை எண்ணுக"வென்பது, புத்தம் புதிய சேமநல சமூகச் சிந்தனை. எத்தனை பேர் இதில் நீந்திக் கரையேறுவார், எத்தனை பிள்ளைகள் முத்து மாணிக்கம் ஆவார்!

10-8-2008.
தவழ்ந்த மடியில் அவிழ்த்த எண்ணங்களின் நேர்கோட்டில், கவிழ்ந்து விடாது காலத்தைச் செலுத்து என்று மகிழ்ந்து கவனமாக வளர்த்தனர் பெற்றோர். மதித்து அவ்வழி நடத்தல் உயர் வாழ்விற்கு உறுதியுடைய தளராத படி.

16.8.2008.
பக்குவமாய்ப் பேசிப் பழகி, அன்பில் சிக்க வைத்து, பாசத்தைப் பொழிந்து சொக்க வைப்பவர் எமது பெற்றோர். அக்குவேறு ஆணிவேராய் அவ்வன்பு அழிந்திடாது இணைத்து, பல படிகள் உயர நடப்பது மிக்க பொறுப்பான எமது கடன்.

# பெற்றோர் மாட்சி



10-1-2009.
கடமைகள் என்று பணிகளை
உடைமைகள் ஆக்கி இயங்குவதே
மடைமையற்ற வாழ்வென்று பெற்றோர்
வடமெனப் பிடித்தெமை வளர்த்தனர்.
படமாய் அவற்றையழகு படுத்தலே
திடமான சொத்தாம் எம் கடமை.

27-12-2008
எண்ணங்களால் நமக்கு நன்மை சேர்த்து,
திண்ணமாய் பிறருக்கும் தீங்கு செய்யாது,
வண்ணமான சிந்தனை பரவிடு
என்ற சூழலில் வளர்த்து
விண்ணேகிய பெற்றோரின் குணநலன்கள்
தினமும் விரிகிறது மனதில்
வானவில் வண்ணங்களாக.

20-12-2008.
ஊக்கமும் ஆக்க உணர்வுக்கும்
நீக்கமற நான் நினைப்பதுவென் பெற்றோரையே.
நீண்டு தொடர்கிறதிதுவென் பிள்ளைகளுடாக.

ஆக்கமுடன் நாம் நடப்பது எப்போதும்
ஊக்கமாகும் எம் பிள்ளைகளுக்கு.
காக்கும் இச்செயல் எமது நம்பிக்கையை.

6-12-2008.
தித்திப்பான தமிழைப் படிக்க
கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, காரம்
துவர்ப்பாயும் தூண்டினர் பெற்றோர்.
அறுசுவையாகத் தமிழையின்று
அனுபவிக்கிறோம்.

23-11-2008.
பிறந்தேன். பிறந்து சுயமான திறமையில்,
பிறரோடு கலந்த கூட்டிணைவில், நிறம்
பெற்று வாழ வழி காட்டிய சிறந்த
பெற்றவரை எண்ணி, வாழ்வதற்காகவே
நான் வளர்ந்தேன்- உயர்ந்தேன்-
இப்புவியில் பிறந்தேன்.

22-11-2008.
நம்பிக்கை பெற்றவரில் கொண்டு நாமும்,
எம்மை நம்பி மனமிணைத்துப் பெற்றவரும்
வாழ்கிறோம். தம்படி கூட நம்பிக்கையிழந்தால்
தரணி வாழ்வு அர்த்தமின்றிப் போகும்.
தம் வழிகாட்டலில் எம் நம்பிக்கையை
பெற்றவர் வளர்க்க வேண்டும்
சிறந்த தன்னம்பிக்கையாக!

# அன்னைக்காக...



மேகத்தில் மின்னும் நட்சத்திரம் என்
தேகத்தை ஆக்கிய உயிர்ச்சித்திரம் -என் தாகத்தில்
பாலீந்த தாய்ச் சித்திரம்.
ஈகத்தில் நீயொரு உயர் சித்திரம்.

தேவையைக் குறிப்பால் உணர்ந்து
சேவையினை உவந்து செய்து
பூரண சேவையில் தினமும்
பூவுலகில் என்னைப் பாவையாக்கினாய்.

அன்னையென்ற பெயரோடு நீயே
தென்னையாய் உயர்ந்த தாயே
என்னைக் கண்ணாக நீயேந்தி
வண்ணமாய் வாழவைத்தாய் நன்றி.

பூரண உன் சேவைச் சிறப்பிற்கு
பூரிப்பான ஒரு சமர்ப்பணமிது.
பூவை உன் மகளின் கவிப்பூவிது.
சேவை உன் தாய்மைக்குச் சிறப்பிது.

# பரிணாம மந்திரம்

பரிணாம மந்திரம்.
உருகி ஓடும் பனியாறாய்
பெருகும் அன்பு பேராறாய்
தரும் நேசம் அமைதியானது.
பெரும் ஆதரவான கைப்பிடியது.

கருவோடு திருவான பெருமையது.
பருகிடும் பெற்றவர் பாசமது
குருவானது. நாம் பெரும் தருவாக
இருவரும் ஒருமையாய்த் தருவது,

கருவறை தொடங்கிக் கல்லறையீறாக
சில்லறையின்றிப் பெறும் தூயது.
நல்லறமாகவிது வாய்த்திட்டால் வாழ்வு
பல்லறமுடையவொரு பரிணாமமாகும்.

# புரிந்துணர்வு



வெளியுலக முதலுறவு அம்மா
துளியுதிரத் தொடர்புறவு அப்பா.
வழிமுழுதும் இரு உறவும் தப்பாது
மொழியோடு உரு தருமே ஒப்பேது.

முனிவோடு முயன்று நம் தனிமையை
கனிவோடு தவிர்த்திடும் நல் அக்கறையாய்
இனிய உறவாம் உடன் பிறப்புகளை
இணைத்தனரிருவரும் எம்மின்பக் கூட்டுறவை.

உழைப்பு, ஊக்கம், உதிரம் எமக்காய்
உணர்ந்து உவப்பாய் அன்பாய் உதிர்த்தனர்.
உன்னத நற்பெயரை அவருக்காய் உலகில்
உணர்ந்து நாம் உயர்வாய்க் கொடுக்கலாம்.

பெற்றவர் மகிழ்வே பிள்ளைகள் மகிழ்வு
பிள்ளைகள் மகிழ்வே பெற்றவர் மகிழ்வு
என்ப துணர்ந்தால் இருபக்க வாழ்வும்
அன்புலக சொர்க்கமாய் இவ்வுலகில் குவியுமே!

## இன்னுமெந்தன் காதில்

இன்னுமெந்தன் காதிலுங்கள் குரல்
பின்னுகிறது பழைமை வேதமாக!
இன்னுமெந்தன் கனவில் உருவம்
சின்னத்திரை போல் மின்னுகிறது!
இன்னும் நீங்கள் பூவுலகில்
பின்னும் நினைவோடு தானம்மா.



நீங்கள் இல்லையென்று எதற்காக
நானிங்கு கலங்க வேண்டும்!
நீங்களென்றும் என்னுள் தானம்மா
நான் மறந்தாலன்றோ விலகிட
நீங்களென்னை விட்டுப் போகவில்லை.
தேன் நினைவு கனவிலுமென்றும்

பொறுமையாம் பெருமாயுதம் தந்தீர்கள்
பண்பெனும் நடைவண்டியிற் பிடித்து
பக்குவமாய் நடை பயிற்றனீர்கள்
பாரில் நிமிர்ந்துள்ளேன் பெருமையாயின்று.
என் மனிதத்தின் சாவியே
என் அப்பாவுடன் நீங்களுமன்றோ!

விநாயகராய் உங்களைச் சுற்றினேன்
விளக்கமிகு வாழ்வுக்கனி யேந்தினேன்.
அன்னையர் தினமெனவொரு நாளேன்!
குன்றிடாத நினைவுகள் என்றுமே!
நன்றிகள் நவில்வது மென்றுமே
நான் எண்ணுவதும் என்றுமே.

# அம்மாவின் பதினெட்டாம் திதி



ஆராரோ! ஆராரோ! ஆம்மா!
யாராரோ வருவாரே வாழ்வில்
வாராதே அம்மா நீயாக!
சோராதே மனமுன் நினைவாலே!

பதினெட்டாய் வந்த திதியிது
நதியோட்டக் காலங்கள் களன்றது
நிதிப் பெட்டகம் உங்கள் நினைவது
குதியாட்டம் அப்பாவையும் இணைத்து.

எங்களிற்காய் ஓயாது உழைத்து
உங்களிற்காய் ஓய்ந்து தூங்குங்கள்!
திங்களிற்கு அருகில் அப்பாவோடு
திருப்தியாய் தூங்குங்கள் ஆராரோ.

அன்பு முத்தங்கள் ஆராரோ
இன்னும் முத்தங்கள் அப்பாவிற்கும்
என்றும் ஏணியாகும் இருவரன்பும்
நன்றே வழிகாட்டட்டும் ஆராரோ!

நூலல : வேதாவின் கவிதைகள்

ஆசிரியர் : திருமதி. வேதா. இலங்காதிலகம்




வள்ளுவர், பாரதி, கண்ணதாசன் என இறவாப் புகழ் பெற்றவர்களை அட்டையில் வெளியிட்டு, வெளிந்திருக்கிறது வேதாவின் கவிதைகள்.

வெளிநாட்டில் உள்ள குழந்தைகளுக்கு தாயின் பாசத்தைக் கொட்டும் வரியால் 'பாசங்களின் தூரம் கடிதங்களாக தேசங்களின் தூரம் தொலைபேசியாக' என்கிறார். வேதாவின் கவிதைகள் 102 கவிதைகளுடன் 176 பக்கத்தில், 2002ல் அகில இலங்கை கம்பன் கழகம் இ. ஜெயராஜ் • எஸ்.எஸ். குகநாதன்.(அன்று) பிரதம ஆசிரியர் ஈழநாடு. பாரிஸ். இயக்குனர் நாயகம் ரி.ஆர்.ரி தமிழ் ஒளி, தமிழ் அலை (இன்று டான் யாழ் ஒளி) ஆகியோர் உரையுடனும் வெளியானது. நூலகம்.ஓர்க் இணையத்தளத்தில் பிடிஎப். ல் வாசிக்கலாம். மணிமேகலைப் பிரசுர வெளியீடு. இவரின் முதலாவது நூல் இது.



# குழந்தைகள் இளையோர் சிறக்க...

## வேதா இலங்காதிலகம்

(இவரின் இரண்டாவது நூலிது)

இவரால் மொழி பெயர்த்து எழுதப்பட்ட சில கட்டுரைகளைப் படித்தேன். புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் நம் சிறுவர்கள், இளையவர்கள், பெற்றோரின் பொது அறிவு, மொழி அறிவு, பழக்க வழக்கம், சுற்றுச்சூழல், சுகாதாரம், நல்வாழ்வு, கலை, கலாச்சாரம், உளவியல் போன்ற வாழ்வியலுக்கு வேண்டிய நல்ல அரும்பெரும் கருத்துகளை எழுதி இருக்கின்றார். ஒரு குழந்தையை எப்படிப் பெற்றெடுத்தல், வளர்த்தல், கல்வி அறிவூட்டல், நல்ல பிரஜையாக உருவாக்குதல் போன்ற விடயங்களை, விஞ்ஞான பூர்வமாக எழுதியுள்ளார். ஒரு குழந்தையின் மொழி வளர்ச்சி, அறிவியல், உளவியல் வளர்ச்சியைச் சார்ந்து உடல் வளர்ச்சிப் போக்கையும், வெளிக்கொண்டு வந்திருக்கின்றார்.

அணிந்துரை மண் சஞ்சிகை பொறுப்பாசிரியர் வ. சிவராசா, டென்மார்க் பிரபல கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா, கவிதாயினி சுஜாதா போன்ற ஆகியோர் உரையுடனும் அமைந்துள்ளது நூலைக் [illegible] படைப்பு. ஆக வாசிக்க முடியும். 34 மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 100 பக்கங்களில் 2004ல் வெளியானது. திரு. வி. சிறீகந்தராசாவின் உளவியல் நிபுணர் உரையும் இங்கு மெருகு சேர்த்தது.




## உணர்வுப் பூக்கள்

வேதா இலங்காதிலகம் தம்பதி
வெளியீடு மணிமேகலைப் பிரசுரம்.
தம்பதிகளாக இருவரும் இணைந்து
தந்திட்ட நூலிது. வேதாவின்
மூன்றாம் முயற்சி கவிதைகளாய்
முன் பகுதி வேதாவின் அறுபத்தியொன்பதும்
பின் பகுதி நாறுபத்தியொன்பது
அன்புத் துணைவரின் கவிதைகளுமாய்
உணர்வுப் பூக்கள் உலக நந்தவனத்தில்...
2007ல் ஏஜேஞானேந்திரன் ஓய்வு பெற்ற
ஆசிரியர் கவிஞர், கவிஞர், எழுத்தாளர்,
தமிழ் ஆரு (ரமிழ்க்தாக்) இணைபத்தள ,
ஆசிரியர் - யேர்மனிய பூவரசு சஞ்சிகை
ஆசிரியர் இந்து மகேஷ் ஆகியோர்
உரைகளுடன் 160 பக்கங்களுடையது.
வார்ப்பு விமர்சனம் பகுதியிலிருந்து

[illegible]

- என் செல்வராஜா ஊடகவியலாளர் . யூகே



[illegible]

## நூலாசிரியர் பற்றி...



தமிழ் மொழிமீது தீராத காதல் கொண்ட ஒருவரால் மட்டுமே இத்தகைய படைப்பினைச் செய்ய முடியும். தன் நிலத்தின் மீதும், மொழியின் மீதும், தம் மக்களின் மீதும் அதிபேரன்பை வைத்திருக்கும் வேதா இலங்காதிலகம் அவர்கள், இந்நூலை ஒரு தமிழ்க்காதல் மாலையாகத் தொடுத்துள்ளது சிறப்பு.

குழந்தை வளர்ப்பு முறையில் தொடங்கி, ஆண், பெண் உணர்வுகளைச் சமூக அக்கறையுடன் கூறுவதிலும் சுய மதிப்பீடு செய்ய சொல்லித்தரும் கட்டுரைகள் மென்மையாக நம்முள் ஊடுருவிச் செல்கின்றன.

"பயணத்தின்போது" என்ற கட்டுரை நம்மை பாதுகாக்கும். வாழ்க்கைப் பயணத்தில் துணையாக வைத்திருக்க வேண்டிய நூல்களுள் இதுவும் ஒன்று.

ஒரு தேனீயைப் போல அனுபவங்களைத் தேடி கட்டுரை, கவிதை, அனுபவக் குறிப்பாகத் தந்திருக்கும் நற்தாய் வேதா இலங்காதிலகம்.

மீண்டும் பூரித்து உயிர்க்கும் நிலத்தின் புதுவிதை. நம் மொழியும், இன்னும் உன்னால் மீளட்டும் புதுமைப் பெண்ணே. நீ ஏந்திய பேனாவின் கூர்வாள் தமிழ்ச்சந்ததிகளை நல்வழிப்படுத்தும். தொடர்ந்து இலக்கியம் செய்க. உன் எழுதுகோல் எனும் தீப்பந்தம் கீழ்நோக்கிப் பிடிக்க சிந்தனையிலும், சிந்தையிலும் தொடர்ந்து எரியட்டும். "பெற்றோரியலில் சிற்றலைகள்" நூல் தமிழ் ஊரெல்லாம் வாழட்டும்.

பேராசிரியர்
**சு.வசந்தா**
தமிழ்நாடு, இந்தியா.

9 789554 096202
Rs.250/-
VIJAY PRINTING PRESS

வேதா இலங்காதிலகம் பெற்றோரியலில் சிற்றலைகள்

# பெற்றோரிய
# சிற்றலைக



வேதா இலங்காதிலகம்